Registered as a News Paper

பொழிவு: 27
குவிப்பு: 11
பக்கங்கள்: 16
விலை: 40/-
தை: 2022

(ISSN 1800-2641)


# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை මන්නා

THE TAMIL CATHOLIC MONTHLY BY THE DIOCESE OF MANNAR - Kalaiyaruvi, Social Communication Centre, Manna Paper Office, No.202, Talaimannar Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 076-3801841, Email : mannamnrc@gmail.com, Web-www.manna.lk, Fb - Mannar Catholic Media
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 104 / News / 2021"

"ஒரு கூட்டொருங்கியக்கத் திருஅவைக்காக 41வது புதிய ஆண்டுப்பயணம்"

# மன்னார் மறைமாவட்டத்தில் மடுமாதா வைத்தியசாலைக்கான அடிக்கல் நாட்டப்பட்டது





எமது மன்னார் மறைமாவட்டத்திலே எல்லா மக்களுக்கும் மருத்துவ உதவிகளை செய்வதற்காக எம் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரன்பிற்கும் பெரும் மதிப்பிற்கும் உரிய பேரருட்திரு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களின் அயராத முயற்சியினாலே புதியதொரு வைத்தியசாலை உருவாக்கம் பெற்று வருகிறது.

இப் புதிய வைத்தியசாலை Madu madha medical centre என்கின்ற பெயரினால் மன்னார் நகர்ப் பகுதியில் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

→15

## வாழ்த்தி செபிக்கின்றோம்...



தை மாதம் 06ம் திகதி எமது மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் தமது குருத்துவ வாழ்வின் 49ம் ஆண்டு நிறைவை நினைவுகூர்ந்தார். இவரை இறைவன் நல்ல உடல், உள சுகம் கொடுத்து பராமரித்து எமது மறைமாவட்டத்தில் சிறப்பான பணி செய்ய இறைமக்கள், குருக்கள், துறவிகள் நாம் அனைவரும் இணைந்து வாழ்த்தி செபித்து நிற்கின்றோம்.●

## கலையருவி உள்ளக வீதி திறப்பு விழா நிகழ்வு




கடந்த 09.01.2022 அன்று மன்னார் மறைமாவட்ட சமூகதொடர்பு அருட்பணி மையம் கலையருவியின் உள்ளக வீதி திறப்பு விழா, கரோல் போட்டியின் விருதும் சான்றிதழ்களும் வழங்கும் நிகழ்வு, புத்தாக்க போட்டிக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு மற்றும் இந்த ஆண்டிற்கான திருப்பாடுகளின் காட்சி அங்குரார்ப்பணம் செய்தல் நிகழ்வு என்பன நடாத்தப்பெற்றன.

→15

## கண்டி மறைமாவட்டத்திற்கு புதிய ஆயர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்



கண்டி மறைமாவட்ட ஆயராகப் பணியாற்றிய ஆயர் ஜோசப் வியான்னி பெர்னாண்டோ அவர்களின் பணி ஓய்வை ஏற்றுக்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அம்மறைமாவட்டத்திற்கு, சிலாபம் மறைமாவட்ட ஆயராகப் பணியாற்றிவரும் ஆயர் பேரருட் கலாநிதி வலன்ஸ் மென்டிஸ் ஆண்டகை அவர்களை, ஐப்பசி மாதம் 09ம் திகதி சனிக்கிழமையன்று நியமித்துள்ளார்.

1958ம் ஆண்டு கொறலவெல்ல என்ற ஊரில் பிறந்த ஆயர் வலன்ஸ் மென்டிஸ் ஆண்டகை அவர்கள், 1985ம் ஆண்டு அருட்பணியாளராகவும், 2005ம் ஆண்டு சிலாபம் மறைமாவட்ட ஆயராகவும் திருநிலைப்படுத்தப்-பட்டார். பேராதெனிய பல்கலைக் கழகத்தில் முதுகலைபட்டம் பெற்றுள்ள இவர், அப்பல்கலைக்கழகத்தில் மெய்யியல் துறையில், பகுதிநேரப் பேராசிரியராகவும் பணியாற்றியிருக்கிறார். இத்தாலி, ஜேர்மன், இலத்தீன், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் நன்கு புலமை பெற்றிருந்தார். இலங்கையின் தேசிய மெய்யியல் குருத்துவ கல்லூரியின் முதல் இயக்குனராக நியமிக்கப்பட்ட ஆயர் வலன்ஸ் மென்டிஸ் ஆண்டகை அவர்கள், இலங்கை ஆயர் பேரவையின் பல்வேறு பணிக்குழுக்களின் தலைவராகவும் பணியாற்றியிருக்கிறார். 1886ம் ஆண்டு செப்டம்பர் முதலாம் திகதியன்று உருவாக்கப்பட்ட கண்டி மறைமாவட்டத்தில் 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கத்தோலிக்க மக்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.●

"மன்னார் மறைமாவட்டம் வேதசாட்சிகளின் பூமி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

## பதிப்பாசிரியரின் மனப்பொழிவு

கிறிஸ்து இயேசுவிலே அன்பார்ந்த மன்னா வாசகர்களே இறைமக்களே!

மீண்டும் உங்களை மன்னா பத்திரிகையூடாகச் சந்திப்பதிலே மகிழ்ச்சி அடைகின்றேன். தை பிறந்தால் வழிபிறக்கும் என்று சொல்வார்கள் இப்புதிய மாதத்திலே புத்தெளிச்சியோடு புதுப்பொலிவோடு உங்களை சந்தித்து வாழ்த்துக்கள் கூறி நிற்கின்றேன். கடந்த ஆண்டிலே சுமந்து வந்த கஸ்ரங்கள் துன்பங்கள் வேதனை எல்லாவற்றிலும் இறைவன் எங்களை பராமரித்து வந்திருக்கிறார். அதற்கு நன்றி கூறுவோம். இப்புதிய ஆண்டிலே கால்பதித்திருக்கிற வேளையில் நமக்கு நல்லதொரு வெளிச்சத்தை தரவும் எங்களுடைய குடும்பங்களை இறைவன் ஆசீர்வதிக்கவும் நீங்கள் செய்கின்ற செயற்பாடுகள் முயற்சிகளிலே கடவுளுடைய துணை இருக்கவும் உங்களுக்கு ஆசிகூறி நிற்கின்றேன்.

இம்மாதத்திலே நாங்கள் "அன்னை மரியாள் இறைவனின் தாய்" என்கின்ற பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம். அத்தோடு இயேசு ஆண்டவருடைய திருமுழுக்கு பெருவிழாவையும் கொண்டாடுகின்றோம். இந்த நாட்களிலே நாங்கள் அனுபவிக்கின்ற கஸ்ரங்கள், துன்பங்கள், வேதனைகள் எல்லாம் புதிது புதிதாக எங்களுக்கு வந்து கொண்டிருக்கிறது. நாட்டிலே பொருளாதார கஸ்ரங்கள் பொருட்கள் வாங்க முடியாமல் ஏழை மக்கள் தத்தளிக்கின்ற தருணங்கள் அடிப்படை பாவனைக்குரிய பொருட்கள் இல்லாமை இவை எல்லாம் நமது வாழ்வை சீரழிக்கின்றது. ஆகவே இறைமக்களாகிய நீங்கள் அலைக்களிக்கப்பட்டு அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்ற வேளையிலே இந்த மன்னா பத்திரிகை தாங்குகின்ற செய்திகளினூடாக உங்களிற்கு இறைவன் ஆறுதலையும் வழிகாட்டுதலையும் கொடுக்கின்றார். உங்கள் மனதிலே அமைதியை ஏற்படுத்தவும், உங்கள் வாழ்க்கையிலே சுபீட்சத்தை ஏற்படுத்தவும் இந்த மாதம் முழுவதும் நீங்கள் இந்த பத்திரிகையை வாசித்து நன்மை அடையவும் இறைவன் உங்களை இந்த செய்திகளின் ஊடாக கரம்பிடித்து வழிநடத்துகின்றார். அதையிட்டு நீங்கள் மகிழ்ச்சி அடைய வேண்டும்.

சிறப்பாக இந்த மாதம் பிறந்திருக்கிற வேளையிலே இனிவரும் மாதங்களிலே உங்கள் வாழ்க்கையிலே தொழில் துறைகள் ஆசீர் கிடைக்கப்பெற்று, குடும்பத்திலே நிறைவான ஆசீர் கிடைக்கப்பெற்று, நீங்கள் எடுக்கின்ற முயற்சிகள் நல்ல பயனுள்ளவையாக மாறி, உங்கள் குடும்பங்களில் நன்மையானகாரியங்கள் நடைபெற்று பிள்ளைகள் கல்வியிலே சிறந்து விளங்கி நீங்கள் சந்தோசமாக வாழ வாழ்த்தி நிற்கின்றேன். அத்தோடு இவ்வாண்டு நாங்கள் எமது மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 41 ஆண்டுகள் நிறைவை வருகின்ற 29ம் திகதி தைமாதம் கொண்டாடுகின்றோம். ஆகவே எமது மறைமாவட்டத்திற்கு 41 ஆண்டுகாலமாக கடவுள் செய்துவந்த அளப்பெரிய காரியங்களை எண்ணி மகிழ்கின்றோம்.


நீங்களும் இந்த திருப்பலியிலே கலந்துகொண்டு இறையாசீர் பெறுங்கள். வசதி கிடைக்கா விட்டால் நீங்கள் இருக்கின்ற இடத்திலே, ஆலயங்களிலே, உங்கள் வீடுகளிலே இருந்து எமது மறைமாவட்டத்திற்காக செபித்துக்கொள்ளுங்கள். இதனூடாக இறைவனுடைய அருள் எம்முடைய மறைமாவட்டம் முழுவதாக இருக்கவும் எமது மறைமாவட்ட ஆயர், குருக்கள், துறவிகள், இறைமக்கள் யாவரையும் இறைவன் நிறைவாக ஆசீர்வதிக்கவும் நீங்கள் உங்கள் பங்குகளில் இருந்து, வீடுகளில் இருந்து, குடும்ப மற்றும் தனிப்பட்ட சமூக செபத்தினூடாக செபித்துக்கொள்ளுங்கள். தொடர்ந்தும் இந்த நாட்டினுடைய அரசியல், பொருளாதாரம், சமூகம், இனப்பிரச்சனைகள் எல்லாம் வேறுவிதமான முறையிலே எங்களை நகர்த்திக்கொண்டு போகின்ற வேளையிலே கடவுள் எம்மோடு இருக்கிறார் எங்களை வழிநடத்துவார். ஆகவே அனைத்து பிரச்சனைகளிற்கும் விடையாக வருவார். இன்னும் எங்களை ஏங்க வைக்கும் கொரோனா தொற்று வியாதிகளில் இருந்து எங்களுக்கு விடுதலை கொடுப்பார்.


ஆகவே நாங்கள் ஆன்மீக வாஞ்சையோடும், இறைவன் மீது அதிக நம்பிக்கையோடும், நம் குடும்பத்திலே, சமூகத்திலே, பங்கிலே நாங்கள் வாழ்ந்து இறைவனுடைய பிள்ளையாகவே நாங்கள் இந்த ஆண்டிலே பயணிப்போம். இறையாசீர் உங்களோடுகூட இருப்பதாக.

என்றும் கிறிஸ்துவில்
அருட்பணி. ம. செல்வநாதன் பீரிஸ் - மன்னா பதிப்பாசிரியர்

# மன்னார் மறை மாவட்ட பாப்பிறை மறைபரப்பு சபைகளின் நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறோம்..

அருட்தந்தை. சல்வதோர் சவுல்நாதன். இயக்குனர், பாப்பிறை மறைபரப்பு சபைகள், மன்னார் மறைமாவட்டம்.




"சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள்" என்னும் இயேசு கிறிஸ்துவினுடைய அழைப்பை ஏற்று கிறிஸ்துவிடம் சிறுவரை வழி நடத்தும் பணியை செய்யும் அன்பான குருக்களே! துறவிகளே! பெற்றோரே! பெரியோரே! ஆசிரியர்களே! குறிப்பாக திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்களே! உங்களுக்கு எமது நன்றிகளை தெரிவிக்கின்றோம். தொடர்ந்தும் சிறுவர்களை இயேசுவிடம் அழைத்துச் செல்வோம்.

தை மாத இறுதி ஞாயிறு தினமாகிய 30.01.2022 அன்று திருப்பாலத்துவ சபை தினம் கொண்டாடப்படுகின்றது. இத் தினத்துக்கான விசேட கருப்பொருளாக தரப்பட்டிருப்பது! "இறைவனை கண்டதால் நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்". தற்கால சூழ்நிலையில் பெரியவர் முதல் சிறியவர் வரை இவ்வுலக நாட்டங்களில் மகிழ்ச்சியை காண விழைகிறோம். உண்மையில் அது எமக்கு நிலையான நிறைவான மகிழ்ச்சியை பெற்றுத் தராது.

அழிந்து போகும் இவ்வுலக இன்பத்துக்காக சொத்துக்களைச் சேர்த்து மகிழ்ந்து இருப்பதை விடுத்து இறைவனை கண்டுணர்ந்து அவரில் மகிழ்ந்திருப்போம். இதையே நாம் எமது பிள்ளைகளுக்கும் சொல்லிக் கொடுப்போம்.

⇨15

## புனித யோசப்வாஸ் அருட்சகோதரிகள் துறவற சபைக்கு இரண்டு புதிய அருட்சகோதரிகள்



மன்னார் மறைமாவட்டத்தின் புனித யோசப்வாஸ் துறவற சபையினைச் சேர்ந்த அருட்சகோதரி அ. அரிய செலஸ்ரீனா மன்னார் மறைமாவட்டம் தேவன்பிட்டி புனித சவேரியார் ஆலயத்தைச் சேர்ந்தவர். பி. மேரி லொஜோலான யாழ் மறைமாவட்டம் வலைப்பாடு பங்கின் புனித அன்னம்மாள் ஆலயத்தைச் சேர்ந்தவர்.

இவர்கள் கடந்த 13.01.2022 அன்று இச் சபையின் ஸ்தாபகரும் மன்னார் மறைமாவட்ட ஆயருமான அதி வந்தனைக்குரிய ஆயர் தந்தை பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மற்றும் இச்சபையின் பிராந்திய தலைவி அருட்சகோதரி அந்தோனி மரிய பிறேமா ஆகியோர் முன்னிலையில் தமது அர்ப்பணத்தை கொடுத்துள்ளார்கள். தேவன்பிட்டி பங்கின் புனித சவேரியார் ஆலயத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்ற இந்நிகழ்விலே பல அருட்பணியாளர்களும் இருபால் துறவிகளும் இறைமக்களும் கலந்து கொண்டிருந்தனர் என்பதும் குறிப்பிடதக்கது.●

## அன்பின் சகோதரிகள் சபைக்கு புதிய தலைமைத்துவம்



"என் ஆன்மா ஆண்டவரை ஏற்றிப் போற்றுகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து என்உள்ளம் மகிழ்வடைகின்றது." தந்தையாம் இறைவனின் ஆசிரோடு, இறை இயேசுவின் குரலுக்கு செவி கொடுத்து. இயேசு மரியின் அன்பின் சகோதரிகள் சபையை உருவாக்கிய அருட்தந்தை . பீற்றர் யோசப் ற்றிஸ்ட், அவர்களின் முன் உதாரணமான வாழ்வைப் பின்பற்றி இலங்கையிலே கால் பதித்து 125 ஆண்டு நிறைவை மகிழ்வுடனும், நன்றியுணர்வுடனும் கொண்டாடிய அன்பின் சகோதரிகள் சபைக்கு புதிதாக மாகாணத் தலைவியும், ஆலோசகர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அவ்வகையில் அருட்சகோதரி. பற்சி நேசமலர் பிச்சை (மாகாணத் தலைவி), அருட்சகோதரி. பிரதீபிகா பெரேரா (ஆலோசகர்), அருட்சகோதரி. சந்திரிக்கா லியனாராச்சி (ஆலோசகர்), அருட்சகோதரி. இருதயமலர் கூஞ்ஞு (ஆலோசகர்), அருட்சகோதரி. ஜெனிற்றா றாகல் (ஆலோசகர்) இவர்கள் அனைவரையும் வாழ்த்துவதோடு, கடந்த நான்கு வருடங்களாக பணியாற்றி தமது சேவைக் காலத்தை நிறைவு செய்யும் அருட்சகோதரிகளுக்கு நன்றியும், வாழ்த்துக்களும், செபங்களும் கூறி நிற்கின்றோம். அனைவரின் சேவைகள் தொடர எம் இதய நல்வாழ்த்துக்கள்.●

## கலையருவியின் தவக்கால நிகழ்ச்சித் திட்டங்கள்

மன்னார் மறைமாவட்ட சமூக தொடர்பு ஆணைக்குழு, கலையருவி ஏற்பாட்டில் தவக்கால வியாகுலப் பிரசங்கம் மற்றும் ஒப்பாரி போட்டிகள் வருகின்ற 05.03.2022 அன்று கலையருவியில் நடைபெறவுள்ளது. அனைத்து பங்கு தந்தையர்களுக்கும் விண்ணப்ப படிவம் சில அனுப்பி வைக்கப்படும். அதனை நிழல் பிரதி எடுப்பதன் மூலம் போட்டியாளர்கள் பயன்படுத்தி கொள்ளலாம். பங்குத்தந்தையின் உறுதிப்படுத்துதல் அவசியம்.

போட்டி நிபந்தனைகள்

- மூன்று பிரிவுகள்
  - 40 வயதிற்கு மேல்,
  - 20 வயதிற்கு மேல்,
  - 15 வயதிற்கு மேல்

நடுவர்களால் சீட்டு குலுக்கப்பட்டு பாடுகின்ற குறிப்பிடங்கள் தெரிவு செய்யப்படும். சுருதி, தாளம், உச்சரிப்பு, குரல் என்பன கருத்தில் கொள்ளப்படும். பின்னணி இசை வழங்கப்பட மாட்டாது. பரிசளிப்பு நாளில் வெற்றி பெறுபவர்களுக்கு நினைவுச்சின்னம் வழங்கப்படும்.●

## மறைவாழ்வுக் கல்விப் பணியாளர்களுக்கான மூன்று மாத வதிவிடப் பயிற்சி

மறைவாழ்வுக் கல்விப் பணியாளர்களுக்கான மூன்று மாத வதிவிடப் பயிற்சி 20.07.22 புதன்கிழமை தொடக்கம் 23.10.2022 ஞாயிற்றுக்கிழமை மன்னார் மறைகல்வி நிலையத்தில் நடைபெறும். எனவே பங்கில் பணியாற்றும் மறைவாழ்வுக் கல்விப் பணியாளர்களின் அனைத்து வினைத் திறன்களையும் மேம்படுத்தி பங்கு மறைவாழ்வுக் கல்வி தரத்தை உயர்த்த முன்னெடுத்துச் செல்லப்படவிருக்கும் இப் பயிற்சிக்கு விரைவாக பங்கிலிருந்தும் மறைவாழ்வுக் கல்விப் பணியாளர்களை அனுப்பி வைக்கும்படி மறைகல்வி நிலைய இயக்குனர் அருட்பணி. அந்தோனிதாஸ் டலிமா அடிகளார் கேட்டுக்கொள்கின்றார்.●

## பிரான்சிஸ்கன் சபை அருட்சகோதரி முதலாவது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினார்



யோசவ்வாஸ்நகர் பங்கு திரு.திருமதி வோல்டஸ் பேடினன்ற் மற்றும் டெமேறியா ஆகியோரின் புதல்வி அருட்சகோதரி பேடினற் டிலைக்சினி அவர்கள் தமது முதலாவது வாக்குத்தத்தத்தை 08.01.2022 சனிக்கிழமை அன்று இவர் பிரான்சிஸ்குவின் மரியாயின் மறைபரப்பு சபையில் இணைந்து நிறைவேற்றினார். இறைபணியில் இவர் இணைந்து நற்சுகத்துடன் அருட்பணியாற்ற வாழ்த்தி நிற்கின்றோம்.●

## திருப்பாடுகளின் திருக்காட்சி ஆற்றுகை

திருப்பாடுகளின் காட்சி இவ்வருடமும் நடைபெறவுள்ளதால் உங்கள் அனைவரினதும் செபங்களையும் உதவிகளையும் எதிர்பார்க்கின்றோம். பங்குதந்தையர்கள் கலைஞர்களை ஊக்கப்படுத்தவும் பங்கிலே கலையார்வம் உள்ளவர்களின் பெயர் விபரங்களையும், தொலைபேசி இலக்கங்களையும் எமக்கு அனுப்பி வைக்கவும். தவக்காலத்தின் 6ம் கிழமை திங்கள் மற்றும் செவ்வாய் கிழமைகளில் திருப்பாடுகளின் திருக்காட்சியை அரங்கேற்ற உத்தேசித்துள்ளோம். ஆகவே உங்கள் உதவிகளையும் ஒத்தாசைகளையும் எதிர்பார்த்து நிற்கின்றோம். இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப்பு ஆகிய மறையுண்மைகளை ஆழமாக தியானிக்க இந் நிகழ்வு பெரிதும் உதவி செய்கின்றது. ஆகவே அனைவரையும் இதிலே கலந்து கொள்ள அன்போடு அழைக்கின்றோம்.●

### மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம் :

வங்கியின் பெயர்
Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர்
The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம்
S/A No. 020020029782

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்ட செய்திகள்

# சிறுத்தோப்பு புனித அந்தோனியார் ஆலய அபிஷேக விழா





புதுமைகள் நிறைந்த சிறுத்தோப்பு புனித அந்தோனியார் ஆலயம் 200 வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்தது. 1867.12.12 ம் திகதி அரசாங்க கச்சேரியில் பதிவு செய்யப்பட்டது. இப்புதிய ஆலயத்திற்கு முன்னாள் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களின் அனுமதியுடன் பங்குத்தந்தை S.V அவிதப்பர் அடிகளார் அவர்களால் 19.05.2013ல் அடிக்கல் வைக்கப்பட்டது. முதல் பங்குத்தந்தையாக அருட்பணி L. றொனிஸ்நிமல்வாஸ் அடிகளார் அவர்களினால் ஒரு பகுதி வேலைகள் செய்யப்பட்டன. தற்போதைய பங்குத்தந்தை அருட்பணி S. அன்ரன் யோசப் அடிகளார் அவர்களின் அயராத கடும் முயற்சியினாலும், பங்குமக்களின் ஒத்துழைப்போடும் முழு வேலைகளும் நிறைவு பெற்று ஆலயம் புது பொலிவுடன் காட்சி அளிக்கின்றது.

⇨15

## புனித யோசவ்வாஸ் இறையியல் கல்லூரி புதிய கல்வி ஆண்டின் ஆரம்ப நிகழ்வு



மன்னார் மறைமாவட்ட புனித யோசவ்வாஸ் இறையியல் கல்லூரியினுடைய புதிய கல்வி ஆண்டு கடந்த தை 2022 காலை 9 மணிக்கு மன்னார் மறைக்கோட்ட முதல்வரும் பேராலய பங்குத்தந்தையுமான பெரும் மதிப்புக்குரிய அருட்பணி அகஸ்ரீன் புஸ்பராஜ் அடிகளார் தலைமையில் குருக்கள் சகிதம் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு இக்கல்வி ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்விலே யோசவ் வாஸ் இறையியல் கல்லூரி இயக்குனர் அருட்பணி கிறிஸ்து ரூபன் பெர்ணாண்டோ அடிகளார், விரிவுரையாளர் அருட்பணி அருள்ராஜ் குரூஸ் அடிகளாரும் அருட்பணி கிருசாந் அடிகளாரும் பள்ளிமுனை பங்குத்தந்தை அருட்பணி மரியதாசன் சீமான் அடிகளாரும் இறையியல் கல்லூரியினுடைய கடந்த ஆண்டு மாணவர்களும் புதிய நுழைவு ஆண்டு மாணவர்களும், பிரமுகர்களும் அருட்சகோதரர்கள் அருட்சகோதரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. ●

## வவுனியா இறம்பைக்குளம் மகளிர் தேசியப் பாடசாலையின் 2019ம், 2020ம் ஆண்டிற்கான வருடாந்த பரிசளிப்பு விழா




08-01-2022 அன்று காலை 9:00 மணியளவில் பாடசாலையின் அக்குவைனஸ் கேட்போர் கூடத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய பேரருட் கலாநிதி இம்மனுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களை வரவேற்கும் முகமாக ஆயர் தந்தையுடன் ஆசிரியர்கள் அறிமுகமாகி விருந்தினர்கள் அழைக்கப்பட்டதுடன் நிகழ்வுகள் ஆரம்பமானது. ஆரம்ப நிகழ்வாக இறைவணக்கமும், மங்கள விளக்கேற்றல் நிகழ்வும் நடைபெற்றது.

மேலும் அமரத்துவம் அடைந்த பாடசாலையின் முன்னால் அதிபர் அமரர் அருட்சகோதரி ஜெயநாயகி செபமாலை அவர்களை நினைவு கூர்ந்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது, தொடர்ந்து நிகழ்வாக கீழ்ப்பிரிவு மாணவிகளினால் வரவேற்பு பாடல் இடம்பெற்றது, அடுத்து விருந்தினர்களை வரவேற்கும் முகமாக வரவேற்புரையினை உப அதிபர் திரு.மு.அன்ரனி ஜெயானந் அவர்களினால் முன்வைக்கப்பட்டது.

⇨15

## சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் MARDAP நிறுவனத்தினால் கொண்டாடப்பட்டது



எமது மன்னார் மறைமாவட்டத்தில் விசேட தேவையுடைய நபர்களுக்காக திறமையாக சேவையாற்றி வருகின்ற மார்டப் (MARDAP) நிறுவகத்தினால் கடந்த வருடம் மார்கழி மாதம் 03ம் திகதி சர்வதேச மாற்று வலுவுடையோர் தினம் கொண்டாடப்பட்டது. அங்கே சிறுவர்கள் பெரியவர்கள் எல்லோரும் இணைந்து மாற்று வலுவுடையோராக சந்தோசமாக மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகின்றார்கள்.

சங்கைக்குரிய அருட்சகோதரி வசந்தி திருக்குடும்ப கன்னியர் சபை அவர்கள் இந்நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தார்கள். அங்கே பணிபுரிகின்ற ஆசிரியர்கள் பொறுப்பாளர்கள் பிள்ளைகளோடு இணைந்து சகல நிகழ்வுகளையும் சிறப்பான முறையிலே அர்ப்பணிப்போடு ஒழுங்குபடுத்தி இருந்தார்கள். இந்நிகழ்விலே மன்னார் மாவட்ட பிரதேச செயலாளர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. ●

## புனித சூசையப்பரின் 150 வது யூபிலி ஆண்டு நிறைவு



புனித சூசையப்பரின் 150வது யூபிலி ஆண்டு நிறைவு நிகழ்வினை நினைவு கூறும் வகையில் வஞ்சியன் குளம் பங்கின் துணை ஆலயமான புதுக்கமம் புனித சூசையப்பர் ஆலயத்தில் 29.12.2021 அன்று பங்குத்தந்தை அருட்பணி டேவிற் அலெக்சாண்டர் சில்வா (பெனோ) அடிகளாரின் தலைமையில் கிராமத்தின் அருட்பணியாளர்களான அருட்பணி S. அன்ரன் (வாழ்வுதய இயக்குனர்) அருட்பணி M.தேவராஜன் அடிகளாரின் ஆலோசனையிலும் புதுக்கமம் புனித சூசையப்பர் ஆலய அருட்பணி பேரவையுடன் இணைந்து ஆலய மக்கள் மற்றும் புதிதாக குருவாக அருட்பொழிவு செய்யப்பட்ட அருட்பணி அ. டனிஸ்ரன் (அமதி) மற்றும் மெதடிஸ்த திருச்சபையின் மன்னார் முருங்கன் சேகரம் சார்பாக சகோதரர் T.அன்புச்செல்வம், மெதடிஸ்த திருச்சபை மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஊரின் ஒருமைப்பாட்டினை வெளிப்படுத்தும் முகமாக புதுக்கமம் கிராம நுழைவாயிலில் அமைக்கப்பட இருக்கின்ற வரவேற்பு சிகரத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும் அதனைத் தொடர்ந்து ஆலயத்தில் திருப்பலியும் புனிதரின் திருச்சுரூப பவனியானது கிராமத்தினை சுற்றி வலம் வந்து நற்கருணை வழிபாட்டினை தொடர்ந்து புனிதரின் செபமும் சுரூப ஆசீர்வாதமும் இடம் பெற்றது.

⇨15

## பேசாலை புனித வெற்றிநாயகி அன்னை ஆலயத்தில் நடைபெற்ற திருச்சுரூப பவனி



பேசாலை புனித வெற்றிநாயகி அன்னை ஆலயத்திலே மூவிராசாக்கள் பட்டணம் என்று அழைக்கப்படுகின்ற பேசாலை புனித வெற்றி அன்னை ஆலயத்தில் வருடாவருடம் நடைபெறுகின்ற முக்கிய நிகழ்வான திருச்சுருப பவனி சிறப்பாக நடைபெற்றது. ஆலயத்திலே திருச்சுரூபம் பவனியாக எடுத்துவரப்பட்டு வழமையாக செல்கின்ற பாதையினூடாக கொண்டுவரப்பட்டு சிறப்பாசீர் வழங்கப்பட்டது. இறைமக்கள் ஆர்வத்தோடும் ஆன்மீக தாக்கத்தோடும் இதிலே கலந்து கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ●

## மடுமாதா சிறிய குருமடத்தில் கொண்டாடப்பட்ட பொங்கல் நிகழ்வுகள்



மன்னார் மறை மாவட்டத்தின் மடுமாதா சிறிய குருமடத்தில் 14.01.2022 அன்று பொங்கல் விழாவானது மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் மடுமாதா சிறிய குருமடத்தின் அதிபர் அருட்பணி கிறிஸ்துநேசன் அடிகளாரும் மற்றும் உதவி அதிபர் அருட்பணி கிருஷாந் அடிகளாரும் 50 சிறிய குருமட மாணவர்களுடன் இணைந்து பொங்கல் பொங்கி திருப்பலியையும் நடாத்தியதுடன் அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் நடாத்தப்பட்டு சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.

சிறப்பாக ஒவ்வொருவருடமும் இப் பொங்கல் விழாவிற்கு அனுசரணை வழங்கும் மதிப்பிற்குரிய ஓய்வுநிலை பொறியியலாளர் திரு. ஜெவ்றி அவர்களுக்கும் இதயம் கனிந்த நன்றிகளை மடுமாதா சிறிய குருமட குடும்பம் தெரிவித்து கொள்கின்றது. ●

## பறப்பாங்கண்டல் அன்பிய பொங்கல் விழா



பறப்பாங்கண்டல் அன்பிய பொங்கல் திருவிழாவானது இம்முறை 17 அன்பியங்கள் இணைந்து அன்பிய பொங்கலாக 17 பொங்கல் பானை வைத்து புனித கார்மேல்அன்னை பங்கு ஆலயத்திலே வெகுசிறப்பாக கொண்டாடப்பட்டது. அனைத்து அன்பியங்களும் இதில் சிறப்பாக பங்கெடுத்ததுடன் சிறப்பு பொங்கலுக்கான பரிசுகளும் வழங்கப்பட்டன. இதில் சிறப்பாக ஈடுபட்ட அன்பியங்களையும் நெறிப்படுத்திய அன்பிய ஊக்குவிப்பாளர்களையும் ஆலய சபைகளையும் பா[illegible] ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைமாவட்ட செய்திகள்

## குருநாகல் IHFC இல் நடைபெற்ற தலைமைத்துவ பயிற்சியும் மாதாந்த தேசிய நிர்வாக சபை கூட்டமும்



இம்மாதம் 7, 8, 9ம் ஆகிய தினங்களில் குருநாகல் IHFC இல் கத்தோலிக்க இளைஞர் யுவதிகளுக்கான தலைமைத்துவ பயிற்சியும் மாதாந்த தேசிய நிர்வாக சபை கூட்டமும் இடம்பெற்றது.

அதிலே 10 மறைமாவட்டங்களை சேர்ந்த இளைஞர் யுவதிகளுடன் மன்னார் மறை மாவட்டத்தை பிரநிதிதுவபடுத்தி 11 இளைஞர் யுவதிகளும் அதற்கு பொறுப்பான இளைஞர் ஆணைக்குழு இயக்குனர் பெரும்மதிப்பிற்குரிய அருட்பணி A. விக்டர் சோசை அடிகளாரும் பங்கு பற்றியிருந்தனர். முதல்நாள் நிகழ்வு வரவேற்பும் சிறிய உரையும் தேசிய நிர்வாக சபை கூட்டமும் இடம்பெற்றது. இரண்டாம் நாள் நிகழ்வானது காலை திருப்பலி தியானம் தலைமைத்துவ பயிற்சி நற்கருணை எழுந்தேற்றம் இசைக் கச்சேரி ஆகியவையும் இடம்பெற்றது.

இறுதி நாள் நிகழ்வாக காலைத் திருப்பலியும் இளைஞர் யுவதிகளை ஒன்றிணைப்பது தொடர்பான கலந்துரையாடல் மற்றும் மதிய விருந்துபசாரத்துடன் நிறைவுபெற்றது. இறுதிநாள் நிகழ்வில் குருநாகல் மறைமாவட்ட ஆயர் ஷரோல் அன்ரனி பெரேரா ஆண்டகை அவர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடதக்கது. ●

## அருட்பணி. தமிழ் நேசன் அடிகளாரின் "மன்னார் மாதோட்டப் புலவர்கள் கலைஞர்கள்" நூல் வெளியீடு



அருட்பணி. தமிழ்நேசன் அடிகளார் எழுதிய "மன்னார் மாதோட்டப் புலவர்கள் - கலைஞர்கள்" என்ற நூலின் வெளியீட்டு விழா கடந்த 16ஆம் திகதி நானாட்டான் புனித டிலாசால் கல்லூரியில் இடம்பெற்றது.

நாட்டுக்கூத்து நாடகங்கள், பாடல்கள் மற்றும் கவிகள் போன்றவற்றை எழுதிய, மன்னார் மாதோட்டத்தில் வாழ்ந்து மறைந்த மற்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் ஐம்பது ஆளுமைகளின் வாழ்வு, வரலாறு படைப்புக்கள் ஆகியவற்றை தமிழ் நேசன் அடிகளார் விரிவாக இந்நூலில் பதிவு செய்துள்ளார்.

550 பக்கங்களைக்கொண்ட ஒரு பெருநூலாக இந்நூல் வெளிவந்துள்ளது. தமிழ் நேசன் அடிகளாரின் இரண்டு வருட உழைப்பின் அறுவடையாக இந்த நூல் அமைந்துள்ளது.

⇨15

# உலகத் திருஅவைச் செய்திகள்

## 2025, யூபிலி ஆண்டின் மையக்கருத்தான "நம்பிக்கையின் திருப்பயணிகள்"



திருப்பீடத்தின் புதிய நற்செய்தி அறிவிப்புப் பணியை மேம்படுத்துவதற்கான அவையின் தலைவர் பேராயர் Rino Fisichella அவர்கள், கடந்த 03.01.2022 திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களைச் சந்தித்துப் பேசியபோது, வரவிருக்கும் 2025ன் யூபிலி ஆண்டிற்கான விருதுவாக்காக ''நம்பிக்கையின் திருப்பயணிகள்'' என்பதை அங்கீகரித்து உள்ளதாக தெரிவித்தார்.

மேலும், 2025ன் யூபிலி ஆண்டு சிறந்த முறையில் தயாரிக்கப்படவேண்டும் என்பதே திருத்தந்தையின் முக்கிய குறிக்கோளாக இருக்கிறது என்பதையும் எடுத்துக்காட்டிய அவர், மையக்கருத்தாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள வார்த்தைகள், ''திருப்பயணங்கள் மற்றும் நம்பிக்கை'' ஆகிய இரண்டும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பாப்பிறைக் காலத்தின் முக்கிய கருப்பொருள்களைக் குறிக்கின்றன என்றும் எடுத்துரைத்தார். இந்த இரண்டு ஆண்டுகளில் செய்யவேண்டிய பணிகள் நிறைய உள்ளன என்றும், அதை முழுமையாகச் செயல்படுத்த, திருத்தந்தையிடமிருந்து மேலான கருத்துகளைத் தான் எதிர்பார்த்துக் காத்திருப்பதாகவும், இருப்பினும் பணிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுவிட்டன என்றும் அவர் கூறினார்.

யூபிலி ஆண்டு என்பது அருளின் ஒரு சிறப்புமிக்க ஆண்டாக அமைகிறது என்றும், இது திருஅவையின் விசுவாசிகளுக்கு முழுமையான மகிழ்ச்சியைப் பெறுவதற்கான வாய்ப்பை வழங்குகிறது என்றும் தெரிவித்த பேராயர் அவர்கள், பாரம்பரியமாக, இது கிறிஸ்மஸ் விழாவிற்குச் சற்று முன்பு தொடங்கி அடுத்த ஆண்டு திருக்காட்சிப் பெருவிழாவன்று நிறைவடைகிறது என்றும் கூறினார். புனித பேதுரு பெருங்கோவிலில் புனிதக் கதவு திறக்கும் வழிபாட்டுடன், புனித யூபிலி ஆண்டை திருத்தந்தை தொடங்கி வைப்பார் என்றும், அதன் பிறகு, புனித யோவான் இலாத்ரன், புனித பவுல், புனித மேரி மேஜர் ஆகிய பெருங்கோவில்களின் புனிதக் கதவுகள் திறக்கப்பட்டு, யூபிலி ஆண்டு நிறைவடையும் வரையிலும் திறந்து வைக்கப்பட்டிருக்கும் என்றும் தெரிவித்தார். ●

## இவ்வாண்டில் திருஅவையில் இடம்பெறவுள்ள — 3 முக்கிய நிகழ்வுகள் —

கோவிட் பெருந்தொற்று இவ்வுலகை தொடர்ந்து அச்சுறுத்திக்கொண்டிருக்கும் வேளையில் இவ்வாண்டில் மூன்று முக்கிய நிகழ்வுகள் உரோம் நகரில் இடம்பெற உள்ளதாக திருஅவை அறிவித்துள்ளது.

2019ம் ஆண்டு அக்டோபர் மாதம் ஜான் ஹென்றி நியூமேன் அவர்களுடன் மேலும் நான்கு பேர் புனிதர்களாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவ்வாண்டு மே மாதம் 15ம் தேதி 7 பேரின் புனிதர் பட்ட அறிவிப்புத் திருப்பலி வத்திக்கானில் இடம்பெற உள்ளது. இப்புனிதர் நிலைக்கு உயர்த்தும் திருநிகழ்வைத் தொடர்ந்து ஜூன் மாதம் 22 முதல் 26 வரை, பத்தாவது உலக குடும்பங்கள் மாநாடு வத்திக்கானில் இடம்பெறும். கோவிட் பெருந்தொற்று காரணமாக ஏறத்தாழ 2000 பேர் மட்டுமே இக்கருத்தரங்கில் கலந்துகொள்வர் எனவும், அதே நாட்களில் இணையதளம் வழியாகவும், மறைமாவட்டங்களிலும் கருத்தரங்குகள் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு திருஅவையில் இடம்பெற உள்ள மூன்றாவது முக்கிய நிகழ்வாக, செப்டம்பர் 4ம் தேதி ''புன்னகையின் திருத்தந்தை'' என அறியப்படும், இறையடியார் திருத்தந்தை முதலாம் யோவான் பவுல் அவர்களை அருளாளராக அறிவிக்கும் திருநிகழ்வும் வத்திக்கானில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ●

## கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்தில் ஒன்றிணைய அழைப்பு



தை மாதம் 18 முதல், 25 வரை திருஅவையில் சிறப்பிக்கப்படும் கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்திற்கு ஆதரவாக, விசுவாசிகள் அனைவரும் தங்கள் வாழ்க்கைப் போராட்டங்களையும் துயர்களையும் இறைவனிடம் காணிக்கை ஆக்குமாறு அழைப்பு விடுத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

வெவ்வேறு பின்னணியையும், பாரம்பரியங்களையும் கிறிஸ்தவ சபைகள் கொண்டிருந்தாலும் முழு ஒன்றிப்பை நோக்கி திருப்பயணியாக நடைபோடும் போது, கிறிஸ்துவின் மீது நாம் பார்வையை பதிக்கும் வேளையில், நாமனைவரும் நம் நோக்கத்தில் ஒன்றிணைய நெருங்கி வருகிறோம் என்பதையும் நினைவூட்டினார் திருத்தந்தை பிரான்சிஸ். உலகம் முழுவதும் சிறப்பிக்கப்படும் கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்தின் இறுதி நாளான தை 25ம் தேதி புனித பவுல் மனம் மாறிய திருவிழா அன்று உரோம் நகரின் புனித பவுல் பெருங்கோவிலில் மாலை செபவழிபாடு நடத்தி இவ்வாண்டின் ஒன்றிப்பு வாரத்தை நிறைவுக்குக் கொண்டு வருவார் திருத்தந்தை பிரான்சிஸ்.

''கிழக்கில் அவரது விண்மீன் எழக் கண்டோம். அவரை வணங்க வந்திருக்கிறோம்'' என்ற வார்த்தைகளைக் கொண்டுள்ள இவ்வாண்டின் கிறிஸ்தவ ஒன்றிப்பு வார தலைப்பு, கிழக்கிலிருந்து மெசியாவை வணங்க வந்த ஞானிகளின் அனுபவத்தைக் குறித்து சிந்தித்து இவ்வொன்றிப்பு வாரத்தின் வெற்றிக்காக உழைக்க அழைப்பு விடுக்கிறது. ●

## எத்தியோப்பியாவில் கைது செய்யப்பட்ட ஏழு அருட்சகோதரிகள் விடுதலை!



எத்தியோப்பியாவில் Tigray புரட்சியாளர்களின் ஆதரவாளர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் காவலர்களால் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்ட 7 துறவற அருட்சகோதரிகள், தற்போது விடுவிக்கப்பட்டுள்ளனர்.

எத்தியோப்பியாவின் Tigray சிறுபான்மை இனத்தவரின் அரசுக்கெதிரான போராட்டங்கள் 2020ம் ஆண்டு நவம்பர் மாதம் ஆரம்பமானதிலிருந்து பலர் கைது செய்யப் பட்டு வருவதன் தொடர்ச்சியாகவே கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 30ம் தேதி 7 அருட்சகோதரிகள் கைது செய்யப்பட்டு, தற்போது தான் விடுவிக்கப்பட்டுள்ளனர். அரசால் கைது செய்யப்பட்ட, வின்சென்ட் டி போல் பிறரன்பு புதல்வியர் சபையைச் சேர்ந்த ஆறு அருட்சகோதரிகளும், Ursuline துறவு சபையைச் சேர்ந்த ஒருவரும் Tigray சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

Tigray இனமக்களிலிருந்து கைது செய்யப்பட்ட மேலும் இரு திருத்தொண்டர்கள், இரு அருட்கன்னியர்கள், மற்றும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் குறித்த எந்தச் செய்தியையும் வெளியிட அரசு மறுத்து வருகிறது.

நவம்பர் மாதம் 5ம் தேதி தலைநகர் Addis Ababaவுக்கு அருகிலுள்ள Gottera பகுதியின் சலேசிய துறவிகள் கல்வி மையத்திலிருந்து கைது செய்யப்பட்ட 17 பேர் பல்வேறு விசாரணைகளுக்குப் பின் நவம்பர் 13ம் திகதி விடுவிக்கப்பட்டனர். ●

**ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்**

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், அழகான எழுத்து வடிவத்தில் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

*-மன்னா நிர்வாகம்-*

## பெரும்புயலால் பாதிக்கப்பட்ட பிலிப்பைன்ஸ் மக்களுக்கு திருத்தந்தை ஆற்றியுள்ள உதவிகள்



பிலிப்பைன்ஸ் நாட்டில் பெரும்புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் போலந்து, பெலாருஸ் நாட்டிற்குமிடையே துயரங்களை அனுபவித்து வரும் புலம்பெயர்ந்தோருக்கும் திருத்தந்தை ஆற்றியுள்ள உதவிகள் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது திருப்பீடத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான அவை. பிலிப்பைன்சின் 11 பகுதிகளில் பெரும் சேதங்களையும், 80 லட்சம் மக்களின் இடப்பெயர்வையும் உருவாக்கிய அண்மை புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில், முதல் தவணையாக ஒருஇலட்சம் டொலர்களை திருத்தந்தை வழங்குவதாக இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. பிலிப்பைன்ஸ் திருப்பீடத் தூதரகம் வழியாக அனுப்பப்படும் இத்தொகை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறைமாவட்டங்கள் வழியாக வழங்கப்படுவதுடன், பல்வேறு வெளிநாட்டு தலத்திருஅவைகளின் உதவியும் தொடரும் என்கிறது ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான இத்திருப்பீட அவை. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மாத புனிதர்கள்

## இறைவனின் அன்னை புனித கன்னி மரியாள்

**– 01.01.2022 –**



கி.பி.431இல் கூட்டப்பட்ட எபேசு நகர்ப் பொதுசங்கம் Theotokos என்ற கிரேக்கச் சொல்லைப் பயன்படுத்தி ‘‘மரியா இறைவனின் தாய்’’ என்று வரையறுத்துக் கூறியது. எபேசு சங்கம் கூடி இந்த முடிவை எடுக்கும் வரை மரியன்னையின் அன்பர்கள் ஆவலே வடிவாக வெளியில் காத்திருந்தனர். இது விசுவாச சத்தியமாக வரையறுக்கப்பட்டவுடன் கூட்டத்தினர் ஆர்ப்பரிப்புப் பேரொலி எழுப்பினர். இரவு நேரம் ஆகிவிட்டதால் சங்கத்தில் பங்கேற்ற ஆயர்களை அவர்கள் தங்கியிருந்த இடத்திற்குத் தீப்பந்தங்களுடனும், மேள தாளத்துடனும் ஊர்வலமாகக் கொண்டு போய்ச் சேர்த்தனர். இதனால் எபேசு நகரம் முழுவதும் ஒளிமயமாகக் காட்சியளித்தது. மரியா இவ்வாறு அன்று மாட்சிப்படுத்தப்பட்டார்.


பொதுசங்கத்தில் அலெக்சாண்டிரியா நகர் ஆயர் சிரில் தான் ஆணித்தரமாக நெஸ்டோரியஸின் தவறை சுட்டிக்காட்டி மரியா இறைவனின் தாய் என்று பறைசாற்றினார்.

1953ஆம் ஆண்டு Fulgens Corona என்ற சுற்றுமடலில் திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் “மரியா இறைவனின் தாய் என்பதால் மட்டுமே இறைவன் இவரை எல்லாவிதமான வரங்களாலும், அருளாசீராலும் அணி செய்யத் திருவுளமானார்” என்கிறார்.

2ஆம் வத்திக்கான் சங்கம் “திருச்சபை” என்ற தலைப்பில் மரியன்னை பற்றி கூறும்போது 12 தடவை “இறைவனின் தாய்” என்று குறிப்பிடுகின்றது. இயேசு மீட்பர் இறை தந்தையின் மீட்புத்திட்டத்தில் முதல் இடம் பெற்றிருந்தது உண்மையாயின் மரியா இறை திட்டத்தில் இரண்டாம் இடம் பெற்றிருந்தார் என்று கூறுவது முற்றிலும் பொருந்தும். ●

## புனித வனத்து அந்தோனியார்

**– 17.01.2022 –**



எகிப்து நாட்டைச் சார்ந்த இத் தவமுனிவரே கிறிஸ்தவத் துறவு வாழ்வுக்கு வித்திட்டவர். பெற்றோரை இழந்த நிலையில் இவர் 18 வயதில் தேவ அழைத்தலை உணர்ந்தார். இவருக்கு உரிமைச் சொத்தாக இருந்த ஒரு தோட்டத்தையும் துறந்துவிட்டு இயேசுவைப் பின்செல்ல உதவியாக இருந்தது என்ன தெரியுமா? ‘‘இயேசுவின் திருதூதர்கள் அனைத்தையும் துறந்தபின் அவரைப் பின் சென்றார்கள் என்ற சொற்களே’’ (மத் 19:21) தம் சகோதரிக்கு மட்டும் ஒரு சிறுதொகையைக் கொடுத்துவிட்டு ஏஞ்சியதை ஏழைகளுக்கு ஈந்தார். பின் துறவற வாழ்வை மேற்கொண்டார். தம் ஊருக்கு அருகிலேயே கடும் உழைப்பு மறைநூலை ஊன்றிப் படித்தல், செபம் இவற்றில் நாள்தோறும் நேரத்தைச் செலவிட்டார். நாளடைவில் ஊரைவிட்டு மிகத் தொலைவிலுள்ள இடத்தைச் தேடிச் சென்றார். அங்கு புனித அத்தனாசியாரின் நண்பரானார். நாளடைவில் பலரும் இவரை அணுகவே ஆங்காங்கே குழுக்களாகத் துறவு வாழ்வை மேற்கொண்டனர். அவ்வப்போது அலெக்சாண்டியா நகருக்குச் சென்று அங்கு வேதகலகத்தில் சாவை எதிர்நோக்கி வாழ்ந்த மறைசாட்சிகளை விசுவாச சத்தியத்தில் உறுதிப்படுத்தினார். புனித அத்தனாசியார் இவரது துறவு வாழ்வைப் பற்றி விரிவாக எழுதியுள்ளார். இந்தக் குறிப்புகளின் பயனாகப் பலரும் பாலை நிலத்திற்கும் காடுகளுக்கும் சென்று வாழ்நாளெல்லாம் தப செப வாழ்வு வாழ்ந்து இறைவனடி சென்றனர். “இவ்வுலக வாழ்வு எத்துணை மின்னல் வேகத்தில் தோன்றி மறைகிறது. ஆனால் நித்தியம் நிலையான பேரின்பம் என்பது எத்துணை மேலானது என்று தியானிப்பது நிறையப் பலன் தருகிறது” என்று இவர் கொடுத்து வந்த மறையுரை புனித அகுஸ்தீனாரை மிகவும் கவர்ந்திழுத்தது. இதை அகஸ்டின் தமது “வெளியீடு” என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

இவர் தமது 105 ஆவது வயதில் செங்கடலுக்கருகில் கி.பி.356ஆம் ஆண்டு கோல்சீம் குன்றில் இறைவனடி சேர்ந்தார்.●

## புனித செபஸ்தியார்

**– 20.01.2022 –**



இவர் பிரான்ஸ் நாட்டினர். இத்தாலி நாட்டில் கல்விப் பயிற்சி பெற்றார். இவரது காலத்தில் கிறிஸ்தவர்கள் வதைக்கப்பட்டனர், கொல்லப்பட்டனர். இத்தகைய சூழ்நிலையிருந்த கிறிஸ்தவர்களுக்கு இவர் பரிவிரக்கம் காட்டினார். ஊக்கம் அளித்தார். இதற்காகவே படையில் சேர்ந்தார். தமது திறமையால் படையில் பதவி உயர்வு பெற்றார். இக்காலத்தில் வேதத்திற்காகச் சிறைப்பட்டுக் கிடந்த மார்க்கஸ், மார்சலீனஸ் என்ற இருவரும் தம் பெற்றோரின் தூண்டுதலால் வேதத்தை மறுதலிக்ககூடும் என்ற சூழ்நிலையை நம் புனிதர் உணர்ந்தார். உடனே இவர் அவ்விருவரையும் அணுகி விசுவாசத்தில் உறுதிப்படுத்தினார். இதன் காரணமாக அவர்கள் தங்கள் குருதியைச் சிந்தும் அளவுக்கு விசுவாசத்தில் நிலைத்திருந்தார்கள். இத்தகைய தொண்டுகளைப் பற்றிக் கேள்வியுற்ற மன்னன் இவரை ஒரு மரத்தில் கட்டி அம்புகளால் எய்து கொல்லக் கட்டளையிட்டான். இவ் வேதனைக்குக் பின் அவர் இறந்திருப்பாரென விட்டுச் சென்றனர். இறை அருளால் இவர் உயிர் பெற்றார். பிறகு அரசனை மீண்டும் அணுகினார். கிறிஸ்தவர்களை வதைக்கக் கூடாதென கூறினார். அப்போது மன்னன் இவரைத் தடியால் அடித்துக் கொல்லக் கட்டளையிட்டான். இவ்வாறு அவர் கிறிஸ்துவுக்குத் தம் குருதியால் சான்று பகர்ந்து உயிர் நீத்தார். ●

## புனித அக்னெஸ்


**– 21.01.2022 –**



இவர் உரோமையில் பட்ரீசியம் எனப்பட்ட உயர்ந்த குலத்தில் தோன்றியவர். 12 வயதிலேயே தம் கன்னிமையை இறைவனுக்குக் கையளித்தார்.

இவர் அழகான தோற்றமுடையவர். பணம் படைத்த பலரும் இவரை மணந்துக்கொள்ள முயன்றனர். “எனது கன்னிமை இறைவனுக்கே” என்று கூறினார். இதனைக் கேட்டுச் சினம் அடைந்தவர்கள் இவரைக் கிறிஸ்தவள் என்று குற்றம் சாட்டினார்கள். மறையை மறுதலிக்கும்படி வற்புறுத்தப்பட்டார். தம் விசுவாசத்தில் வேரூன்றியிருந்தமையால் கண்முன் நெருப்பு மூட்டப்பட்டு அதை அவரிடம் காட்டி மிராட்டியபோது அவர் அஞ்சவில்லை. பொய் தெய்வங்களுக்குத் தூபங்காட்டப் பணிக்கப்பட்டபோது தம்மேல் சிலுவை வரைந்து கொண்டாரேயன்றி விசுவாசத்தை மறுதலிக்கவில்லை. பின்னர் ஒரு விலைமகளின் வீட்டில் விடப்பட்டார். அங்கு தீய இளைஞர் பலர் அவரை அணுக முயன்றும் அவர்களால் முடியாமற் போயிற்று அவர்களில் ஒருவன் மின்னல் போன்ற ஓர் ஒளியால் தாக்கப்பட்டு பார்வையிழந்து கீழே விழுந்தான். புனிதவதி உருக்கமாக மன்றாடியதால் அவன் மீண்டும் பார்வை பெற்றான். இறுதியில் அவர் தலை வெட்டப்பட்டு மறைசாட்சியாகக் குருதி சிந்தி வானகப் பரிசைப் பெற்றுக்கொண்டார். ●

## புனித தோமஸ் அக்குவினாஸ்




இவரே கத்தோலிக்க பள்ளிகளின் பாதுகாவலர். இவர் எப்படி வாழ்ந்தார் என்பதை இவரது சாவு படுக்கையில் இவருக்குத் திவ்ய நற்கருணை கொண்டுவந்த நேரத்தில் இவர் சொன்னவற்றிருந்து புரிந்து கொள்ளலாம். “எனது ஆன்மாவை மீட்க வந்த விலைமதிப்பில்லாத செல்வமாகிய இயேசுவே உம்மை நான் வணங்குகின்றேன். என் படிப்புகள் கண்விழிப்புகள் உழைப்பு அனைத்துமே உம்மீது கொண்ட அன்பினால் தூண்டப்பட்டன. இவருக்கு ஏறத்தாழ 49 வயது நடக்கும் போது லயன்ஸ் 2ஆவது பொதுச்சங்கத்தில் பங்குபெற சென்றார். செல்லும் வழியில் உயிர் நீத்தார்.


இவரது வாழ்நாளெல்லாம் செபம் படிப்பு ஆகிய சூழலில் அமைத்திருந்தது. இவர் துறவறத்தை நாடிய பொழுது குடும்பத்தினர் அனைவரிடம் இருந்தும் கடும் எதிர்ப்பு ஏற்பட்டது. எதிர்ப்பை எல்லாம் தாங்கிக் கொண்டு புனித டொமினிக் துறவற சபையில் சேர்ந்தார். இவர் எழுதிய ஏராளமான நூல்கள் நம்மை வியப்புக்கு உள்ளாக்குகின்றன.

அவை எல்லாக்காலத்திற்கும் எந்தளவு பொருந்தும் என்று தெரிகிறது. இவரது காலம் வரை திருச்சபையில் பல மறைவல்லுநர்கள் தோன்றியிருப்பினும் இவரை மட்டுமே 2வது வத்திக்கான் சங்கம் குருத்துவக் கல்விக்கும் கிறிஸ்தவப் பல்கலைக்கழகப் படிப்புக்கும் வழிகாட்டி என்று குறிப்பிடுகிறது. திவ்ய நற்கருணை ஆசீர்வாதத்திற்கு முன் பாடப்படும் மாண்புயர்....” என்ற பாடலைப் பாடுகிறோமே அதிலிருந்து புரிந்துகொள்ளலாம். இந்தப் பாடலைத் தொகுத்தவர் புனித தோமஸ் அக்குவினாஸ்தான்.

“இந்த அருட்சாதனத்தைத் தாழ்ந்து பணிந்து ஆராதிப்போம்” என்பதிலிருந்தும் “அறிய இயலாக் குறையை நீக்க விசுவாசத்தின் உதவி பெறுக” என்ற சொற்றொடரிலிருந்தும் இவர் நற்கருணை நாதரிடம் கொண்டிருந்த ஆழ்ந்த பக்தி, வணக்கம், பற்றுதல், விசுவாசம் அனைத்தும் புலனாகின்றன. 1266ஆம் ஆண்டு மீண்டும் பாரிஸ் நகருக்கு அனுப்பப்பட்டார். 9ஆம் லூயி மன்னன் இவரிடம் பெரிய மதிப்பும் வணக்கமும் வைத்திருந்தார். ●

## புனித திமோத்தி

**–26.01.2022–**




திமோத்தேயுவின் தந்தை புறஇனத்தவராகவும், தாய் யூத குலத்தைச் சார்ந்தவராகவும் இருந்தார்கள்.

புனித பவுல் பல இடங்களிலும் சென்று போதித்தபோது திமோத்தேயுவும் அவர்தம் தாயாரும் பாட்டியும் அவரிடத்தில் திருமுழுக்குப் பெற்றார்கள். திமோத்தேயுவின் பக்தியையும் அறிவினையும் அறிந்த திருதூதர்கள் அவரைத் தம் துணைவராகத் தெரிந்துக்கொண்டனர்.

புனித பவுல் அவரைத் திருச்சபைக்கான வேதனைகளை அனுபவிக்கும் கிறிஸ்தவர் -களிடம் அனுப்புவார். சில வேளைகளில் வேதத்தில் தத்தளிக்கும் விசுவாசிகளிடம் அனுப்புவார்.

பவுலின் வழியிலேயே திமோத்தேயு நடந்துக்கொண்டபடியால் எபேசு நகருக்கு ஆயராக நியமனம் பெற்றார். பவுல் சிறையில் வைக்கப்பட்ட பொழுது திமோத்தேயுவுக்கு மெய்மறையைப் பற்றி இரு திருமடல்கள் எழுதி அனுப்பினார்.

திமோத்தேயு எண்ணற்ற புண்ணியங்களையும் தவ செயல்களையும் செய்து வேதத்துக்காக தடிகளால் அடிக்கப்பட்டு வேதசாட்சி முடிபெற்றார்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புக் கட்டுரை

தொடர் 05

# மீட்புத்திட்டத்தில் நல்ல தந்தை புனித யோசேப்பு

அருட்கலாநிதி. அ. கிறிஸ்ரி றூபன் பெர்னாண்டோ.
இயக்குனர், புனித யோசவ் வாஸ் இறையியல் கல்லூரி.
இயக்குனர், மன்னார் மறைமாவட்ட திருவிவிலிய ஆணைக்குழு

## புனித யோசேப்பின் பாதுகாவல் - திருவிவிலியத்தின் அடிப்படையிலே

### முன்னுரை

புனித யோசேப்பின் பலவிதமான பாதுகாவல்கள் குறித்த திருஅவையின் அனைத்து பக்தி முயற்சிகளுக்கும் திருவிவிலியமே அடிப்படை அஸ்திவாரமாக அமைகிறது. புனித யோசேப்பைக் குறித்த பக்தி முயற்சிகள் தொடக்ககால திருஅவையிலே வளர்ச்சிபெற தாமதமாக இருந்தமைக்கு, அவரைப் பற்றிய திருவிவிலியத்திற்கு புறம்பான செய்திகளும், ''விவிலியப் புற நூல்களின்'' (apocrypha) தப்பான உருவப்பட மற்றும் கருத்து விளக்கங்களுமே காரணமாகும். ஆனால் இன்று திருஅவையிலே அன்னை மரியாளுக்கு அடுத்தபடியாக அநேகரால் விரும்பப்படுகிறவரும், அநேகரின் சிறப்பான பாதுகாவலிற்காக வேண்டப்படுபவருமாக புனித யோசேப்பு காணப்படுகிறார் என்றால் அது மிகையாகாது.

இந்தக் கட்டுரைத் தொகுப்பானது, புனித யோசேப்பு இறைவார்த்தையின் ஒளியின் அடிப்படையிலேயே திருஅவையிலே பல சிறப்பு வேண்டுதல்களுக்கு ''பாதுகாவலராக'' ஏற்படுத்தப்பட்டுள்ளார் என்பதையே எடுத்தியம்புகிறது.

1. அழைக்கப்பட்ட அனைவரின் பாதுகாவலர்

புனித யோசேப்பு இயேசுவின் முன்மாதிரியான முதல் சீடர் என்று அருளாளர் திருத்ததந்தை 9ஆம் பயஸ் குறிப்பிடுகிறார். அதற்கான காரணம், நற்செய்திகளிலே புனித யோசேப்பு இயேசுவிற்காக அனைத்தையும் துறந்து (மத் 1:24, 2:14, 2:21) இயேசு மீது அனைத்திலும் பற்றுக்கொண்டு, இயேசுவின் விருப்பம் மாத்திரமே தனது விருப்பமாக ஏற்று, இறுதிவரையிலே இயேசுவிற்காகவே வாழ்ந்தவர். இவரின் நம்பிக்கையும், நேர்மைத்தன்மையும் (மத் 1:19), எதிர்நோக்கும் இயேசுவால் பெயர் சொல்லி அழைக்கப்பட்ட அனைவருக்குமே முன்மாதிரியாக நிறுத்தப்படுகிறது.

2. திருஅவையின் பாதுகாவலர்

புனித யோசேப்பு திருஅவையின் பாதுகாவலர் என்ற நம்பிக்கை அறிக்கையானது, திருவிவிலியத்தின் பின்வரும் இறையியல் கருத்துக்களின் அடிப்படையிலேயே ஏற்படுத்தப்பட்டது.

அ). திருஅவை இயேசுவின் மறைஉடல் என்ற புனித பவுலின் போதனை (உரோ 12:5 1கொரி 12:12,27).

ஆ). நற்செய்தியாளர்களான யோவானும் லூக்காவும் இயேசுவின் தாயான மரியா திருஅவையின் தாய் (யோவா 19:26-27 திப 1:14) என்பதை சுட்டிக்காட்டுகின்றனர்.

இ). திருத்தூதர்களின் நம்பிக்கை அறிக்கையின்படி ''புனிதர்களின் சமூக உறவு'' என்பது இறந்து மீட்கப்பட்வர்கள் தொடர்ந்தும் வாழுகின்றவர்களுக்காக மன்றாடுகிறார்கள் என்பதையே குறிக்கிறது.

ஆகவே, புனித யோசேப்பு இவ்வுலகிலே இயேசுவை பாதுகாத்து பராமரித்தது போல, விண்ணுலகிலிருந்து இயேசுவின் மறையுடலாகிய திருஅவையை தொடர்ந்து பாதுகாத்து பராமரிக்க, தனது வளர்ப்பு மகனாகிய இயேசுவிடம் இடைவிடாமல் மன்றாடிக்கொண்டே இருக்கிறார் என்ற நம்பிக்கையின் உச்சமே, இயேசுவின் தாய் திருஅவையின் தாய் என்று அழைக்கப்பட்டு பெருமைப்படுத்தப்படுவதைப் போல, அவருடைய வளர்ப்புத் தந்தையாகிய புனித யோசேப்பு ''திருஅவையின் பாதுகாவலர்'' என்று பறைசாற்ற வைத்தது.

3. திருமண ஒப்பந்தமானவர்களுக்கும், திருமணம் ஆனவர்களுக்கும் பாதுகாவலர்

புனித யோசேப்பு தனது மனைவியாகிய மரியாமீது அளவுகடந்த அன்பும், மரியாதையும் கொண்டிருந்தார் (மத் 1:24, 2:14). பெண்களை மதிக்கும் மாண்பினை சிறப்பாக தனதாக்கி வைத்திருந்தார் புனித யோசேப்பு (மத் 1:19). உடல் இச்சையால் மலரும் அன்பால் அல்ல, மாறாக மன சுதந்திரத்தோடும், முதிர்ச்சியோடும், நிறைந்த உரிமையோடும், எப்போதும் மாசற்ற கன்னியான தன் மனைவியிடம் தன் அன்பை வெளிப்படுத்தினார் (லூக் 2:48).

திருமண ஒப்பந்தமானவர்கள், திருமணத்தின் முன்பாக எப்படி ''பாலியல் உடலுறவிலான விரதத்துவம்'' மேற்கொள்ள வேண்டும் என்பற்கு புனித யோசேப்பு ஒரு நல்ல முன்மாதிரியாக விளங்குகிறார் (லூக் 1:34). இயற்கையான முறையை விடுத்து, செயற்கை முறையிலான கருத்தடை சாதனங்களை பயன்படுத்தி குடும்பக் கட்டுப்பாட்டை மேற்கொண்டு வாழும் அனைத்து தம்பதியருமே தங்கள் திருமண உறவால், இயேசுவில் தங்களை அர்ப்பணிக்காதவர்களே. தகுந்த மற்றும் சரியான காரணங்களுக்காக தங்களது தாம்பத்திய உறவையும், பிள்ளைப்பேற்றையும் தள்ளி வைத்து அன்பினால் இணைந்து, இயற்கையான குடும்பக் கட்டுப்பாட்டை கடைப் பிடிப்பவர்களுக்கும் புனித யோசேப்பு முன்மாதிரியாகவே திகழ்கிறார். மேலும், திருமணத்தினுள்ளே குழந்தைப்பேற்றை விரும்பி ஏற்றுக்கொள்பவர்களைக் குறித்து அவர் மனமகிழ்கிறார் (மத் 1:24).

4. தந்தையர்களின் பாதுகாவலர்

புனித யோசேப்பு, இயேசுவிற்கு எல்லாமான தந்தையாக திகழ்ந்தார். கடவுளின் கரங்களிலிருந்து பெற்றுக் கொண்ட ''தந்தை'' (லூக் 2:48) என்ற அளப்பெரிய அழைப்பை ஏற்றுக்கொண்டு, அதற்காக அனைத்துக் கடமைகளையும் பொறுப்புடன் செய்துவந்தார். இவர் ஒரு அன்பான, கனிவான, பணிவான, ஏற்றுக்கொள்கிற, அரவணைக்கின்ற, தியாகம் நிறைந்த, மகிழ்வான, பாதுகாப்பான, முதிர்ச்சி நிறைந்த, அக்கறையுள்ள, உழைக்கின்ற, உருவாக்குகின்ற, இணைக்கின்ற, தட்டிக்கொடுக்கின்ற, நல்வழிகாட்டுகிற தந்தையாகவே அனைத்திலும் திகழ்ந்தார்.

இயேசு இவ்வுலகில் தனது துணையுடன் மரியாவின் வயிற்றிலே கருத்தரிக்கப்படவில்லை என்பதை தினமும் மனதில் கொண்டு, தூய ஆவியாரின் துணையோடு மனித அவதாரம் எடுத்து



தனது கரங்களில் கொடுக்கப்பட்டுள்ள கடவுளின் திருமகனை, தனது மகனாக ஏற்று நடாத்துவதால், விண்ணுலக தந்தையின் காரியங்களை ஒரு மண்ணுலகின் தந்தையாய் அவர் நிறைவேற்றுவதாய் அனைத்திலும் உணர்ந்துகொண்டார்.

5. குடும்பங்களின் பாதுகாவலர்

புனித யோசேப்பு வாழ்ந்த குடும்பத்தில், யோசேப்புவின் மனைவியாகிய மரியாவும் மற்றும் இயேசு ஆண்டவரும் வாழ்ந்து வந்தார்கள் (லூக் 2:22). கடவுளால் எப்போதும் நேர்மையாளராகவும் மண்ணகக் காப்பாளராகவும் தேர்ந்து கொள்ளப்பட்ட தந்தையாகிய யோசேப்பும் (மத் 1:19), அன்பே உருவான கடவுளின் மகனை தனது உதரத்திலே உருக்கொடுத்த மாசற்ற மரியாவும் (லூக் 1:28), விண்ணுலக கடவுள் மண்ணகத்தில் மனிதர்கள் மத்தியிலே அவதரித்த இயேசுவும், அன்பிலும் (மத் 1:21), நம்பிக்கையிலும், அருளிலும் குறைவுபடாதவர்களாக திருக்குடும்பத்திலே திகழ்ந்தார்கள். இவர்கள் வாழ்ந்த இந்தக் குடும்பத்திலே தனிநபர் விருப்பங்கள் முதன்மை பெறவில்லை. மாறாக, கடவுளின் விருப்பம் ஒட்டு மொத்தத்தில் ஒருவர் மற்றவரில் நிறைவேற, ஒவ்வொருவரும் இக்குடும்பத்திலே துணையாக அருகிருந்தார்கள்.

6. கருவில் இருக்கின்ற குழந்தைகளினதும், கருவில் குழந்தைகளை சுமக்கும் தாய்மாரினதும் பாதுகாவலர்

புனித அகுஸ்தினார், ''அன்னை மரியாவுக்கு அடுத்தபடியாக, ஒரு தாயின் கருவில் இருக்கும் குழந்தையைக் குறித்து அதிகம் சந்தோசப்படுகிறவர், புனித யோசேப்புவைத்தவிர வேறு எவருமில்லை'' என்று கூறுகிறார். அன்னை மரியாவின் வயிற்றிலே இயேசு பாலகன் இருக்கும் போது, அவருக்காகவும், கருவில் சுமக்கும் தாய்க்காகவும் எல்லா விதமான தியாகங்களையும் செய்ய புனித யோசேப்பு தயாராக இருந்தார் (லூக் 2:6-7).

இன்று, மனிதாபிமானமற்ற கருக்கலைப்பு மற்றும் பல வடிவங்களிலான சிசுக்கொலைகள் போன்றவற்றால் நாளாந்தம் ஆயிரக்கணக்கில் மனித உயிர்கள் கொல்லப்பட்டு வருகின்றன. இந்த பொல்லாத காலத்திலே, புனித யோசேப்பு மனித உயிர்களின் மாண்பும் மகத்துவமும் மதிக்கப்படவும், பிறக்கவிருக்கின்ற ஒவ்வொரு குழந்தையும் கருவிலிருந்தே பக்குவமாக பாதுகாக்கப்படவும் வேண்டும் என்று எம்மை அழைத்து நிற்கிறார்.

7. தொழிலாளர்களின் பாதுகாவலர்

புனித யோசேப்பு தச்சுத் தொழில் செய்து திருக்குடும்பத்தை காத்து வந்தார் (மத் 13:55 மாற் 6:3) என்று நற்செய்திகளில் சொல்லப்படுகிறது. தந்தை செய்துவந்த அதே தொழிலையே தனது மகனுக்கும் பழக்கி, அவரும் தனது தந்தைக்கு அந்தத் தொழிலிலே ஒத்தாசையாக இருந்ததாக இணைத்திருமுறை நூலான யாக்கோபின் நற்செய்தியிலே நாம் வாசிக்கிறோம். புனித யோசேப்பு நேர்மையாளராக இருந்தபடியால், தனது தொழிலையும் நேர்மையோடே செய்தார். தொழிலின் மகத்துவத்தையும், உயர்வையும் நேர்த்தியோடு உணர்ந்து செயற்பட்டார். தனது தொழிலிலே விடாமுயற்சியோடும், நெருங்கிய பிறர் சினேகத்தோடும் நடந்து கொண்டார்.

8. அநாதரவான, கைவிடப்பட்ட, நாடுகடத்தப்பட்ட, அகதிகள், புகலிடம் கோரிப் பயணித்த மக்களின் பாதுகாவலர்

புனித யோசேப்பு இயேசுவின் பொருட்டு இத்தனை துன்பங்களையும் ( மத் 2:13, 19 லூக் 2:7) தனது வாழ்விலே அனுபவித்தார். இத்தனை இடர்கள் மத்தியிலும் ''கடவுள் ஒடுக்கப்பட்டவர்களை பாதுகாக்கிறார்'' என்ற இறை நம்பிக்கையோடு தனது வாழ்வு முழுவதுமே பயணிக்கிறார்.

9. அர்ப்பணிக்கப்பட்ட துறவியர், மறைவான அர்ப்பண வாழ்வைத் தேர்ந்துகொண்டவர்கள்

தங்களை அர்ப்பணம் செய்த பொதுநிலையினர் போன்றோரின் பாதுகாவலர் புனித யோசேப்புவின் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வானது பெரிய செயல்களாலும், பகிரங்கமான காரியங்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கவில்லை. நற்செய்தியாளர்கள் அவரை ஒரு மௌனியாகவும், அனைத்து நிகழ்வுகளிலும் மறைவிலிருந்து செயற்படும் புனிதராகவுமே சித்தரிக்கிறார்கள். கால ஓட்டத்திலே, இவரை பெரிய செயல் வீரனாக வரலாறு குறிப்பிடுவதில்லை. இவரது வாழ்வு முழுவதுமே திருவிவிலியத்திலே மறைக்கப்பட்ட ஒன்றாகவே காட்டப்படுகிறது. ஆனால், தனது தூய்மையான வாழ்வினால் நேர்மையோடு நடந்து இறைத் திட்டத்தை நிறைவேற்றினார் என்பதை இவரது வெளிப்படாத, மௌனமான வாழ்க்கைக் பக்கங்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன.

ஒருவருடைய புனிதம் நிறைந்த வாழ்வு, உலகத்தின் முன்பாக வெளிச்சத்தில் தெரிய வேண்டும் என்பதல்ல. மாறாக, எந்த சந்தர்ப்ப சூழ்நிலைகளிலும், சாதாரண காரியங்களில் உண்மையோடும், தூய்மையோடும், நேர்மையோடும் நடந்து கொள்வதில்தான் ஒருவர் பெற்ற அழைப்பினதும், அவரது அர்ப்பணத்தில் அவர் எந்தளவிற்கு இறைத் திட்டத்தை நிறைவேற்றுகிறார் என்பதும் அடங்கியுள்ளது.

10. அப்போஸ்தலர்களின் பாதுகாவலர்

கடவுளால் புனித யோசேப்புக்கு கொடுக்கப்பட்ட மிகவும் சிறப்பான பணியானது, இயேசுவை அவரது சிறப்புப் பணிக்காகவும், பகிரங்க வாழ்விற்காகவும் தயார்படுத்த வேண்டும் என்பாதவே காணப்படுகிறது (மத் 1:21). கடவுளால் முன்குறித்து வைத்து அழைக்கப்பட்ட புனித யோசேப்பு, இயேசுவின் முதல் அப்போஸ்தலராக இருந்து, இந்த அலுவலை முழுவதுமாக செய்து முடித்தார்.

11. நன்மரணத்தின் பாதுகாவலர்

இயேசுவின் பகிரங்கப் பணியின் போது புனித யோசேப்புவை நற்செய்தியாளர்கள் எந்த சந்தர்ப்பத்திலுமே அவர் மரியாவோடோ அல்லது இயேசுவோடோ கூடவே இருந்தார் என்று குறிப்பிடாத போது, அவர் ஏற்கெனவே இறந்துவிட்டார் என்றே கருதப்படுகிறது (மத் 12:47). அவரது இவ்வுலகப் பயணத்தின் முடிவானது, அவர் மேலுகிற்கு தேவையான செல்வங்களை தனக்கு கொடுக்கப்பட்ட (மத் 6:19-21), இயேசுவின் வளர்ப்புத் தந்தை என்ற பணியை முழுவதுமாக நிறைவேற்றி, மீட்புத் திட்டத்தில் அவர் ஏற்றுக்கொண்ட கதாபாத்திரத்தில் நிறைவாக பங்கேற்று, இப்போது இயேசு ''இறைமகன்'' என்று தனது பகிரங்கப் பணியை ஆரம்பிக்கின்ற போது (மத் 3:13-17 மாற் 1:9 லூக் 3:21-22 யோவா 1:29-36), திரை மறைவில் தன்னை நிறுத்திக் கொள்கிறார்.

இயேசுவினதும் மரியாவினதும் கரங்களில் சாய்ந்தவாறே தனது இறப்பை சந்திக்கும் புனித யோசேப்புவின் மரணமானது, கிறீஸ்துவிலும் அன்னை மரியாவின் அரவணைப்பிலும் நம்பிக்கை கொள்ளும் ஒவ்வொரு கிறீஸ்தவனும் கிறீஸ்தவளும் அடையக் கூடிய அமைதியான நன்மரணத்தை சுட்டிக் காட்டுகிறது.

இவ்வாறாக, திருஅவையிலே புனித யோசேப்புவின் பாதுகாவலை, பல்வேறு வகைகளிலே, வெவ்வேறு சிறப்பான கருத்துக்கள் மற்றும் தேவைகளுக்காக, வேண்டுகின்ற போது, இயேசுவோடு கூடவே இருந்து அவரை நேராக கண்டு தூக்கி அரவணைத்து அள்ளிக்கொடுத்து தூங்கவைத்து சொல்லிக்கொடுத்து வந்த இந்த தந்தையின் மன்றாட்டு இயேசு ஆண்டவரால் ஒரு போதும் புறக்கணிக்கப்படாது என்பதே திருஅவையின் அசைக்க முடியாத நம்பிக்கையாக அமைந்திருக்கிறது.

(அடுத்த இதழில் தொடரும்)

**மன்னா வாசகர்களே!**
**மன்னா பணத்தை விரைவாகச் செலுத்தி**
**எம்மோடு ஒத்துழையுங்கள்!**

பங்குகளில் நேரடியாகவும், பிற இடங்களில் தபால் மூலமாகவும் மன்னாவைப் பெறும் அன்புக்குரிய மன்னா வாசகர்களே, மன்னா பத்திரிகைக்கான பணத்தை விரைவாகச் செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புப் பக்கம்

# மன்னாரின் கலைமுகவரியாகத் திகழ்ந்த கலைஞர் குழந்தை அவர்கள்

- அருட்பணி. தமிழ் நேசன் அடிகளார் -



''கலைஞர் குழந்தை'' என்றும் ''குழந்தை மாஸ்ரர்'' என்றும் அறியப்படும் மன்னார் முருங்கனைச் சேர்ந்த ஓய்வுநிலை அதிபர் திரு. செபஸ்தியான் செபமாலை அவர்கள் கடந்த 08.01.2022 அன்று இரவு தன் கலைவாழ்வில் இருந்து விடைபெற்று இறையடி சேர்ந்தார். இவர் மன்னாரின் கலைமுகவரியாகவும், ஈழத்தில் நன்கு அறியப்பட்ட கலைஞராகவும் திகழ்ந்தவர். இவர் 1940ஆம் ஆண்டு பங்குனி மாதம் எட்டாம் திகதி முருங்கனில் ஒரு கலைக்குடும்பத்தில் பிறந்தார். இவருடைய அன்பு மகன்தான் அருட்பணி. அன்புராசா அமதி அடிகளார். கலைஞர் குழந்தை அவர்கள் யாழ்ப்பாணம் கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் 1958 - 1959 வரை கல்விகற்று பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறினார். தம் ஆசிரியப் பணியை 40 ஆண்டுகள் செய்து ஓய்வுபெற்றார்.

**பன்முக ஆளுமை கொண்டவர்**

இவர் கலைத்தாயின் பன்முகத் தன்மைகளை தன்னகத்தில் தாங்கிய ஒரு கலைச்சிற்பி. இவர் சிறந்த குரல்வளமுள்ள பாடகர், சிறந்த மேடைப்பேச்சாளர், நாடக நடிகர், நாடக எழுத்தாளர், நாடக நெறியாளர், பாடலாசிரியர், இசையமைப்பாளர், கவிஞர், கலைஞர், பேச்சாளர் என கலை இலக்கியத் துறையில் பன்முக ஆளுமையைக் கொண்டு விளங்குகின்றார். தனது விடாமுயற்சியாலும், தொடர் பயிற்சியாலும், அர்ப்பணிப்பாலும் இத்திறமைகளை அவர் வளர்த்துக்கொண்டார். கலைசார்ந்த ஆளுமையைவிட இவர் சமய வாழ்விலும் சமூக அரசியல் வாழ்விலும் காத்திரமான பங்கு வகித்துள்ளார். உத்தம கத்தோலிக்க விசுவாசியாக, சமூக செயற்பாட்டாளராக இவர் சமயத்திற்கும் சமூகத்திற்கும் பணியாற்றி வந்துள்ளார்.

**பேராசிரியர் வித்தியானந்தனோடு தொடர்பு**

1965களில் மன்னார் மாதோட்டத்தில் நாடக விழாக்கள் நடந்தேறிய பொற்காலம் எனலாம். இக்காலத்தைப்போல வேறு எக்காலத்திலும் இதுவரை நாடக விழாக்கள் நடக்கவில்லை. இக்காலத்தில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் நாடக விழாக்களை முன்னெடுக்க மன்னார் அரச அதிபராக இருந்த திரு. தேவநேசன் நேசையா அவர்கள் இவ்வொழுங்குகளுக்குச் செயல்வடிம் கொடுத்தார்.

இச்சூழலில்தான் பேராசிரியர் சு. வித்தியானந்தன் குழந்தை செபமாலை அவர்களையும் அவரின் முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தையும சந்தித்தார். இதன் விளைவாக யாழ்ப்பாணம், துணுக்காய், பளை, மட்டக்களப்பு, கொழும்பு எனப் பல பாகங்களுக்கும் கலைஞர் குழந்தை அவர்களையும் முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தினரையும் அழைத்து நாடகங்களை ஆற்றுகை செய்தார்.

இவர் சிறுவனாக வளர்ந்த முருங்கன் கிராமச்சூழல் இவருக்கு கூத்து நாடகத்தின்மேல் ஈர்ப்பை ஏற்படுத்தியது. பள்ளிக்காலம், ஆசிரியப் பயிற்சிக்காலம் ஆகியவற்றில் இவருடைய கலையார்வம் அதிகரித்தது. இவர் மன்னார் மாதோட்டத்தைச் சேர்ந்த நாடகக் கலை முன்னோடியாக இருப்பினும் மன்னார் மாதோட்டத்தைக் கடந்து இலங்கை நாடு அறிந்த ஒரு கலைஞராகத் திகழுகின்றார். மன்னாரில் எங்கெங்கு பொது விழாக்கள் நடக்கின்றனவோ அங்கெல்லாம் தம் இசையால், நடிப்பால், குரல்வளத்தால் நிகழ்வுகளைச் சிறப்பிக்கின்றவர்.

**முத்தமிழ் கலாமன்றம்**

கலைஞர் குழந்தை அவர்கள் 1961இல் புனித யாகப்பர் நாடக மன்றம் என்ற அமைப்பை உருவாக்கினார். அதன்பின் கலை ஆர்வமுள்ள அனைவரையும் இணைத்துக்கொள்ளும் நோக்கோடு மேற்சொன்ன மன்றத்தின் பெயரை இன, மத வரையறைகளைக் கடந்து ''முருங்கன் முத்தமிழ் (நாடக) கலாமன்றம்'' என 1964இல் உருமாற்றினார். இம்மன்றத்தின் ஐம்பதாவது ஆண்டு (1964 - 2014) பொன்விழா கடந்த 2014ஆம் ஆண்டு முருங்கனில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஐம்பது ஆண்டுகளைக் கடந்தும் இன்றுவரை இம்மன்றம் இயங்குநிலையில் செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றது. இம்மன்றத்தின் தாபகத் தலைவர் கலைஞர் குழந்தை அவர்கள் இம்மன்றத்தின் ஊடாக பல்வகையான கலைப்படைப்புக்களை உருவாக்கி மேடையேற்றியுள்ளார். முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் பொன்விழா மலரில் இம்மன்றம் பற்றிய பல கட்டுரைகள், மன்ற உறுப்பினர்களுடைய அனுபவப் பகிர்வுகள் இடம்பெற்றுள்ளன. இப்பொன்விழா மலர் 100 பக்கங்களைக் கொண்ட சிறப்பான ஆவணப் பதிவாக அமைக்கப்பட்டுள்ளது.

**கலைப் படைப்புக்கள்**

இவர் சுமார் 70 நாடகங்களையும், 90 கல்வெட்டுக்களையும், 100 இற்கும் மேற்பட்ட பல்துறைப் பாடல்களையும் எழுத்துப் பிரதிகளாக இன்றும் வைத்திருக்கின்றார். இவருடைய பல்துறைப் பாடல்களில் கும்மி, கோலாட்டம், வரவேற்பு பாடல்கள், பிரியாவிடைப் பாடல்கள், வாழ்த்துப்பாக்கள் போன்றவை அடங்கும்.

இவர் எழுதிய நாடகங்களுள் கூத்து நாடகங்கள், இசை நாடகங்கள், சமூக விழிப்புணர்வு நாடகங்கள் போன்றவை அடங்கும். ஏறக்குறைய ஒரு மணித்தியாலங்களைக்கொண்ட பல குறுங்கூத்துக்களை எழுதியுள்ளார். விவிலியம், தமிழ் இலக்கியம், வரலாறு போன்றவற்றில் இருந்து நாடகங்களுக்கான பாடுபொருளை தெரிவுசெய்து சமூக வாழ்வுக்கு படிப்பினையாக அவற்றை உருவாக்கி ஆற்றுகை செய்வார். கல்சுமந்த காவலர்கள், வீரத்தாய், யார் குழந்தை, இறைவனா புலவனா?, வீரனை வென்ற தீரன் போன்ற கூத்து நாடகங்கள் பல நூறு மேடைகள் கண்ட அழியாப்புகழ்கொண்ட படைப்புக்களாகும்.

**இவர் படைத்த நூல்கள் :**

இவர் ஒருசில நூல்களையும் வெளிக்கொணர்ந்துள்ளார். அறப்போர் அறைகூவல் (1966), இன்பத்தமிழின் இதய ஓலம் (1966), யாகப்பர் இன்னிசைப் பாடல்கள் (1966), நாம் மலர் - I (1967), நாம் மலர் - II (1989), பரிசுபெற்ற நாடகங்கள் (1997), மரபுவழி நாடகங்கள் (1998), மாதோட்டம் கவிதைத் தொகுதி (2000) ஆகியனவாகும்.

**இவரைப்பற்றி எழுந்த நூல்கள்:**

கலைஞர் குழந்தை அவர்களின் 50 ஆண்டுகால சமய, சமூக, கலைப் பணிகளை ஆவணப்படுத்தும் நோக்குடன் கலைத்தவசி - 2012 (குழந்தை செபமாலை அவர்களின் கலைப்பணி நயப்பு மலர்) என்ற நூல் வெளிக்கொணரப் பட்டது. இந்நூல் இவருடைய அன்பு மகன் அருட்திரு. செ. அன்புராசா அவர்களின் முயற்சியின் பயனாக உருவாகிய ஒரு படைப்பாகும். இந்த நூல் 296 பக்கங்களைக்கொண்ட மிகப்பெரும் ஆவணம். இதில் ஐந்து சமயத் தலைவர்களின் ஆசியுரைகள், நான்கு சமயத் தலைவர்களின் வாழ்த்துரைகள் அடங்கலாக 58 பேருடைய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. கலைஞர் குழந்தை அவர்களுடைய கலையுலக வாழ்வின் பதிவுகள் இதில் இடம்பெற்றுள்ளன. அவருடனான தமது அனுபவங்களை, அவர் பற்றிய தமது மனப்பதிவுகளை ஒவ்வொருவரும் தத்தமது கண்ணோட்டத்தில் பதிவு செய்துள்ளனர். ஆளுமைமிக்க ஓர் அற்புதமான கலைஞனின் வாழ்வின் சுவடுகளைச் சுமந்து நிற்கும் ஓர் வரலாற்று ஆவணம் இந்த கலைத்தவசி மலர்.

கலைஞர் குழந்தை அவர்களும் அவருடைய துணைவியார் திருமதி. றோஸ்மேரி அவர்களும் 2009 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டிற்குப் பயணம் செய்த வேளையில் பிரான்ஸ் தமிழ் கலைஞர்களால் ''கூத்திசைக்காவலர் - மன்னார் பெற்றெடுத்த குழந்தை செ. செபமாலை'' என்ற பெயரில் சிறப்பு மலர் பிரான்ஸ் நாட்டில் வெளியிடப்பட்டது. 56 பக்கங்களைக்கொண்ட இந்நூலில் 32 பேருடைய மனப்பதிவுகள் சிறு கட்டுரைகளாக, கவிதைகளாக பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**விருதுகள்/ கௌரவங்கள்**

கலைஞர் குழந்தை அவர்கள் பல விருதுகளுக்கு சொந்தக்காரர். கலைஞர் குழந்தை அவர்கள் பல விருதுகளுக்கு சொந்தக்காரர். 1968ஆம் ஆண்டு பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் குழந்தை செபமாலை அவர்களுக்கு ''கவிஞர் குழந்தை'' எனப் பட்டம் சூட்டி கௌரவித்தார். 1982ஆம் ஆண்டு ஆடி மாதம் 22ஆம் திகதி முருங்கன் பாடசாலை அபிவிருத்திச் சபையால் இவருக்கு மிகப்பெரும் பாராட்டு விழா எடுக்கப்பட்டது. அன்றைய மன்னார் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் இவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்ததோடு ''கலைஞர் குழந்தை'' என்ற கௌரவப் பட்டத்தையும் வழங்கினார். 1994ஆம் ஆண்டு மன்னார் மறைமாவட்டக் கலை பண்பாட்டுக் கழகத்தினால் முள்ளிக்குளத்தில் முன்னெடுக்கப்பட்ட நாடகப் போட்டி நிகழ்வின்போது கலை பண்பாட்டுக் கழகத்தினர் குழந்தை செபமாலை அவர்களுக்கு ''முத்தமிழ் வேந்தன்'' என்ற பட்டத்தை வழங்கினர்.

1999ஆம் ஆண்டு இலங்கை கலாசாரத் திணைக்களத்தினால் இவர் ''கலாபூசணம்'' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 2000ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாண இலக்கிய விழாவின்போது ''ஆளுனர் விருது'' வழங்கிக் கௌரவிக்கப் பட்டார். மன்னார் நகரமண்டபத்தில் 02.09.2000 அன்று நடைபெற்ற நாடக நிகழ்வின்போது கலைஞர் குழந்தை அவர்கள் மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களால் ''திருக்கலை வேந்தன்'' என்னும் பட்டம் அளிக்கப்பட்டு, பொற்கிளி வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

10.06.2005ஆம் ஆண்டு கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட உலக நாடக தின விழாவில் இவர் ''தலைக்கோல் விருது'' வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 18.08.2009இல் பாரிஸ் கலைஞர்களால் நடாத்தப்பட்ட பாராட்டு விழாவின்போது ஐரோப்பிய தமிழ் கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தினால் ''கூத்திசைக் காவலர்'' என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

15.02.2013ஆம் ஆண்டு இலங்கைக் கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட 2012 - 2013ஆம் ஆண்டு அரச நாடக விழா நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோது இவர் கலை கலாசார அமைச்சர், இலங்கை கலைக்கழகத் தலைவர், அரச நாடக விழாக் குழுத் தலைவர் முன்னிலையில் ''நாடகக்கீர்த்தி'' என்ற உயர் விருதும் ஐம்பது ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இந்நிகழ்வில் சிங்கள நாடகக் கலைஞரில் ஒருவரான கலைஞர் சந்துல குணரட்ன அவர்களும் தமிழ் நாடகக் கலைஞரில் ஒருவரான கலைஞர் குழந்தை அவர்கள் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

07.09.2014ஆம் ஆண்டு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் தமிழரசுக் கட்சியின் 15வது தேசிய மாநாட்டில் தமிழ்த்தேசியத்திற்காக உழைத்த பெருந்தகைகளுக்கு வழங்கப்பட்ட தந்தை செல்வா விருது தமிழரசுக் கட்சியினால் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

**அர்ப்பணம் மிகுந்த கலைஞர்:**

தான் பணியாற்றிய இடங்களில் ஆசிரியப் பணியுடன் சமூகப்பணி, சமயப் பணி, தமிழ்ப்பணி போன்றவற்றில் இளமைக்காலம் தொடக்கம் இடைவிடாமல் 60 ஆண்டுகளாக உழைத்து வந்தவர்.

நல்லாசிரியராக, ஆற்றல்மிகு கூத்துக்கலைஞனாக, சிறந்த சமூக, இலக்கிய, விவிலிய நாடக இயக்குனராக, சமூக ஈடுபாடுள்ளவராக, இலக்கிய ஆர்வலராக, தான் வாழ்ந்த சமூகத்தின் கல்வி முன்னோடியாக, விசுவாசமான கத்தோலிக்கராக இவர் தமது வாழ்வை அர்ப்பணித்தவர். மொழிப்பற்றம், இனப்பற்றும், சமயப்பற்றம் இவருடைய படைப்புக்களில் இழையோடி இருக்கும்.

சமய, சமூக, கலைப் பணிகளை கடந்த 50 ஆண்டுகளாக அர்ப்பணிப்போடு ஆற்றிவந்த இவர் உண்மையில் ஒரு வாழ்நாள் சாதனையாளர்தான்! இவருடைய அர்ப்பணிப்பும் தியாகமும் அளவிட முடியாதவை. பொருளாதாரச் சுமை, உடல் நோய்கள், மற்றவர்களின் ஒத்துழைப்பின்மை போன்ற சவால்கள் மத்தியில் அவர் கலையை வளர்த்தார்.

அவருடைய விசுவாச வாழ்வு பலரும் மெச்சத்தக்க சாட்சிய வாழ்வாய் அமைந்திருந்தது. அவர் திருச்சபைப் பணிகளில் தன்னை ஈடுபடுத்தி வந்தார். திருச்சபையின் பணியாளர்களுக்கு உதவியாகவும், ஒத்தாசையாகவும் இருந்தார். திருச்சபையின் மேல் அவருக்கிருந்த அன்பு, அக்கறை, காரணமாக தன் பிள்ளைகளில் ஒருவரை குருத்துவ வாழ்வுக்கு வழிநடத்தினார். ''வாழும் போது வாழ்த்தப்படும் சிறந்தஆசானாக திகழ்ந்த முத்தமிழ் திலகம்.''

**மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்**

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே,
உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரியவர்களுக்கு விநியோகிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.
- மன்னா நிர்வாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறிற்ராஸ்-வாழ்வுதயத்தின் இயக்குனர்

## அருட்பணி செபமாலை அன்ரன் அடிகளாரின் இதயத்திலிருந்து...



**எமது நிறுவன தூரநோக்கு -** "இன, மத, குல பேதமற்ற அன்பு, மன்னிப்பு, சமாதானம், ஒற்றுமை, சமத்துவம், ஆகிய நற்செய்தி விழுமியங்களின் அடிப்படையில் வாழ்ந்து நீதியானதும் மற்றும் சமத்துவமானதுமான இலங்கைச் சமூகம் ஒன்றை உருவாக்கல் என்பதேயாகும்"

**எமது பணி** - "முழு மனித முன்னேற்றித்திற்காக மக்களின் முயற்சிகளில் ஒன்றிணைந்து, ஊக்குவித்து வலுவூட்டல் செய்தல்"

கறிற்ராஸ் - வாழ்வுதயமானது கடந்த 40 ஆண்டுகளாக தனது நிறுவன நோக்கு இலக்குகளுக்கேற்ப தொடர்ந்து சளைக்காமல் பல பணிகளைச் செய்து வருவதையிட்டு உளப்பூரிப்பு அடைகின்றேன். இந்நிறுவனத்தின் பணிகளை பொறுத்த வரையில் ஆரம்ப காலம்தொட்டு இன்று வரையில் எவ்வாறான அசாதாரண சூழ்நிலைகள் ஏற்பட்டாலும் தன்னார்வ சிந்தனையுடன் மன்னார் மறைமாவட்டத்தில் இன, மத, மொழி வேறுபாடின்றி, தனது மனிதநேயப் பணிகள் ஊடாக, நலிவுற்ற மக்களின் வாழ்வை வளப்படுத்தி வருவதுடன், சமூகம், பொருளாதாரம், கல்வி, கலைகலாச்சாரம் போன்ற துறைகளிலும் மக்களின் வாழ்வை வலுவூட்டி வருகின்றது. குறிப்பாக மக்களின் தேவை எங்கு உள்ளதோ அங்கு தேடிச் சென்று தனது பணிகளை துணிகரமாக, இறைவன் துணையோடு ஆற்றி வருகின்றது.



40வது ஆண்டு நிறைவை முன்னிட்டு மரநடுகை - பெரியகட்டு

கறிற்ராஸ் - வாழ்வுதயத்தின் இலட்சனையானது ''நல்ல சமாரித்தன்'' உவமையின் அர்த்தம் கொண்டதாக அமைவதோடு, அனைவரும் சமாதானமாக கரம் கோர்த்து இன, மத வேறுபாடுகளை களைந்து நலிவுற்ற மக்களை வாழ்வில் உயர்வடையச் செய்து மக்கள் தமது சொந்த உழைப்பில் வாழ வைப்பதே பணியின் முக்கிய நோக்கமாகும். இவ் இலட்சனையின் சிந்தனைக்கு அமைவாக தனது மனித நேயப்பணிகளை கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக சிறப்பாக நடைமுறைப்படுத்தி வருகின்றது. இந்நிறுவனம் மன்னார் மறைமாவட்டத்தின் கீழுள்ள மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் ஆல விருட்சம் போல் பரந்து விரிந்து பணியாற்றி பல நலிவுற்ற மக்களின் வாழ்வு மேம்பாட்டிற்கு உறுதுணையாகவுள்ளது. குறிப்பாக தற்காலத்தில் தொண்டு பணிகளுக்குரிய நிதி நிலமைகள் மட்டுப்படுத்தப்பட்டாலும் பல சாவல்களை எதிர்கொண்டு பல நுட்பங்களை கையாண்டு தனது மனிதநேயப்



40வது ஆண்டு நிறைவை முன்னிட்டு மரநடுகை - பெரியகட்டு

பணிகளை 12 செயற்பாட்டு பிரிவுகளாக வகைப்படுத்தி இடைவிடாது பணியாற்றி வருகின்றது.

குறிப்பாக இந்நிறுவனத்தின் பணியானது நாம் எமது நாட்டில் கடந்த மூன்று தசாப்த காலமாக எதிர்கொண்ட யுத்த காலத்தில் மக்களுக்கு ஆற்றிய மனிதநேயப் பணிகளானது, ஒருபுறம் ஏராளமான நிவாரண பணிகளாக இருந்தாலும், மறுபுறம் அபிவிருத்திசார்ந்த கட்டுமானப் பணிகளாக காணப்பட்டது. மக்கள் யுத்தத்தின் கொடூர பிடிக்குள் சிக்கி, அரசு காலத்திற்கு காலம் தொடர்ந்து பொருளாதார தடைகளை விதித்த போதெல்லாம் மக்களின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்வதற்காக மன்னார் மறைமாவட்டத்தின் முதல் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் அரச மட்டத்தினருடன் பரிந்து பேசியதன் விளைவாக ஒரளவுக்கு மக்கள் பணியினை ஆற்றுவதற்காக கடல் மார்க்கமான கற்பிட்டி படகுச்சேவையின் மூலம் நிவாரணப் பொருட்கள் கொழும்பு SEDEC இன் உதவியடன் கொண்டுவரப்பட்டு மக்களின் தேவைகளை ஒரளவுக்கு பூர்த்தி



40வது ஆண்டு நிறைவை முன்னிட்டு மரநடுகை - ஆட்காட்டிவெளி

செய்யக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றது.

இருந்தபோதிலும் குறிக்கப்பட்ட காலத்தின் பின்னர் அப்படகுச் சேவையும் அரசபாதுகாப்பு காரணங்களால் இடை நிறுத்தப்பட்டது யாவரும் அறிந்ததே. மக்கள் தொடர்ந்தும் இடம்பெற்ற யுத்த பாதிப்பினால் பல சொல்லெண்னா துன்பங்களை அனுபவித்து வந்த வண்ணமே இருந்தனர் இக்காலத்தில் தற்பொழுது இறைபதம் அடைந்த எமது மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயர் வணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசேப்பு ஆண்டகை அவர்கள் துணிகரமாக, அரச மட்டத்தினருடனான இடைவிடாத பரிந்து பேசுதலால் 1995 ஆண்டிற்கு பிற்பட்ட காலத்தில் கறிற்ராஸ்-வாழ்வுதயம் தனது மனிதநேயப் பணிகளை விரிவுபடுத்தி வந்தது. இதில் குறிப்பாக எமது பிள்ளைகளின் எதிர்கால நல்வாழ்வினை கருத்தில்கொண்டு. ஆயர்தந்தையின் தொலை நோக்கு சிந்தனைக்கு அமைவாக பல சவால்கள் மத்தியில் மன்னார் மறை மாவட்டத்தில் உள்ளடங்கிய மன்னார், வவுனியா மாவட்டங்களில் இன,மத வேறுபாடின்றி தாய் தந்தையை இழந்த மற்றும் மிக வறுமையின் நிமித்தம் உள்ள 1000 இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவ மாணவிகளுக்கான கல்வி ஊக்கவிப்பு கொடுப்பனவுகளையும் அக் காலங்களில் பணியாற்றிய இயக்குனர்களின் சிறப்பான வழிநடத்தலுடன் வழங்கப்பட்டது. அத்தோடு 150இற்கும் மேற்பட்ட முன்பள்ளிகளை கிராம மட்டங்களில் பங்குத் தந்தையர்களின் ஒத்தழைப்புடன் நிறுவி அம் முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கான மாதாந்த சிறு ஊதியத்தினையும் வழங்கியதோடு சில அரச பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்கறை காணப்பட்ட போது அதனை நிவர்த்திசெய்வதற்காக தொண்டர் ஆசிரியர்களையும் உள்வாங்கி அவர்களுக்கான மாதாந்த சம்பளமும் வழங்கப்பட்டது. இன்றுவரை இப்பணியானது தொடந்து நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. கறிற்ராஸ் - வாழ்வுதயம் பல்வேறு விதமான திட்டம் சார்ந்த பணிகளை மேற்கொண்டாலும் அதில் உள்ளடங்கும் சில விசேட பணிகளை இதன்மூலம் கூற விரும்புகின்றேன்.

❖ இடம் பெயர்தோருக்கான உதவித்திட்டம் இறுதிப் போரிற்கு பின்னர் இடைத்தங்கல் முகாம்களில் உள்ள மக்களுக்கான உடனடி சமைத்த உணவு வழங்கலுடன் அவர்களுக்கான உலர் உணவு உப உணவுப் பொதிகள் வழங்கப்பட்டது இதில் சராசரி ஒருநாளைக்கு ரூபா 1.5 மில்லியன் ரூபா 05 மெனிக்பாம் இடைத்தங்கல் வலையங்களிலும் செலவு செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

❖ அபிவிருத்தி பணிகள் (யுத்த காலத்திலும், அதன் பின்னரும்) நிரந்தர வீட்டுத்திட்டங்கள், தற்காலிக வீடுகள் வழங்கல், மலசல கூடம் அமைத்தல், விவசாயக் கிணறுகள், குடிநீர் கிணறுகள், குழாய்கிணறுகள் அமைத்தல், அரச பாடசாலைகளில் மேலதிகமாக தேவைப்படும் வகுப்பறை கட்டிடங்கள் அமைத்தல், முன்பள்ளி பாடசாலை கட்டிடங்கள் அமைத்தல், கிராமத்தின் உள்ளக வீதிகள், பாலங்கள் அமைத்தல், போன்ற பல அபிவிருத்திசார் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

❖ வாழ்வாதார ஊக்குவிப்புக்கான மானியக் கொடுப்பனவுகள் மக்களின் மீள்குடியேற்ற காலங்களில் கடற்றொழில் மேற்கொள்வோருக்கான மீன்பிடி படகுகள் வெளி இணைப்பு இயந்திரங்கள், வலைகள், நன்னீர் மீன்பிடிக்கான குல்லா மற்றும் வலைகள், போன்றனவும் அத்தோடு, மாடுவளர்ப்பு, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, போன்றவற்றிற்காக மிருக வைத்திய சாலையின் அங்கீகாரம் பெற்ற கால்நடைகளும் இவை மட்டுமல்லாது, வீட்டுத்தோட்டம் மேற்கொள்வதற்கான நீரிறைப்பு இயந்திரங்கள், சிறுகடை வியாபாரத்திற்கான உதவிகள், சிறு குடிசைக் கைத்தொழில்களுக்கான கட்டிடங்களும் அதற்கான பண ஊக்குவிப்புக்களும், அத்தோடு மேலும் பல வாழ்வாதார உதவிகளும் வழங்கப்பட்டுள்ளது.

❖ வாழ்வுதய உதவிக்கரப்பிரிவு சார்ந்த பணிகள். உதவிக்கரப் பணியானது கறிற்ராஸ்-வாழ்வுதயத்தின் மிக முக்கிய பணிகளுள் ஒன்றாகவிருக்கின்றது. இப்பிரிவில் மேற்கொள்ளும் பணிகளாக Prosthetic Services, Orthotic Services, Patient follow up, Other Assistive devices, Physiotherapy Services, போன்ற பணிகள் ஆற்றக் கூடியவாறு அமைந்தது. இதன்மூலம் கடந்த யுத்தத்தினால் அவையவங்களை இழந்து அவதிப்பட்ட மக்களுக்கு மிகவும் பயனுள்ள பணியாக காணப்பட்டது. இத்தோடு வாழ்வுதயத்தில் இன்று வரை மேற்கொள்ளும் ஏனைய பணிகள்.

❖ தொழில் பயிற்சி வழங்கல் (கணினி)

❖ ஒருங்கிணைந்த முழு மனித அபிவிருத்திசார் விழிப்புணர்வுகள் (IHD-Civic)

❖ விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்கான விசேட கல்விப்பணி

❖ சர்வமத ஒண்றிப்பு செயற்பாடுகள்

❖ நீதி சமாதான ஆணைக்குழுவின் பணிகள்

❖ கிராமிய வலுவூட்டல் செயற்பாடுகள்

❖ உணவுப் பாதுகாப்பு செயற்றிட்டங்கள் (இயற்கையை பாதுகாத்து பேணல், நஞ்சற்ற உணவு செய்கையை ஊக்குவித்தல்)

❖ இந்தியாவிலிருந்து மீளவும் தாயகம் திரும்பிய



40வது ஆண்டு நிறைவை முன்னிட்டு மரநடுகை - இரத்ததான நிகழ்வு, மன்னார்.

மக்களுக்கான உதவித் திட்டம் குறிப்பாக உடனடி இருப்பிடத்திற்கான தற்காலிக வீடு வழங்கல் மற்றும் வாழ்வாதார மானியக் கொடுப்பனவுகள் வழங்கல் சிவில் ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கான பணக் கொடுப்பனவுகள் வழங்கல்.

❖ நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளின் வாழ்வாதார ஊக்கவிப்பிற்காக வருடாவருடம் சிறுபோகம் பெரும்போகம் போன்றவற்றிற்கும் வீட்டுத்தோட்ட முயற்சிகளுக்கும் சுழற்சிமுறை கடன் வழங்கல் போன்றவைகளும் கறிற்ராஸ்-வாழ்வுதயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனவே கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக இப்பணியகத்தின் மூலம் பயன்பெற்ற பயனாளிகளின் முன்னேற்றகரமான வாழ்வே எமது பணிக்கு சான்றாக அமைவதோடு கறிற்ராஸ்-வாழ்வுதயம் மன்னார் மறைமாவட்டத்தில் சமூக பொருளாதார ஆணைக்குழுவென்கின்ற வகையில் மறைமாவட்டத்தின் ஒவ்வொரு ஆண்டுக்குமான மேய்புப்பணித் திட்டமிடலுக்கேற்பவும் தனது பணிகளை திட்டமிட்டு செயற்படுத்தி வருகின்றது. இந்நேரத்தில் இந்நிறுவனத்திற்கு போசகர்களாக இருந்த ஆயர்தந்தையர்களுக்கும் இங்கு பணியாற்றிய அனைத்து இயக்குனர்களுக்கும் பணியாளர்களுக்கும் நன்றிகளை தெரிவிப்பதோடு எமது ஸ்தாபனம் இன்று ஆலவிருட்சம் போல் வளருவதற்கு நிதிப்பலத்தினை பெற்றுத்தந்து உறுதுணையாகவிருந்த Caritas-Sri Lanka ஸ்தாபனத்திற்கும் ஏனைய உள்ளுர் மற்றும் சர்வதேச நிதியாளர்களுக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகளை தெரிவித்து கொள்வதோடு இறைவனின் பாதுகாப்பும் வழிநடத்ததலும் என்றும் இந்நிறுவனத்திற்கு இருக்க இறைவனை வேண்டிகொள்கின்றேன்.


இறையேசுவில் என்றும்

**அருட்பணி செ.அன்ரன்.**
**இயக்குனர், கறிற்ராஸ்-வாழ்வுதயம், மன்னார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவு கூறுகின்றோம்..!

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | உதிர்வு |
|---|---|
| 19 | 05 |
| 09 | 01 |
| 1953 | 2020 |

அமரர்.
திரு.அந்தோனி சந்தான் பெர்னாண்டோ
வங்காலை

மங்காப் புகழுடன் வாரி வழங்கிட இம்மண்ணில் வந்துதித்த வள்ளலாம் தங்ககுணமுடைந்த வங்க மகனாம் சந்தான் பெர்னாண்டோ ஐயாவே நிலையான வாழ்வின் புகழ்தனை இம்மண்ணில் பெற்றுள்ளீர!. உடன் பிறப்புகளை உயிரென மதித்த உத்தமன் நீங்கள் தந்தை வழி தனயனாக வாழ்ந்து பலர் சிந்தை மகிழ உதவினீர்கள். இத்தனை மகிமைபெற்ற உங்கள் ஆன்மா இறைசந்நிதியில் இன்புற்று வாழ தினம் நாங்கள் இறைவனிடம் வேண்டிக்கொள்கின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 19 | 20 |
| 06 | 01 |
| 1947 | 2020 |

திருமதி. கிறுசாந்து திரேசம்மா
பெரியகுஞ்சுக்குளம், மருவீதி

எமைப் பிரிந்து இரண்டு ஆண்டு ஆனாலும் விழிகள் என்றும் கண்ணீரால் நிறைகிறது. அன்பின் இருப்பிடமாய், பண்பின் உறைவிடமாய், பாசத்தின் மகுடமாய், இகமதில் வாழ்ந்த எம் அம்மாவே! அனைவரையும் அன்புசெய்து அனைவராலும் அன்பு செய்யப்பட்டு நீங்கள் வாழ்ந்த அழகான வாழ்க்கைக்காக இறைவனுக்கு நன்றி சொல்கிறோம். உங்கள் அன்பான பேச்சும், ஆதரவு நிறைந்த அரவணைப்பும் இனி எப்போதும் கிடைக்குமென ஏங்குகின்றோம். எம் வாழ்நாட்களை வசந்தமாக்கி வீட்டுச் சென்ற வாடாத மலரம்மா. நீங்கள் நாள்தோறும் உன்முகம் காணாமல் நாங்கள் தவிப்பது உமக்குத் தெரிகிறதா அம்மா. சடுதியாக விடை சொல்லி நீ சென்று விட்டாய். எம் கண்கள் மட்டுமல்ல எம் உள்ளமும் அழுவதை நீ அறிவாயோ அம்மா. கருவினில் எம்மைச் சுமந்த உன்னை காலந்தோறும் எம் நெஞ்சினில் சுமந்திருப்போம் அம்மா! எப்போதும் ஆண்டவன் இல்லத்தில் அமைதியுடன் இளைப்பாற நிதமும் நாம் இறைஞ்சுகின்றோம் அம்மா!

உம் பிரிவில் நினைந்துருகும் : கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## 4ம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 13 | 24 |
| 07 | 01 |
| 1981 | 2018 |

திரு. மரியாம்பிள்ளை செபஸ்ரியான் (நிக்சன்)
இசைமாலைத்தாழ்வு

எம் அன்புச் செல்வமே! நீ எங்கேயிருக்கின்றாய் நீ இல்லாத வீடு வெறுமையய்யா. ஆண்டுகள் 3 மறைந்தாலும் உம் இழப்பு வேதனை தானய்யா. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நொடிப்பொழுதும் உன்னை நினைவுபடுத்திக் கொண்டே, நாம் தனிமையில் வாடும் நிலை. நீ இறக்கவில்லை, எங்களுக்காக பரிந்துபேச விண்ணகம் சென்றுவிட்டாயோ. உம் ஆன்மா இறைவனில் நித்திய இளைப்பாற்றியை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
தாய், தந்தை, அக்காமார், உற்றார், உறவினர்கள்

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 09 | 30 |
| 06 | 01 |
| 2000 | 2020 |

சி. வறூரணி கியூமன்
புதுக்கமம், உயிலங்குளம்

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (யோவா 11:25)

விலைமதியா செல்வொன்று விண்ணேறி சென்ற நாளோ! காலங்கள் விரைய கடந்ததையா ஈராண்டு. அழகான உன்முகம் அதில் அழியாத புன்னகை அதை ஏற்க மறுத்த அந்த பொல்லாத காலனுக்கு உன்மேல் காமம்தான் கூட உன்னை கவர்ந்து சென்றானோ ஏற்றுக்கொள்ள முடியவில்லை உன்பிரிவை என் சொல்லி ஆற்றுவேன் நம் தாய் தந்தையின் ஆறாத்துயரை ஏக உடன்பிறப்பாய் பிறந்து ஏன் என்னை தனியே தவிக்க விட்டுச் சென்றாய் செல்லமே இது உன் விதியா? இல்லை சதியா? எத்தனை துன்பம் வந்தாலும் உன் முகத்தை பூவாகவே வைத்தாய். ஆசைகளை உள்ளத்தில் சேர்த்தாய். அனைவரும் நன்றாக வாழ வேண்டுமென்று நினைத்தாய் இவை எல்லாம் அந்த காலனுக்கு பொறுக்க முடியவில்லையோ- தம்பி மீண்டும் எம் அழகிய குடும்பத்தில் நீ வரமாக வரவேண்டும். உம் ஆன்மா இறைவனில் இழைப்பாறி வான தூதரின் விரிசையில் சேர இறைவனை வேண்டுகின்றோம். சமாதானமாக இழைப்பாறுவாயாக.

உன் பிரிவின் துயரில்: அப்பா, அம்மா, அக்கா, அத்தான், உறவுகள்

## 5ம், 10 ஆண்டு நினைவஞ்சலி

"நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன"



மலர்வு
1962.01.23

உதிர்வு
2017.01.02



மலர்வு
1937.03.03

உதிர்வு
2011.11.08

திரு.S.மரியநாயகம்
ஒலிமடு, நானாட்டான்

திரு.S.மரியாம்பிள்ளை
வடக்குவிதி, நானாட்டான்

அன்புக்கு இலக்கணமாய்! பாசத்தின் பிறப்பிடமாய்! கள்ளமில்லா உள்ளத்துடன் பாரினில் வாழ்ந்தீர்கள் இத்தனை ஆண்டுகள் எம்மை விட்டு சென்றாலும் அகலுமோ! அப்பா உங்கள் நினைவு எண்ணிப்பார்க்க இயலாத ஏக்கத்தை எமக்களித்துவிட்டு எட்டாத்தூரம் சென்றீர்களோ! குழந்தையாக இருந்த பொழுது உம் அரவணைப்பிலும் பாதுகாப்பிலும் வாழ்ந்த நாட்கள் மீண்டும் வராதா என்று எம் இதயம் ஏங்குகிறது - அப்பா! நடந்தது எல்லாம் மறந்திடுமோ! அப்பா நீங்கள் காட்டிய பாதையில் நடக்கிறோம் அப்பா சமாதானத்தில் இளைப்பாறுங்கள் அப்பா

பிரிவால் துயருறும் : குடும்பத்தினர்

## 31ம் நாள் நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 01 | 06 |
| 04 | 12 |
| 1955 | 2021 |


ச.ஆசைநாயகம் (அன்ரன்)
பள்ளங்கோட்டை, நானாட்டான்

"நன்று நன்று நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே, சிறு பொறுப்புக்களில் நம்பிக்கைக்கு உரியவராய் இருந்தீர் எனவே பெரிய பொறுப்புகளில் உம்மை அமர்த்துவேன், உம் தலைவராகிய என் மகிழ்ச்சியில் நீரும் வந்து பங்குகொள்ளும்." (மத் 25:21)

அன்பின் குலவிளக்கே அப்பா, கரம்பிடித்த மனைவி கண்கலங்கி நிற்க. அன்பில் உருவான பிள்ளைகள் செய்வதறியாது பரிதவிக்க, பாசமான உடன் பிறப்புக்கள் உள்ளம் பதறி நிற்க, அருமையான மருமகள் உங்கள் அன்பை அனுபவிக்க முடியாமல் ஏங்கி நிற்க, ஆசைப் பேரக்குட்டி அப்பப்பா அப்பப்பா என்று கேட்க கொஞ்சும் மழலைக் குரலைக்கூட கேட்க முடியாமல் ஏன் அப்பா துடிதுடித்து பறந்து விட்டீர்கள். ஏன் மௌனமானீர்கள். குடும்பத்திற்கும், சமூகத்திற்கும், திருச்சபைக்கும் உங்களிடம் உள்ள தாலந்துகளை பயன்படுத்தி புன்னகை பூத்த முகத்தோடு எல்லாம் செய்து முடித்து விட்டேன் என்று ஆண்டவரிடம் விடை கேட்டு விட்டீர்களா? உங்கள் இழப்பை ஏற்க முடியவில்லையப்பா. இதுதான் விதி, இதுதான் ஆண்டவன் செயல் என்று நம்பி உங்கள் ஆன்மாவை அவர் கரத்தில் தந்துவிட்டோம், "அமைதியில் இளைப்பாறுங்கள் அப்பா".

பிரிவால் துயறுரும்: அன்பு மனைவி, பிள்ளைகள், மருமகள், பேரக்குழந்தை, சகோதர, சகோதரிகள், உற்றார், உறவினர்கள்

## 31ம் நாள் நினைவஞ்சலி



"வாழ்ந்தாலும், இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்கள்" [உரோ 14:8]

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1928.09.21 | 2021.12.18 |

அமரர். ம. சந்தாம்பிள்ளை
(ஓய்வுபெற்ற கிராம அலுவலர், ஆசிரியர்)
(முருங்கன்பிட்டி, முருங்கன்)

என்றும் எங்கள் அன்பின் ஐயா. இன்றுடன் நீங்கள் எம்மை விடடுப் பிரிந்து 31 நாட்கள் ஆகிவிட்டன. பெற்ற பிள்ளைகள் போன்று, பேரப்பிள்ளைகளாகிய எம்மேலும் நீங்கள் அக்கறை காட்டி, அன்பாக வழிநடத்தி நல்வழிப்படுத்தினீர்கள். நாங்கள் படிப்படியாக வளர்ச்சியடைந்து கொண்டு செல்லும் போது. உங்கள் நினைவும் எங்களுடன் தொடர்ந்து வளர்ந்து கொண்டே செல்கின்றது. உங்கள் செபத்தின் வல்லமை, இறை வல்லமையாக எம்மேல் பொழியப்படுவதை நாம் உணர்கின்றோம். உங்கள் விருப்பப்படி நாங்கள் வளர்வோம். உயர்வோம், வாழ்வோம் ஐயா எங்களுக்காக இறைவனிடம் மன்றாடுங்கள்.

பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்.
பேரப்பிள்ளைகள்: ஜோய், விஜய், நிரோஷினி, லக்ஷினி, மிசேல், டானியல், ராகுல், லக்ஷிக்கா, பிரியாங்கா, மரினோ, புறானோ, புளோறா, மிலிங்டன், மிலிங்டா எறிக்ஷா, ஜெனிக்ஷா, பூட்டப்பிள்ளைகள்: நித்தியா, அபி, அக்ஷனா, அகில், அஸ்வின், கெய்டின், சோபியா, ஜெய், மாயா, ஜடன், ஆஷா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுரைகள்

# ஈழத்தமிழருக்காகக் குரல்கொடுத்த தென்னாபிரிக்கப் பேராயர் டெஸ்மன்ட் டூட்டு

**அருட்பணி. தமிழ் நேசன் அடிகளார்**

ஒரு திருச்சபைத் தலைவராக, நிறவெறிக்கு எதிரான போராளியாக, மனித உரிமைச் செயற்பாட்டளராக, சமாதானத்திற்கான நோபல் பரிசைப்பெற்றவராக பேராயர் டெஸ்மன்ட் டூட்டு அவர்கள் உலகெங்கும் அறியப்பட்டவர். இவர் கடந்த டிசம்பர் 26ஆம் திகதி தனது 90வது வயதில் இறையடி சேர்ந்தார். தென்னாபிரிக்க நாட்டின் அங்கிலிக்கன் திருச்சபைப் பேராயரான இவர் தென்னாபிரிக்காவின் சிறுபான்மையினரான வெள்ளை இனத்தவரின் நிறவெறிக் கொள்கைக்கு எதிராக 1980களில் சாத்வீக வழியில் தீவிரமாகப் போராடிய துணிவுமிக்க ஒரு திருச்சபைத் தலைவர். 1984ஆம் ஆண்டு இவர் சமாதானத்திற்கான நோபல் பரிசைப் பெற்றுக்கொண்டார்.

தனது சொந்த நாடாகிய தென்னாபிரிக்காவில் தான் சார்ந்த கறுப்பினத்தவரின் உரிமைக்காக மட்டுமல்லாமல் ஏனைய நாடுகளில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் இவர் குரல்கொடுத்தார். எயிட்ஸ், காசநோய், தற்பாலினர் வெறுப்பு, திருநங்கை இனத்தினர், வறுமை, இனப்பாகுபாடு ஆகிய துறைகளில் தீவிரமாகப் பணியாற்றியுள்ளார். இவர் 'தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

இவர் 1931ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி பிறந்தார். கிங்ஸ்கல்லூரி, இலண்டன்பல்கலைக்கழகம் ஆகியவற்றில் கல்விகற்றார். 1955ஆம் ஆண்டு நொமொலீசோலியா சென்கான் என்ற பெண்ணை திருமணம் செய்து நான்கு பிள்ளைகளுக்கு தந்தையானார்.

இவர் தென்னாபிரிக்க அங்கிலிக்கன் திருச்சபையின் குருவாக 1961ஆம் ஆண்டு திருநிலைப்படுத்தப்பட்டார். 1976ஆம் ஆண்டு ஆயராக உயர்த்தப்பட்டார். கேப்ரவுன் மறைமாவட்டத்தின் ஆயராக 1986 தொடக்கம் 1996வரை பணியாற்றியுள்ளார்.

பேராயர் டூட்டு அவர்கள் ஈழத்தமிழருக்கு ஆதரவாகவும் இலங்கை அரசுக்கு எதிராகவும் தனது நிலைப்பாட்டை எடுத்திருந்தார். இவர் இலங்கைத் தீவில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் குறித்து நன்கு அறிந்திருந்தார். தமிழ் மக்கள் அனுபவித்த துன்பங்களை அறிந்திருந்தார். சிறிலங்காவின் பெரும்பான்மை சிங்கள சமூகம் தமிழ் மக்களுக்கான சமூக உரிமைகளை வழங்கத் தவறிவிட்டது என இவர் ஒருமுறை குறிப்பிட்டிருந்தார். கேப்ரவுணில் வெளியிட்ட அறிக்கையொன்றில் இவர் இவ்வாறு தெரிவித்துள்ளதாக இலண்டனில் இருந்து வெளிவரும் 'தமிழ் கார்டியன்' என்ற ஏடு 1997 ஆம் ஆண்டு செய்தி



வெளியிட்டிருந்தது. 2008ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமை பேரவையின் உறுப்பினராக இலங்கை தெரிவுசெய்யப்படுவதை நிராகரிக்குமாறு இவர் வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இவர் உட்பட மூன்று கண்டங்களைச் சேர்ந்த நோபல் பரிசுபெற்ற பிரமுகர்கள் இந்த வேண்டுகோளை விடுத்திருந்தனர்.

தென்னாபிரிக்காவின் பேராயர் டெஸ்மன்ட் டூட்டு, ஆஜென்ரீனாவின் அடொல்போ பெரஸ் எஸ் கியூவன், அமெரிக்காவின் ஜிம்மி காட்டர் ஆகிய நோபல் பரிசுகளை வென்றெடுத்த மூன்று பிரபலமானவர்களே இலங்கையின் மனித உரிமை மீறல் பதிவுகளின் அடிப்படையில் பேரவையின் உறுப்பினராக இலங்கை தெரிவுசெய்யப்படுவதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். இலண்டனில் வெளியிடப்படும் 'த கார்டியன்' பத்திரிகையில் 'இலங்கை மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தென்னாபிரிக்கப் பேராயர் டெஸ்மன்ட் டூட்டு தெரிவித்திருந்த விமர்சனம் வெளியாகி இருந்தது. ''இலங்கை அரச படையினரால் மேற்கொள்ளப்படும் கிரமமான மனித உரிமை மீறல்கள் மிகவும் பாரதூரமானவை எனவும், பரந்தளவில் சித்திரவதைகளும் நீதி விசாரணைக்கு புறம்பான படுகொலைகளும் இடம்பெற்றிருப்பதாகவும் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டோருக்கு அரசே பொறுப்பு" என்றும் குறிப்பிட்டிருந்தது. இவருடைய மனித உரிமைச் செயற்பாடுகளுக்காகவும், சாத்வீகப் போராட்டுடங்களுக்காகவும் பல சர்வதேச விருதுகளை இவர் பெற்றுள்ளார். நோபல் பரிசைவிட இன்னும் சில பரிசில்களும் இவரைத் தேடிவந்தன. 1986ஆம் ஆண்டு மனிதத்திற்கான ''அல்பேர்ட் சுவைட்சர்" பரிசையும், 1987ஆம் ஆண்டு ''பாசெம் இன் டெர்ரிச" பரிசையும், 1999ஆம் ''சிட்னி அமைதிப்" பரிசையும் 2005அம் ஆண்டு காந்தி அமைதிப் பரிசையும் பெற்றார். 2009ஆம் ஆண்டு இவருக்கு அமெரிக்கக் குடியரசுத் தலைவரின் ''சுதந்திரப் பதக்கம்" வழங்கப்பட்டது. தனது மேடைப் பேச்சுக்களையும், மேற்கோள்களையும் பல நூல்களாகத் தொகுத்துள்ளார்.

பேராயர் டூட்டு அவர்களின் மரணத்தை உறுதிசெய்த தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோச அவர்கள் கேப் ரவுணில் பேராயரின் உயிர் அமைதியாகப் பிரிந்ததாகக் கூறியுள்ளார். விடுதலைபெற்ற தென்னாபிரிக்காவை மக்களுக்கு வழங்கியவராக டெஸ்மண்டு டூட்டு வரலாற்றில் பதிவாகியுள்ளதாக ''சிறில் ரமபோச" தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

டெஸ்மண்ட்டு டூட்டு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அறியப்பட்ட தென்னாபிரிக்காவின் சிறந்த நபர்களில் ஒருவராகக் காணப்படுகின்றார். நாட்டின் கறுப்பின பெரும்பான்மையினருக்கு எதிரான வெள்ளையினத்தவர்களின் கொடூரமான ஒடுக்குமுறையை அவர் வெளிப்படையாக விமர்சித்திருந்தார். தென்னாபிரிக்காவின் வெள்ளை இனத்தவரின் சிறுபான்மை ஆட்சிக்கு எதிராக வன்முறையற்ற எதிர்ப்புப் பிரசாரத்தை மேற்கொண்டார். உறுதி, கருணை, பிறர் நலனில் அக்கறை கொண்டவராக இவர் திகழ்ந்தார் என தென்னாபிரிக்க ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தனது அனுதாபச் செய்தியில், "முன்னாள் பேராயர் டெஸ்மன்ட் டூட்டு அவர்கள் உலகம் முழுவதும் எண்ணற்ற மக்களுக்கு வழிகாட்டும் விளக்காகத் திகழ்ந்தவர். மனித கண்ணியம் மற்றும் சமத்துவத்திற்கான அவரது வலியுறுத்தல் என்னென்றும் நினைவில் கொள்ளத்தக்கது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ராயல் நாட்டவரால் காசாவில் கொல்லப்பட்ட பாலஸ்தீனர்கள்பற்றி விசாரிக்க ஐ.நா.வால் அனுப்பப்பட்ட குழுவுக்கு ஒரு யோசனை சொன்னார். "நிறத்தால் பாகுபடுத்தும் இந்நாட்டில் இருக்கும் உங்களது முதலீடுகளை திரும்பப்பெறுங்கள். இதனால் இழப்பு எங்களுக்குத்தான். அது அற்புதமான நோக்கத்திற்கான இழப்பு" என்றார். பேராயர் டெஸ்மன்ட் டூட்டு அவர்கள் ஆயர், இறையியலாளர், சமூக செயற்பாட்டாளர், நூலாசிரியர் என்று பன்முக ஆளுமையைக் கொண்டவர். இவர் நீதியின் குரலாக ஒலித்தவர். உற்சாகமூட்டும் உரையாளராகத் திகழ்ந்தார். சிறந்த நகைச்சுவையாளராகவும் விளங்கினார். இவருடைய பெருவாழ்வுக்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

ஞஞஞ

# கொரோனா முடக்கமும் நம்பிக்கை வாழ்வும்

**அருட்பணி. றெஜிஸ் இராஜநாயகம்**

ஆலய வழிபாடுகள், சடங்குகள் என்று நமது கிறிஸ்தவ வாழ்வில் பரம்பரை பரம்பரையாய் ஊறித் திழைத்த நம்மேல் கொரொனா கொடிய நோய் பெரும் பேரடியாய் வந்து விழுந்துள்ளது. நமது நம்பிக்கை வாழ்வு, காற்றில் பஞ்சாய் பறந்துவிட்டதே என்று ஏங்கித் தவிப்போர் நம்மில் எண்ணிலடங்கா. காற்றுப் போன பலூன்போல் செய்வதறியாது மூச்சுத்திணறுகின்றோம். ஆனால் இந்த முடக்கத்தினால் ஏற்பட்ட காலம் நமது நம்பிக்கை வாழ்வுபற்றி, சீடத்துவ வாழ்வுபற்றி ஆழமாக நாம் மீளாய்வு செய்ய இறைவன் நமக்குக் கொடுத்த நம்பிக்கை வாழ்வின் காலம், அருளின் காலம் அருமையான காலம்.

ஆண்டவர் இயேசுதாமே தமது சீடர் என்பவர் யார்? கிறிஸ்தவர்கள் என்ற நிலையில் நமது நம்பிக்கையை எவ்வாறு வெளிப்படுத்துவது என்று தெளிவாகக் கூறியிருக்கின்றார். யோவான் நற்செய்தி 15:12:13:35 சொற்றொடர்களில் "நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்கவேண்டும் என்பதே என் கட்டளை. நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்துகொள்வர்" என்று கூறுகிறார். எவ்வாறு நாம் ஒருவரையொருவர் அன்பு செய்யலாம் என்று இயேசுவே இரண்டு உவமைகள் மூலம் விளக்குகிறார். ஒன்று லூக் 10:25-37ல் வரும் நல்ல சமாரியர் உவமை. நல்ல சமாரியர் ஒரு குருவோ அன்றேல் ஒரு சமயப்பாற்றாளரோ அல்ல. அன்று வாழ்ந்த குருக்கள் சமயவாதிகளின் கண்களில் அவர் ஒரு தீட்டுப்பட்டவர். ஆனால், அவர் கடவுளுக்கு முன்னால் பிரமாணிக்கமானவர். தேவையில் வாடிய தனது அயலானை அன்பு செய்து அவருக்குப்போதிய அக்கறை காட்டியவர். வழிபாடுகள், சமயச் சடங்குகள் எல்லாம் நம்மை சமயப் பற்றாளர்களாக நம்பிக்கையாளர்களாக வாழ வழிவகுக்க வேண்டும், அருள்பாலிக்க வேண்டும். நமது நம்பிக்கை, நமது வாழ்வின் செயல்களால் நிருபிக்கப்பட வேண்டும். இயேசு காட்டிய மார்க்கம் ''இணைபிரியாத இறையன்பும் பிறர் அன்புமே. இயேசுதாமே மத். 7:21ல் "என்னை நோக்கி ஆண்டவரே, ஆண்டவரே" எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் நுழைவதில்லை என்று கூறுகிறார். திருத்தூதர் யாக்கோப்பு தனது திருமுகம் 2:14-17 சொற்றொடர்களில் "என் சகோதர சகோதரிகளே, தம்மிடம் நம்பிக்கை உண்டு எனச் சொல்லும் ஒருவர் அதைச் செயல்களிலே காட்டாவிட்டால், அதனால் பயன் என்ன? அந்த நம்பிக்கை அவரை மீட்கமுடியுமா? ஒரு சகோதரன் அல்லது ஒரு சகோதரி போதிய உடையும் அன்றாட உணவும் இல்லாதிருக்கும்போது, அவர்கள் உடலுக்குத் தேவையானவை எவற்றையும் கொடாமல் உங்களுள் ஒருவர் அவர்களைப் பார்த்து "நலமே சென்று வாருங்கள் குளிர்காய்ந்து கொள்ளுங்கள் பசியாற்றிக் கொள்ளுங்கள்" என கூறுவாராயின் அதனால் பயன் என்ன? அதைப் போலவே, நம்பிக்கையும் செயல்வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதாயிருக்கும்." என்று கூறுகின்றார்.

இரண்டாவதாக மத்.25:31-46 சொற்றொடர்களில் கிறிஸ்து கூறும் இறுதித் தீர்ப்பு. இறுதித் தீர்ப்பின்போது மனுமகன் ஆயர், அருட்தந்தையர்களோடு வரப்போவதில்லை. வந்து, அவர்:

நீர் தவறாமல் ஞாயிறு திருப்பலியில் பங்குபற்றினீர்
நீர் சிலுவைப்பாதையில் பிரமாணிக்கமாகக் கலந்துகொண்டீர்
நீர் திருச்செபமாலையை, திருப்புகழ்மாலையை ஒழுங்காகச் சொன்னீர்.
நீர் நற்கருணை ஆராதனையில் பக்தியாகப் பங்குபற்றினீர்
நீர் அந்தோனியார் திருநாளில் மகிழ்ச்சியாகக் கலந்துகொண்டீர்

என்று சொல்லப்போவதில்லை (இவற்றை நான் கூறும்போது தவறாக விளங்கி பிழையாக கருத்தில் கொள்ள வேண்டாம். இவை தேவையில்லை என்று நான் சொல்லவரவில்லை. நான் கேட்பது) இவை நம்பிக்கை வாழ்வை வாழ்வதற்கு நமக்கு அருள்பாலிக்கின்றனவா? அல்லது வெறுமையான வார்த்தைகளாக, வெறும் சடங்குகளாக நின்று விடுகின்றனவா என்று சிந்திப்பது மிக அவசியம். எத்தனை வருடங்களாக இவற்றைக் கடைப் பிடித்துள்ளோம்? எந்தளவுக்கு இவை நமது நம்பிக்கையை வாழ்வாக்கியுள்ளன? பழைய நற்கருணைப் பாடல் வரிகள் என் காதுகளில் ஒலிக்கின்ற உணர்வோடு நினைவை மீட்டுகின்றேன். "நிதமும் என்னில் வருகின்றீர் ஏனோ என்னில் மாற்றமில்லை?" இதனால்தான் வேதம் கூறுகிறது நாடெல்லாம் பாழாய்ப் போகிறது. ஏனென்றால் தன் இதயத்தின் ஆழத்தில் சிந்திப்பார் எவருமில்லை. இதைத்தான் கவிஞன் ஒருவன் பாடினான் "சிந்தனை செய் மனமே" என்று. கிரேக்க ஞானி சோக்கிரற்றீஸ் சொன்னார். ஏன்? எதற்கு? எப்படி? என்று கேட்டு வாழுங்கள். இவை அனைத்தையும் செய்வதற்கு ஆண்டவரால் கொடுக்கப் பட்ட அருமையான காலம் இந்த கொரோனா முடக்க காலம். மாறாக மனுமகன் வானதூதருடன் வந்து தனது வலப்பக்கத்தில் உள்ளவர்களைப் பார்த்து "நான் பசியாய் இருந்தேன், நீங்கள் உணவுகொடுத்தீர்கள். தாகமாய் இருந்தேன், என் தாகத்தைத் தணித்தீர்கள். அன்னியனாய் இருந்தேன், என்னை ஏற்றுக்கொண்டீர்கள். நோயுற்றிருந்தேன், என்னைக் கவனித்துக்கொண்டீர்கள். சிறையிலிருந்தேன், என்னைத் தேடிவந்தீர்கள்.

நீங்கள் மனிதத் தன்மையுடன், நேர்மையாளராய், கடின உழைப்பாளியாய், தாழ்ச்சியுள்ளவராய் இருந்தீர்கள் அதாவது நீங்கள் நம்பிக்கையாளராய், நம்பிக்கை நிறைந்தவராய் இருந்தீர்கள். "எனவே, ஆசி பெற்றவர்களே! தந்தையின் இல்லத்திற்கு வாருங்கள்" என்பார். பின்பு இடப்பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து, "சபிக்கப்பட்டவர்களே, என்னிமிருந்து அகன்று போங்கள். அலகைக்கும் அதன் தூதருக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற என்றும் அணையாத நெருப்புக்குள் செல்லுங்கள். ஏனெனில், நான் பசியாய் இருந்தேன் நீங்கள் எனக்கு உணவு கொடுக்கவில்லை தாகமாய் இருந்தேன், என் தாகத்தைத் தணிக்கவில்லை நான் அன்னியனாய் இருந்தேன், நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை. நோயுற்றிருந்தேன், சிறையிலிருந்தேன், என்னைக் கவனித்துக்கொள்ளவில்லை" என்பார். எனவே, இந்த கொரோனா முடக்கத்தின்போது நமது நம்பிக்கையே வாழ்வின் உயிர்நாடியாகும். சீடத்துவத்தின் முன்னுரிமைகள் எவை என்ற வினாவைக் கேட்டு, நமது நம்பிக்கை வாழ்வை இதய சுத்தியோடு மீளாய்வு செய்வோமா? மீளாய்வு செய்து, இறுதித் தீர்ப்பின்போது நாம் எப்பக்கம் நிற்கப்போகிறோம் என்பதை முடிவு செய்வோம். இறைவன் நமது அகக் கண்களைத் திறந்து, நம்மை உறுதிப்படுத்தி மனித நேயத்துடனும் பிறர் அன்புடனும் வாழச் செய்வாராக! இயேசு காட்டிய வழியைப் பற்றிக் கொள்வோம்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரைகள்

# யாழ். மறைமாவட்டத்தின் முதல் சுதேச ஆயர் ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.

அருட்பணி. J.C. அன்ரனிபாலா
யாழ் மறைமாவட்டம்

இதழ் - 01

யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட(மன்னார், அனுராாதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த அக்காலத் திருஅவையின் முதல் சுதேச ஆயரான ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.யின் (1901 - 1972) மறைவின் 50 வருடங்களை நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் (17 யூலை 2022) எமது இளையோர் சமூகமும் எதிர்கால சமூகமும் இவரது வாழ்வும் பணியும் பற்றி அறிய வேண்டும் என்பதற்காக விசேடமாகத் தனியார் பாடசாலைக் கல்வியே நல்லொழுக்கத்திற்கு அடிப்படை என்னும் இவரது கொள்கைப் பிடிப்புடனான வாழ்வும் பணியும் ஆறு தலைப்புகளின் கீழ் தொடர்கட்டுரையாகத் தரப்படுகின்றது.

கடந்து சென்ற வரலாற்றின் தலைவர்

முன்னுரை

காலனித்துவ ஆட்சியும் ஐரோப்பிய மறையறிவிப்பாளர்களின் ஆளுகையும் கைமாறியதொரு கடந்து செல்லும் 'பதின்மவயது' வரலாற்றின் தலைவராக யாழ். கத்தோலிக்கத் திருஅவையை இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து ஏறக்குறையக் கால்நூற்றாண்டு காலமாக வழிநடத்திய ஆயர் ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.யின் (1901 - 1972) தலைமைத்துவம் இக்காலத்தில் இலங்கைத் திருஅவைக்குக் கிடைத்த உறுதியான தலைமைத்துவமாகும். பிரித்தானிய ஆட்சியின் பின்பு இலங்கை அனுபவித்த தேசியமயமாக்கலின் முரண்பாடுகள் மத்தியில் இத்தீவிற்குக் கிடைத்த தூரநோக்குடன்கூடிய தலைமைத்துவமாகும். சுதேச மயமாக்கலின் பிரசவ வேதனைகள் நிறைந்த நிலையில் இருந்த யாழ் மாவட்டத்திற்குக் கிடைத்த மதிநுட்பமிக்க தலைமைத்துவம் ஆகும்.

யாழ். மறைமாவட்டத்தை இவர் பொறுப்பேற்ற 1950 - 1957 வரையான ஏழு ஆண்டு காலத்தை ஓரளவு மகிழ்ச்சியான காலமாகவும் 1958 - 1965 வரையான எட்டு ஆண்டுகளைக் கடந்து செல்லும் காலத்தில் முரண்பாடுகள், சவால்கள், திருப்பங்கள் நிறைந்த ஆண்டுகளாகவும் எஞ்சிய 1966 - 1972 வரையான மிகுதி ஏழு ஆண்டுகளிலும் புதிய உத்வேகங்களுடன் பழமைவாதிகளின் விமர்சனங்கள், புதுமை விரும்பிகளின் வரவேற்புக்கள் மத்தியில் வீறுநடை போட்ட காலமாகவும் காணப்பட்டது.

தலைமைத்துவத்தின் விளைநிலம்

போர்த்துக்கேயர் காலம் முதல் ஒல்லாந்தர் காலம் வரை வட இலங்கையின், முதல் மறைசாட்சியத்தளங்களாக முறையே மன்னாரும், யாழ்ப்பாணமும் விளங்கின. இக்கத்தோலிக்கப் பாரம்பரியத்திற்கு அணி சேர்த்தாற் போல் லெய்டன் தீவு எனப்படும் வேலணைப் பெருநிலப்பரப்பில் உள்ளடங்கிய ஊர்காவற்றுறை என்னும் பாரம்பரியப் பிரதேசம் அமைந்திருந்தது. தனது மதத்தின் உறுதிப்பாட்டின் சான்றாக எமிலியானுஸ்பிள்ளையை முதன்மையாகக் கொண்டு இத்தீவுப்பகுதியானது 1950 முதல் இன்று வரை ஆறு சுதேச ஆயர்களை, யாழ்ப்பாணம், மன்னார், திருகோண மலை, மட்டக்களப்பு மறைமாவட்டங்களில் பணிபுரிய வழங்கியுள்ளது. கரம்பன் கிராமத்தின் அந்தோனிப்பிள்ளை ஜேக்கப்பிள்ளை பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில், நீர்கொழும்பின் வென்னப்புவக் கிராமத்தில் வசித்து உல்லட்டியா தமிழ்ப் பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றினார். அந்தோனிப் பிள்ளை ஜேக்கப்பிள்ளை, இறப்பியேல் ஆனாப்பிள்ளை தம்பதிகளின் ஐந்தாவது பிள்ளையாக, எமிலியானுஸ்பிள்ளை 1901 யூலை 20 சனிக்கிழமை உல்லட்டியாவில் பிறந்தார். உல்லட்டியா புனித சவேரியார் ஆலயத்தில் அருட்பணி. ஜே.ஜே..மக்கார்த்தி அ.ம.தி.யால் திருமுழுக்கு பெற்றார். நான்காவது மகன் பெனடிக்ற் வென்செஸ்லாஸ் 29 வயதில் இறந்து போகத் துணைவியாரின் இழப்புடனும் தனது ஆசிரியப்பணி ஓய்வுடனும் தந்தையார், எமிலியானுஸ்பிள்ளை, பீற்றர்பிள்ளையுடன் கரம்பனில் குடியேறினார். எமிலியானுஸ் பிள்ளை 1912 ஜனவரி வரையும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும் 1912.02.06 - 1913.12.22வரை யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கல்வி கற்றார்.

"பிள்ளை" குடும்பப் புத்தி ஜீவிகளின் ஆளுமை

அமலமரித்தியாகிகள் சபையின் நூற்றிருபத்தைந்து ஆண்டுகள் இலங்கை மறைப்பணியில், ஊர்காவற்றுறையின் ஒரோயொரு தனிக்குடும்பத்தைச் சேர்ந்த 'பிள்ளை சகோதரர்கள்' மூவர் இணைந்து அறுபது ஆண்டுகள் பணியாற்றியுள்ளனர். அம்மூவரும் அருட்பணி. ஜோசப் கயித்தான்பிள்ளை, ஆயர் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை, அருட்பணி. பீற்றர் அல்காந்திராப் பிள்ளை ஆவார். இது பிள்ளை குடும்பத்தினரின் அர்ப்பணமிக்க ஆளுமைக்குச் சான்றாகும். 1914 ஜனவரியில் ஆரம்பமாகிய ஏழாம் வகுப்புத் தொடக்கம் பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் வரையும் இவரது சகோதரன் லூக்கிறகரி அருட்சகோதரரின் டிலாசால் சபையினர் நடாத்திய கொட்டாஞ்சேனை புனித பெனடிக்ற் கல்லூரியில் கல்வி கற்றமையும் 1924.04.24இல் குருத்துவ ஞாயிறு அன்று நிகழ்ந்த முதல் சகோதரன் யோசப் கயித்தான்பிள்ளையின் அர்ப்பணமிக்க சாவும், இறைபணிக்கு அர்ப்பணிக்குமாறு இவரையும் தூண்டியது. கொழும்பு பொரளையில் இரண்டாவது சகோதரர் ஸ்ரனிஸ்லொஸ் 1913 முதல் குடியிருந்த வீட்டில் கிடைத்த குடும்ப உறவின் சங்கமம், இவரது இளமைப் பருவத்தை வளப்படுத்தியது. ஸ்ரனிஸ்லொஸின் துணைவியார் அந்தோனிப்பிள்ளை திரேசியாவின் பராமரிப்பில் முதிய தந்தையாரின் ஆலோசனையோடும் இளையவர் பீற்றர்பிள்ளையின் விளையாட்டுத் துணையோடும் இவர் அங்கு தனது இளமைக் காலத்தைக் கழித்தபோது சிங்கள மக்கள் மற்றும் துறைசார் தலைவர்களுடனும் நல்லுறவை வளர்த்துக் கொண்டார். 1924இல் கொழும்பில் நிகழ்ந்த கொள்ளை நோயில் இறந்த கயித்தான்பிள்ளையின் சாவும் உடனடியாக நான்கு நாட்களுக்குள் அதே தொற்று நோயில் புனித வியாழன் அன்று (1924.04.28) இறந்த தந்தையின் சாவும் (எமிலியானுஸ் பிள்ளைக்கு வயது



21) பணிவாழ்வில் தம்மை ஏற்கெனவே ஈடுபடுத்தியிருந்த மூத்தவர்களைவிட இவரது பதின்ம வயதில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. இளையவர் விளையாட்டுப் பிள்ளையாக இருந்தார். ஆயினும் மூத்த சகோதரர்களின் ஆலோசனைகள் கைகொடுத்தன.

'பிள்ளை குடும்ப' முதன்மையானவர்களின் ஆளுமை

ஆங்கிலேய ஆட்சியிலிருந்து இலங்கை நாடு விடுதலையடைந்து ஐரோப்பிய ஆளுகையிலிருந்து இலங்கைத்திருச்சபை சுதேசமயமாக்கப்படவிருந்த வேளையில் தேசியமட்டத்திலும் திருச்சபை மட்டத்திலும் ஐரோப்பியர்களிடமிருந்து பொறுப்புக் களைக் கையேற்றுப் பணியாற்றிய முதல் சுதேசிகளாக இவர்கள் விளங்கினர். முதன்மையானவர்கள் என்று கூறும்போது, கயித்தான்பிள்ளை அ.ம.தி., சிறந்த அறிவாளியாகவும் கொழும்பு புனித யோசேப்பு கல்லூரி மாணவர்களின் சிறந்த ஆன்மிக இயக்குனராகவும் திகழ்ந்தார். ஸ்ரனிஸ்லொஸ், இலங்கை அரசாங்க நிதியமைச்சில் ஆலோசகராகவும், உதவிக்கணக்காளராகவும் கடமையாற்றிய முதல் இலங்கையராவார். லூக் கிரகரி, கொழும்பு புனித பெனடிக்ற் கல்லூரியின் முதல் சுதேச அதிபராகவும், டிலாசால் சபையின் முதல் சுதேச முதல்வராகவும் திகழ்ந்த அருட்சகோதரராவார். பீற்றர் அல்காந்திராப்பிள்ளை அ.ம.தி., இலங்கையிலும் பிரித்தானிய உலகிலும் முதல் மாணவராகச் சிறந்து விளங்கிய அறிவாளியாவார். சமூக, சமய சிந்தனையாளராகவும், கொழும்பு புனித யோசேப்பு கல்லூரியின் முதல் சுதேச அதிபராகவும், கொழும்பு பொரளை புனித அக்குயினாஸ் பல்கலைக்கழகத்தின் அமைப்பாளர்களில் ஒருவராகவும், முதல் துணைவேந்தராகவும் திகழ்ந்த இலங்கைய ராவார்.

இவரது குடும்பத்தை விமர்சிப்பவர்கள் 'பேரவா' கொண்டிருந்தனர் எனவும் சந்தர்ப்பவாதிகள் எனவும், எமிலியானுஸ்பிள்ளையும் இவ்வாறே தம்மை உயர்த்தினார் எனவும் கூறுகின்றனர். இக் குடும்பத்தினர் கொழும்பு வாழ் ஆங்கிலேய அரசு மற்றும் கத்தோலிக்க திருஅவைத் தலைவர்களுடன் கொண்டிருந்த நல்லுறவு காரணமாக இவ் விமர்சனம் எழுந்தாலும், இவர்களின் மேல் ஏனையோர் கொண்டிருந்த நம்பிக்கையும், நன்மதிப்பும், இவர்களின் கல்வித் தகமையும், நிர்வாகத் திறமையும் இதற்குக் காரணமாக அமைந்திருந்தன. எனவே இவர்களது முன்னேற்றத்தை 'பேரவா' என்ற சொல்லிற்குள் இலகுவாக அடக்கிவிட முடியாது. இப் பின்னணியில் வந்த எமிலியானுஸ்பிள்ளையும் இலங்கைத் திருஅவையில் ஒரே மறைமாவட்டத்தில் மூன்று விதமான பணிகளை வகித்த முதல் இலங்கையராவார். முதல் சுதேச யாழ். மாவட்ட இளம் அருட்பணி முதல்வராகவும் (குருமுதல்வர்), யாழ். மாவட்டக் கத்தோலிக்கப் பாடசாலைகளின் முதல் சுதேசப் பொதுமுகாமையாளராகவும் பணியாற்றியதோடு இலங்கை சுதந்திரமடைந்த வேளை ஐரோப்பிய மறையறிவிப்பாளர்கள் வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்ட போது யாழ். மறைமாவட்டத்தைப் பொறுப்பேற்ற முதல் சுதேச ஆயராகவும் திகழ்ந்தார்.

உயர் கல்வி மற்றும் அருட்பணி உருவாக்கம்

எமிலியானுஸ்பிள்ளையுடன் கொட்டாஞ்சேனை புனித பெனடிக்ற் கல்லூரியில் கல்வி கற்ற டிலாசால் சபையினர் பலர் இவரது மதிநுட்பத்துடன்கூடிய கல்வித்திறமை பற்றி வியந்து பாராட்டினர். கல்லூரியிலும், பல்கலைக்கழகத்திலும் கல்வியோடு விளையாட்டுத்துறையிலும் இவர் பெருமைதேடிக் கொடுத்தார். விசேடமாக இரு இடங்களிலும் உதைபந்தாட்டக் குழுவிற்குத் தலைமை வகித்திருந்தார். ஒக்ஸ்போட், கேம்பிறிட்ஜ் போன்ற பிரித்தானியப் பல்கலைக்கழகங்கள் பல பட்டதாரி இறைபணியாளர்களை உலகத்திருச்சபைக்கு வழங்கிய வேளை இலங்கைப் பல்கலைக் கழகமும் முதலில் இவரையே விஞ்ஞானப் பட்டதாரித் தலைவராக யாழ். திரு அவைக்கு வழங்கிப் பெருமை கொண்டது. இக்குடும்பத்தின் பாரம்பரிய வரலாற்றுப் பின்னணியை அறிந்த அந்நாள் யாழ். மறைமாவட்ட ஆயர் யூலியஸ் புறோ (1920-1923) இக் குடும்பத்தின் சேவை மறைமாவட்டத்திற்குத் தேவை என்பதை உணர்ந்து, ஜேக்கப்பிள்ளையிடம் தன் கோரிக்கையை இவ்வாறு முன்வைத்தார். "உமது மூத்த மகனை(வண. பிதா கயித்தான்பிள்ளை)கொழும்பு மறைமாவட்டத்திற்கு அர்ப்பணித்து விட்டீர், உமது அடுத்த மகன் எமிலை யாழ். மறைமாவட்டத்திற்கு அளித்தாக வேண்டும். அவர் திருமணம் செய்ய விரும்பினால் அவரது திருமணத்திற்கு நான் சமூகமளிப்பேன். ஆனால், அவர் கொழும்பு மறைமாவட்டக் குரவர் ஆவதாயின் அவரது குருப்பட்டாபிஷேகத்தில் நான் சமூகமளியேன்!"

தந்தையாரும் சற்றுத் தயக்கத்துடன் பேராசிரியர் ஊ. சுந்தரலிங்கத்தைப் பல்கலைக் கழகத்தில் சந்தித்தார். எடுப்பான தோற்றத்துடன் வந்தவரை, யாழ்ப்பாணத் தமிழன் என அடையாளம் கண்டவர், மகிழ்வுடன் உள்ளே வரவேற்றார். கலங்கிய கண்களுடன் "எனக்கு ஐந்து ஆண் மக்கள். அவர்கள் எல்லாரையும் உங்களுக்குத் தெரிய வேண்டும்.... மூவரும் திருச்சபையின் தொண்டுக்குத் தம்மை அர்ப்பணித்து விட்டார்கள். எமிலியானுஸ்பிள்ளையும் அவர்களின் பின்னாலே போகப் போகிறேன் என்று நிற்கிறார்." அழுகை வார்த்தைகளைத் தடுத்தன. "அவரின் இப்போக்கை நீங்கள் தடுக்க வேண்டும்...." என்று கூறி முடித்தார். "பெரியவரே நீர் கொடுத்து வைத்தவர். தனது பிள்ளைகளில் நால்வரை திருச்சபைக்கு அர்ப்பணிக்க இறைவன் வேறு எத்தந்தையையாவது பணித்திருக்கிறாரா?... அவர் செல்லவிரும்பும் பாதையில் முட்டுக்கட்டைபோட வேண்டாம்." எனப் பேராசிரியர் பதிலளித்தார். கவலையிருந்தாலும் எமிலியானுஸ்பிள்ளையை ஆயர் கேட்டவாறே தந்தை தரச் சம்மதித்தார்.

பட்டதாரியாகப் புனித மாட்டீனார் குருமடத்திற்கு வந்த போது அவ்வேளையில் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபரும் குருமட இயக்குனருமான அருட்பணி. ஜோண் அல்பிரட் கியோமார் அ.ம.தி.யால் வரவேற்கப்பட்டு அவரது வகுப்புத் தோழர்களான அருட்சகோதரர்கள் பி. சூசைப்பிள்ளை அ.ம.தி., ஜி.ஏ.குருசாமி அ.ம.தி., பி.ஜே. ஜீவரட்ணம் அ.ம.தி. ஆகியோருக்கு அறிமுகப் படுத்தப்பட்டார். 1924இல் (தந்தையின் இறப்பு 1924.04.28) இவர்கள் நவதுறவுப் பயிற்சிக்காக அ.ம.தி. சபையினரின் கொழும்பு, பம்பலப்பிட்டி புனித பிரான்சிஸ் சேவியர் நவத்துறவுப் பயிற்சியகத்தில் இணைந்த போது அங்கு கொழும்பில் இருந்து வந்து இணைந்தவர் பெஞ்யமின் தோமஸ் கூறே ஆவார். அதிபர் லூயிஸ் பரெட் அ.ம.தி.யால் நவதுறவு வகுப்புத் தலைவராக நியமிக்கப்பட்டார். பயிற்சி முடிவில் இவர் 1925 ஜனவரி 25இல் முதல் அர்ப்பண வாக்குறுதிகளை அளித்தார். நண்பன் கூறேயுடன் அறிமுக மெய்யியல், அறிமுக விவிலியப் பாடங்களைக் கொழும்பு புனித பேனாட் உயர் பயிற்சியகத்தில் கற்றனர். சபை முதல்வர்களால் மெய்யியல், இறையியல் கற்பதற்கு உரோமுக்கு 1926இல் அ.ம.தி.களின் அனைத்துலகப் பயிற்சியகத்திற்கு அனுப்பப்பட்ட முதல் மாணவர்கள் இவர்களே. மெய்யியல், இறையியல் படிப்பின்பின் எமிலியானுஸ் பிள்ளை 1928 ஜனவரி 25இல் நித்திய வாக்குறுதியைக் கொடுத்து 1929 யூலை 04இல் அங்கேயே அருட்பணியாளராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். பின்பு ஏறக்குறைய ஒரு வருடமளவில் தன் சக வகுப்புத் தோழர்களின் அழைப்பை ஏற்று இத்தாலிக்கும், பிரான்சுக்கும் சென்றிருந்தார்.

அடுத்த இதழில் தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கிய சாளரம்

## குழந்தைகளுக்கு காய்ச்சல் ஏற்படுவதால் உண்டாகும் வலிப்பு நோயும் முதலுதவியும்

ச.தேவசகாயம் - நியூயோர்க், USA

காய்ச்சலுடன் வரக்கூடிய வலிப்பு ஆறு மாதம் முதல் ஆறு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு வரும். மேற்கத்திய நாடுகளில் சுமார் நாலு சதவீதக் குழந்தைகளுக்கும், ஆசிய நாடுகளில் எட்டு முதல் பதினைந்து சதவீதக் குழந்தைகளுக்கும் காய்ச்சலுடன் வலிப்பு வருவதாக ஒரு புள்ளிவிவரம் தெரிவிக்கின்றது. பொதுவாக குழந்தைகளுக்கு அதிக அளவில் காய்ச்சல் வரும்போது மூளைக்குள் உள்ள நரம்புகளின் மின் ஓட்டம் அதிகமாகத் தூண்டப்படுவதன் காரணமாக வலிப்பு வருகின்றது. இவ்வாறு அதிக காய்ச்சல் வரும்போது ஏற்படும் வலிப்பானது தானாகவே நின்றுவிடும். அவ்வாறு ஒரு முறை காய்ச்சல் வந்தபின்னர் வலிப்பு வந்தால் ஒவ்வொரு முறை அதிக காய்ச்சல் வரும்போதும் வலிப்பு



வர வாய்ப்புண்டு என்பதைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். நமது கிராமங்களில் முதியவர்கள் சிசு வலிப்பு அல்லது சிறுபிள்ளை வருத்தம் எனக்கூறுவர்.

குழந்தைகளுக்கு சுவாசத்தொகுதி, சிறுநீர்த்தொகுதி, காது, தொண்டை என்பவற்றின் தொற்றுக்காரணமாக காய்ச்சல் ஏற்படலாம். ஆனால் அவை எல்லாம் இங்கு வலிப்பு என்ற உருவத்தில் வெளிக்காட்டப்படுகின்றது. குழந்தைகளுக்கு அதிகமாக காய்ச்சல் ஏற்படுவதனால் வலிப்பு ஏற்படுகின்றது. இது தொடர்பான விழிப்புணர்வினை குழந்தைகள் உள்ள பெற்றோருக்கு ஏற்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இவ்வாறு வலிப்பு ஏற்பட்ட குழந்தையில் பின்வரும் அறிகுறிகளை அவதானிக்க முடியும்:

1. அதிகளவான காய்ச்சல் காரணமாக உடல் அதிகளவான வெப்பமாகக் காணப்படும்.
2. குழந்தையின் உடல் தசைகள் இறுக்கமடைந்து உடல் பின்நோக்கி வளையும்.
3. முகம் சிவந்து காணப்படும்.
4. கண் மேல்நோக்கி செருகி வெள்ளை முழி தெரியும்
5. வாயிலிருந்து வெள்ளை நுரை வெளியேறும்.
6. பலவீனமாகி குழந்தை சுயநினைவினை இழக்கும்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் பின்வரும் முதலுதவி முறைகளைப் பின்பற்றுதல் அவசியமாகின்றது:

1. குழந்தையை நிமிர்ந்தவாறு படுக்க வைத்து, அதன் இருபக்கங்களிலும் தலையணை அல்லது துவாய் அல்லது தடிப்பான துணியினை மடித்து வைத்து பிள்ளையின் அசைவினால் வரும் ஆபத்தினைக் குறைக்கவும்.
2. *குழந்தையின் அசைவினை மட்டுப்படுத்த கை, கால்களை அமுக்கி பிடிக்கக்கூடாது.*
3. குழந்தையின் உடலினைக் குளிரப்பண்ணுதல் வேண்டும். இதற்காக குழந்தை அணிந்திருக்கும் மேல் ஆடைகளை களைந்து விடவும்.
4. உடல் வெப்பத்தை குறைப்பதற்கு ஒரு பாத்திரத்தில் சாதரண நீரை எடுத்து அதில் துவாய் அல்லது மெல்லிய துணியினை நனைத்து அதனை நன்றாக பிழிந்து பின்னர் அந்த ஈரமான துணியினால் குழந்தையின் நெற்றியிலிருந்து உடல் முழுவதும் துடைக்கவும். இவ்வாறு துடைத்துக்கொண்டு உடலின் வெப்பநிலையைப் பரிசோதிக்கவும். உடலின் சாதரண வெப்ப நிலையான 98.4F வந்துள்ளதா என்பதை அவதானிக்கவும்.


1. வலிப்பு நின்றவுடன், குழந்தையின் சுவாசப்பாதை, சுவாசம், இதயத்துடிப்பு என்பவற்றை பரிசோதிக்கவும்.
2. குழந்தையின் சுவாசப்பாதை சீராக, சுவாசித்துக் கொண்டும் இருக்குமாயின் குழந்தையினை பக்கவாட்டில் சரித்து சற்று தலையினை நிமிர்த்தி அருகில் உள்ள படத்தில் காட்டியவாறு மயக்க மீள் நிலைக்குத் திருப்பவும்.
3. பெற்றோர் அல்லது கூட இருப்பவர்கள் சுவாசம், நாடித் துடிப்பினை பரிசோதித்துக்கொண்டு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லவும்.
4. சுவாசம் நடைபெறாது இருக்குமாயின் உடனே இதய சுவாச தொழிற்பாடான மீளவுயிர்ப்பித்தல் செய்முறையினைச் செய்யவும். *(இதனை முறையாகப் பயிற்சி பெற்ற ஒருவரால்தான் செய்ய முடியும் என்பதைக் கருத்தில் கொள்ளவும்.)*
5. விரைவாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லவும்.

குறிப்பாக குழந்தைகள் உள்ள வீடுகளில் கட்டாயமாக காச்சலின் அளவினைப் பார்க்கும் காச்சல்மானி வைத்திருப்பது அவசியமாகும்.

குழந்தைக்கு வலிப்பானது முதல்முறையாக வந்து உடனடியாக சாதாரணநிலைக்கு வந்தாலும் கட்டாயம் வைத்திய ஆலோசனை பெறவேண்டும் என்பதை நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

ஒருமுறை காய்ச்சல் அதிகமாகி வலிப்பு வந்திருப்பின். மீண்டும் காய்ச்சல் வரும்போதெல்லாம் வலிப்பு வர வாய்ப்பு உள்ளதென்பதை நினைவில் கொண்டு அதற்கு ஏற்ப குழந்தையின் உடல் வெப்பத்தினைக் குறைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## மன அழுத்தத்தை நீக்கும் தியான முத்திரை




மனதில் கவலை, துக்கம், மன அழுத்தம் இருந்தால் நுரையீரல் இயக்கம் பாதிக்கப்படும். எனவே தியான முத்திரை செய்தால் மன அழுத்தம் நீங்கும். கவலை நீங்கும். அதனால் நுரையீரல் சக்தி பெற்று இயங்கும்.

செய்யும் முறை:

நிமிர்ந்து விரிப்பில் அமரவும். முதுகெலும்பு நேராக இருக்கட்டும். விரிப்பில் அமர முடியாதவர்கள் நாற்காலியில் நிமிர்ந்து அமர்ந்து செய்யலாம். இயல்பாக நடக்கும் சுவாசத்தை பத்து வினாடிகள் கண்களை மூடி கவனிக்கவும். பின் கண்களை திறந்து இடது கை கீழ் அதன்மேல் வலது கை வைத்து இரண்டு பெருவிரல்களும் ஒன்றையன்று தொடுமாறு வைக்கவும். சாதாரண சுவாசத்தில் ஐந்து நிமிடங்கள் இருக்கவும். பின் இயல்பான நிலைக்கு வரவும். ஒவ்வொரு மனிதனும் தனது நுரையீரலை பாதுகாக்க காலை, மாலை இருவேளை இந்த முத்திரைகளை செய்து வளமாக வாழுங்கள்.

இன்றைய சூழ்நிலையில் நுரையீரல் இயக்கம் நன்றாக இருந்தால் தான் எந்த ஒரு வைரசும் தாக்காமல் நாம் வளமாக வாழ முடியும். நுரையீரல் தான் அசுத்த காற்றை வெளியேற்றவும், உடலுக்குத் தேவையான பிராண சக்தியை அளிக்கவும் பயன்படுகின்றது. நிறைய நபர்கள் தொற்றுநோய் காலத்தில் ஒட்சிசன் பற்றாக்குறையால் மூச்சுத் திணறல் ஏற்பட்டு இறந்தார்கள். எனவே ஒவ்வொரு மனிதனும் நுரையீரல் நன்கு இயங்கச் செய்யும் முத்திரையை பயில்வது அவசியமாகும்.

## கொரோனாவை கட்டுப்படுத்துமா சிட்ரஸ் பழங்கள்?




ஓரேஞ்சு மற்றும் கொய்யாப் பழங்களை விரும்புவோருக்கு, குளிர்காலம் ஏற்ற பருவமாகும். இந்த சிட்ரஸ் பழங்கள் வாசனை, சுவையை தருவதோடு மட்டுமின்றி சிறந்த ஊட்டச்சத்துக்களையும் அளிக்கின்றன. எலுமிச்சை, நெல்லிக்காய், மொசாம்பி, கிவி போன்ற சிட்ரஸ் பழங்களையும் ருசிக்கலாம். கொரோனா பரவலுக்கு பின்பு சிட்ரஸ் பழங்களை அதிகம் சாப்பிடுமாறு மருத்துவர்கள் அறிவுறுத்தினார்கள். ஏனெனில் இவை நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்யக்கூடியவை.

கொரோனா, தடிமல், காய்ச்சல் போன்ற தொற்று நோய்களிலிருந்து உடலைப் பாதுகாக்கும் பணியை நோய் எதிர்ப்பு அமைப்பு மேற்கொள்கிறது. அதற்கு சிட்ரஸ் பழங்கள் உதவும். சிட்ரஸ் பழங்கள் வீக்கத்தை தடுப்பதாக அறியப்படுகிறது. கீழ்வாத நோயாளிகளுக்கு பயனுள்ளதாக இருக்கும். பல்வேறு வகையான புற்றுநோய்களில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு நிறைய சிட்ரஸ் பழங்கள் உட்கொள்ள வேண்டும்.

குளிர்காலத்தில் சருமம் வறட்சி அடைவது இயல்பானது. ஈரப்பதத்தை தக்க வைப்பதோடு சருமத்திற்கு பளபளப்பு சேர்க்கும் தன்மையும் சிட்ரஸ் பழங்களுக்கு உண்டு. சிட்ரஸ் பழங்கள் கொலாஜன் உற்பத்தியை அதிகரிக்கக்கூடியவை. வயதான தோற்றத்தை தடுக்கக்கூடிய தன்மையும் கொண்டவை. எனவே முதுமையை தள்ளிப்போடுவதற்கு சிட்ரஸ் பழங்களை நிறைய சாப்பிடுங்கள்.

சிட்ரஸ் பழங்களில் ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளன. அவை ஆரோக்கியத்தை பேணுவதற்கு உதவும். நல்ல ஆரோக்கியமான உடல், உள நலனை கொண்டிருந்தால் நோய்த்தொற்றுகளில் இருந்து தற்காத்துக்கொள்ள முடியும். நோய்வாய்ப்பட்டாலும் கூட விரைவாக குணமடைந்துவிடலாம்.

சிட்ரஸ் பழங்கள் குறைந்த கலோரிகள் கொண்டவை. எனவே அவை ஒரு புறம் உடல் எடையைக் குறைக்கவும், மறுபுறம் ஆரோக்கியம் காக்கவும் உதவும். செரிமான பிரச்சினை உள்ளவர்கள் சிட்ரஸ் பழங்கள் சிறந்த தேர்வாக அமையாது. மேலும் காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடவும் கூடாது.

## மாதோட்டத்தின் சிறப்பு

நீர் வளமும் நிலவளமும், கலை வளமும் நெற்பொதிகையும் நிறைந்தது எம் மாதோட்டம், முன்னோர்கள் கலைத்துறையிலும் நாடகத்தறையிலும் சரித்திர நாடங்களை வாசாப்பாக நடித்து கலையை மென்மேலும் மெருகூட்டி வந்தனர்.

வந்தாரை வரவேற்று பண்பாக உபசரித்து பழங்கதைகள் கூறி அளவளாவி உறவை மேலும் ஒருபடி உயர்த்துவார்கள். எமது கிராமங்களில் இடம்பெறும் ஆலயத்திருவிழாக்களும் திருமண வைபங்களும் இறப்பு நிகழ்வுகள் அனைத்திலும் எம் உறவுகள் ஒருமித்த ஒற்றுமையாக செயல்படுவார்கள் விவசாயத்தில் எம் மக்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவர்கள். எமது மூதாதையர் காலத்தில் ஏர்பூட்டி உழுவதும் பலகை அடிப்பதும், கால் பரவுதலும் ஒருகை கண்ட கலை விதைத்த நெல் மணிகள் பயிராகி வளர்ந்து, விளைச்சல் தரும் வரை எம்மக்கள் காத்திருப்பர் இரவு பகலாய் கண்விழித்து நீர் பாய்ச்சுவதில் ஆர்வமுடன் செயல்படுவர் அறுவடையானதும் தாக்கத்தி கொண்டு விளைந்த வேளாண்மையை அறுப்பார்கள் அதை பக்குவமாய் உலரவிட்டு புரட்டி கட்டுக்கட்டாக கட்டி தலையில் வைத்து சுமந்து செல்வார்கள். சிலர் சூடாகவும் குமிப்பார்கள் இயந்திரத்தாலும் எருதுகளாலும் கதிரை அடிப்பார்கள் நெல் வேறாகவும் வைக்கோல் வேறாகவும் தரம் பிரிப்பார்கள். நெல்லை பூசல் கொண்டு அளப்பார்கள். முதல் முதலில் நெல்லை வீட்டுக்குக் கொண்டு செல்லும் போது வேத முறைப்படி செபித்து விளக்கேற்றி சில நிமிடங்கள் அறையில் கொட்டி விடுவார்கள் இவை காலம்காலமாக நடைப்பெற்ற இனிமையான சம்பவங்கள்.

ஆக்கம்
யேசுதாசன் (ஐடா)
புத்திரர் கண்டான், முருங்கன்.

## கிறிஸ்துவின் அன்பு



உலகமெல்லாம் திரண்டு நின்று என்னை எதிர்த்தாலும்
ஊரெல்லாம் ஏளனச்சிரிப்பு சிரித்தாலும்
இதயம் உதிரக் கண்ணீர் சிந்தினாலும்
சூழ்ச்சி செய்ய மனிதர்கள் கூடி என்னை வீழ்த்த
தோல்விதனை நான் அடைந்து. வெட்கமுற்று
தலை குனிந்தாலும்
கிறிஸ்துவின் அன்பில் இருந்து என்னை பிரிப்பது யார்

வன்னியூர் வளநிதா
தூய பரலோக அன்னை ஆலயம்
பெரிய கோமரசன் குளம், வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் களம்

## உழவர் திருநாளாம் தைப்பொங்கல்

பொங்குக! பொங்கு நன்றியால் பொங்குக!
இறைவன் தந்த நிலத்தை எண்ணி
நிலம் அளித்த விளைவை எண்ணி
இயற்கை படைத்த எழிலுக்காக
விதவிதமாய் வித்திட்டு விந்தைகள் பல
புரிந்து வைத்த இறைவன் பால் பொங்குவோம்
செந்நெல் அரிசி குத்தி
செங்கரும்பு சாறு எடுத்து
மங்களப் பொருட்களோடு
மண்பானை அடுப்பில் ஏற்றி பொங்கல் வைப்போம்
தோறணங்கள் தொங்கவிட்டு
வாழைநட்டு வண்ணம் போட்டு
அறுசுவையோடு பொங்கல் பொங்குவோம்
உவகை பொங்க பொங்குவோம்
உள்ளம் மகிழ பொங்குவோம்
பொங்கலோ! பொங்கல்




**திருமதி ஜடா யேசுதாசன்,**
**புத்திரர் கண்டான், முருங்கன்.**

## இயேசுவிடம் ஒரு வரம் கேட்பீரா!

*அசிசி நகரில் உதயமான நட்சத்திரமே!*
*எங்கள் நாயகன் பிரான்சிஸ் அசிசியாரே!*
*ஐந்து திருக்காய வரம் பெற்று*
*திரு அவையில் மறு கிறிஸ்து என அழைக்கப்பட்டவரே!*

*தந்தையின் வியாபாரத்தை ஏற்று*
*நல்ல முறையில் கொண்டு சென்றவரே!*
*சிறு பிச்சைக்காரனை கூட விரட்டினாலும்*
*அவரை மீண்டும் அழைத்து வாரி வழங்கியவரே!*

*எவ்வளவு பணம், பொருள், புகழ் இருந்தும் இயேசுவுக்காக*
*தன் ஆடையை கூட இழந்து வெறுமையானாரே!*
*ஏழைகள், அயலான், விலங்குகள், தாவரங்கள்*
*போன்றவற்றை தன் சகோதரானாக கருதியவரே!*

*தன்னையும் பிறரையும் அமைதியின் தூதுவனாய்*
*மாற்றுவதற்கு நாவினால் செபத்தை உச்சரித்தாரே!*
*முதன் முதலான பாலன் குடிலை உருவாக்கி*
*இயேசுவின் பிறப்பை நினைவு கூர்ந்தவரே!*

*தன் பக்தியால் பாடுபட்ட சுரூபத்தை பார்த்து*
*சிலுவைப் பாதை எனும் வாழ்வை மலரச் செய்தவரே!*
*மிகவும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்து*
*ஏழைக் கிறிஸ்துவை பின்பற்றியவரே!*

*இறைவனுக்கு ஊழியம் புரிய வேண்டு மென்று*
*புதிய பிரான்சிஸ்கன் சபையை நிலை நாட்டியவரே!*
*எனக்கும் ஒரு ஆசை உம் வழியாய் புனிதனாக*
*இயேசுவிடம் ஒரு வரம் கேட்பீரா!*

**து.மதுமிதா - சிறுத்தோப்பு பங்கு.**

## கன்னி மரியே!



இறைவனின் தாயாகும் பெரும் பேறுபெற்றவளே!
இறைவனால் எமக்கு அன்னையாக அருளப்பட்டவளே!
இறைவன்பால் ஈர்க்கச் செபமாலையைத் தந்தவளே!
இறைதிருவுளத்தை ஏற்க எமக்குக் கற்றுத்தந்தவளே!

இந்நாள் வரை அரவணைத்து எம்மைக் காத்தவளே!
இடுக்கண்ணுற்ற வேளையில் கூடவிருந்து ஆறுதலளிப்பவளே!
இகபர நன்மைகள் பலவற்றை எமக்கு அருள்பவரே!
இத்தரணி வாழ் மக்களின் பாசமிகு தாய்மரியே!

இருப்பதில் நிறைவு காண எமக்குக் கற்பித்தவளே!
இறுதியில் மீட்படைய எமக்கென்றும் உதவுபவளே!
இல்லையென்று சொல்லாது வாரி வழங்க எமக்கு வித்திட்டவளே!
இறைவனின் துணையை எமக்குப் பெற்றுத் தருபவளே!

இழந்த வாழ்வை மீண்டும் பெற்றுக் கொடுப்பவளே!
இருளான எம் வாழ்வில் ஒளியைத் தருபவளே!
இச்சைகளை அடக்கிட எமக்குதவி புரிபவளே!
இன்பத்தை எமக்குத் தாராளமாகப் பொழிபவளே!

இடர்களைத் தகர்த்தெறிந்து எம்மை என்றும் காப்பவளே!
இம்மையிலும் மறுமையிலும் வாழ்வளிக்கும் தாய்மரியே!
இளைப்பாறுதலை எம்மனைவருக்கும் பெற்றுத்தருபவளே!
இறைவனிடம் எப்பொழுதும் எமக்காய் பரிந்துபேசுபவளே!

2021 இல் எம்மைப் பாதுகாத்த எம் அன்னையே!
இம் மாபெரும் புத்தாண்டு 2022 இலும் நீரே,
இறைவனிடம் எமக்காகப் பரிந்துபேசி,
இக் கொரோனா கொள்ளை நோயிலிருந்தும் காத்தருளும் தாயே!
"இறைவனின் தாயே! புனித கன்னிமரியாளே!
எமக்காய் என்றும் பரிந்து பேசிடுமே!"

**அபிஷானி ஜெனிங்ஸ்**
**24/7 குழந்தையேசுப்புரம், மன்னார்.**

## எங்கள் முதற் குரு முதல்வர்

எங்கள் முதற் குருமுதல்வர்
அருட்பணி சேவியர் குரூஸ் அடிகளார்
"முதல்" என்பதற்கு எப்போதுமே பெறுமதி அதிகம்
இருபத்தைந்தாண்டுகள் எம் குரு முதல்வராய்
எம்மை வழிநடத்தினீர்கள்
மடுத்திருப்பலியில் நீங்கள் சொல்லும்
"பரலோக பூலோக இராக்கினியே"
பிரியாவிடை செபத்தின் உருக்கம்
இன்றும் எம் மனங்களில் ...
உங்கள் இலத்தீன்
தமிழாய் இனிக்கும் தந்தையே!
மன்னாரின் துயர்துடைக்க
மறுவாழ்வு சங்கத்தில் பணியாற்றினீர்கள்
"நிதானத்திற்கு உதாரணம் சேவியர் குரூஸ் அடிகளார்"
அருட்பணியாளர்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம்.
நன்றி செல்கிறோம் தந்தையே!
அறுபதாண்டுகள் நீங்கள் எமக்காற்றிய
ஆன்மீகப் பணிகளுக்காக
வாழ்த்துகிறோம் தந்தையே!
ஆயிரம் பௌர்ணமிக்கும்
அதிகம் காணுங்கள்
மடு அன்னையிடம்
உங்களுக்காய் வேண்டுகின்றோம்.

**ஜெயாபாலாஜி - முருங்கன்.**

## தந்தையரைப் போற்றுவோம்

கருவில் தன் குழந்தை
உருவான செய்தி கேட்கின்ற போது
மனமகிழ்கின்ற தந்தை
சிந்திக்கத் தொடங்குவார்
அன்றே செலவுகள் பற்றி
பிரசவ செலவுகள், பாடசாலை செலவுகள்,
உணவு, உடை, திருமண செலவுகள்
பார்த்துப் பார்த்துச் செலவு செய்வார்
நம் தந்தை பார்த்துக் கொள்வோம் அவரைப்
பக்குவமாய் தள்ளுவண்டி வாங்கித்தந்து - நம்மைத்
தள்ளித் தள்ளி நடை பழக்கியவர்
தள்ளாத வயதில் அவரின்
துணையாய் இருந்திடுவோம்
கொடுக்க மட்டுமே தெரிந்தவர் நம் தந்தை
கேட்டுப் பெறத் தெரியாதவர்
அவர் கேட்காமலேயே
அவரது தேவைகளை நிறைவு செய்வோம்
நம்மைத் தூக்கிச் சுமந்தவர்
பலவீனத்தில் பலமாய் அவரின் பக்கத்தில் இருப்போம்
பாதுகாப்பதிலும் பராமரிப்பதிலும்
வளனாரின் வாரிசுகள் அவர்கள்
அப்பன் இல்லாவிட்டால் தெரியும் அப்பன் அருமை
அப்போது தெரிந்து பயனேதும் இல்லை
இருக்கும் போதே உணர்வோம் அவர் பெருமையை
தந்தையரைப் போற்றுவோம், தரணியர் நாமனைவரும்
தந்தையரே வாழி நீவீர்! வாழிய வாழியவே!



**ஜெயாபாலாஜி - முருங்கன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.227

## எசேக்கியேல் (அதிகாரம் 9 முதல் 16 முடிய)

உங்கள் விடைகளை மாசி மாதம் 18ம் திகதிக்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | | | | | 03 | | | | 04 | |
| | | | | | ✱ | | | 05 | | |
| | | | | 06 | | | | | | |
| 07 | | | 08 | | | | | | | 09 |
| | | 10 | | | | | | | 11 | |
| | | | 12 | | | | ✱ | | | |
| | 13 | | | | | ✱ | 14 | | | |
| | | | ✱ | ✱ | | | | 15 | | ✱ |
| | | | | | 16 | | | | | |
| 17 | | 18 | | | | | | ✱ | ✱ | 19 |

### இடமிருந்து வலம்

1. பெருமூச்சு விட்டுப் புலம்பும் மனிதர்களுக்கு நெற்றியில் ........................................ இடு.

6. அவற்றின் முகச்சாயல் கெபார் ஆற்றோரம் நான் கண்ட முகங்களைப் போன்றே ........................................

8. ஏதாவது வேலை செய்ய அதிலிருந்து ............................ எடுக்கப்படுகிறதா?

10. இதோ ஆறு ஆள்கள் ................................ நோக்கி இருக்கும் மேல் வாயிலின் வழியாக வந்தனர்.

12. நீங்கள் அவர் ............................... நகரெங்கும் சுற்றிவந்து தாக்குங்கள்.

13. ............................... எரிந்து கருகிய அதை எந்த வேலைக்காவது பயன்படுத்த முடியுமா?

16. அவற்றின் முகச்சாயல் கெபார் ........................... நான் கண்ட முகங்களைப் போன்றே தோன்றிற்று.

18. அந்தப் ............................... நான் ஒரு முடிவு கட்டுவேன்.

### மேலிருந்து கீழ்

1. சுழல் சக்கரங்கள் என்று அவை ..............................ப் பட்டதை நான் கேட்டேன்.

2. கெருபுகளின் நடுவிலுள்ள நெருப்புத் தணலைக் .................. வாரி நகரின் மீது வீசு.

4. இஸ்ரயேலில் எஞ்சியிருப்போரை முற்றிலும் .......................ப் போகிறீரா?

7. நீ.......................... நாளிலேயே வெறுத்து ஒதுக்கப்பட்டாய்

9. நான் உன்னை நீராட்டி உன் மேலிருந்த இரத்தத்தைக் கழுவித்............................. உனக்கு எண்ணெய் பூசினேன்.

10. உன்னை வயல் வெளியில்............................. பயிர் போல் உருவாக்கினேன்.

11. சக்கரத்துக்குள் ......................... இருப்பது போல் தோன்றின.

13. அவர்கள் நெருப்பிலிருந்து தப்பிச் சென்றாலும்......................... அவர்களைச் சுட்டெரிக்கும்.

### வலமிருந்து இடம்

2. ஆண்டவர் நாட்டைக் .............................விட்டார்.

3. அப்போது ஆண்டவரது ஆவி என்மீது ......................... (இறுதி எழுத்து முதலாவது எழுத்துக்குப் பின்னே உள்ளது)

4. அப்போது நானே ஆண்டவர் என்பதை ..................... கொள்வீர்கள்.

5. சுவரில் துளையிட்டு அதன் ..................... அவற்றை வெளிக் கொணர்வாய் (2ம் எழுத்து 1ம் எழுத்துக்கு பின்னால் உள்ளது)

9. ஏனெனில் அவர்கள் நம்பிக்கைத்.............................. செய்துள்ளனர். (2ம் 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)

11. என் .....................த் தன்மை உன்னை விட்டு அகன்றுவிடும்.

15. ....................... ஆண்டவரின் வாக்கு எனக்கு அருளப்பட்டது.

16. .................. அவர்களுள் சிலரை வாளுக்கும் பஞ்சத்துக்கும் கொள்ளை நோய்க்கும் இரையாக்காமல் விட்டு வைப்பேன்

### கீழிருந்து மேல்

6. அவை நான்கும் ஒரேவித........................... கொண்டிருந்தன

8. என் மக்களிடையே எனக்குக் ..................... விளைவிக்கிறீர்கள் (குழம்பியுள்ளது)

10. இஸ்ரயேல் வீட்டாரின் இதயங்கள் அனைத்தையும் நான் என் .........................க் கொள்வேன்.

13. இதோ அது ........................... இரையாகப் போடப்படுகிறது.

15. பின்னர் நான் கண்ட ..............என்னை விட்டு அகன்றது.

17. இரத்தத்தில் .................உன்னை நோக்கி வாழ்ந்திடு என்றேன்.

19. என் .......................நெறிகளை நீங்கள் கடைப்பிடிக்கவில்லை.

### விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 225 சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
நீ. நிலவரசி
அந்தோனியார்புரம்

**இரண்டாம் பரிசு:**
A. அபிஷா
புதுக்கமம்

**மூன்றாம் பரிசு:**
N. நிஷான்
மடுமாதா சிறிய குருமடம்
மன்னார்

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 103 பேர். சரியான விடைகளை எழுதியோர் 101 பேர்.**

01. M. லியன் செவோன் பீரிஸ் - பள்ளிமுனை
02. J.N. சுவிற்சலா - பறப்பாங்கண்டல்
03. சி. நோயல் கிறிஸ்ரி றோச் - பள்ளிமுனை
04. ஆ. றூபன்ஜீசஸ் டலிமா - வங்காலை
05. நயோமி அல்போன்சஸ் - மன்னார்
06. றூ.யூட்ஸ்சிக்கா டலிமா - வங்காலை
07. றூ. மேரி பிறக்சி டயஸ் - வங்காலை
08. றூ. றிஸ்மா டலிமா - வங்காலை
09. A. அபிசா புதுக்கமம் - உயிலங்குளம்.
10. அ. சாள்ஸ் மொறாய்ஸ் - முத்தரிப்புத்துறை
11. D. மரிய பிறீனா - அடம்பன்
12. ச. டவ்ஷன் - நானாட்டான்
13. நி. ஜனுஸ்கா - சின்னப்பண்டிவிரிச்சான்
14. சா. டெய்சி லியோன் - முத்தரிப்புத்துறை
15. திரு. சி. வின்சன் யோட்ஸ் - சின்னப்பண்டிவிரிச்சான்
16. ஸ். இளநிலா - சின்னப்பண்டிவிரிச்சான்
17. அ. கவியாழினி - சின்னப்பண்டிவிரிச்சான்
18. K.R. கலிஸ்ரஸ் - சிதம்பரபுரம்
19. K. கல்பனா - சிதம்பரபுரம்
20. I. இருதயமேரி - சிதம்பரபுரம்
21. K. துளசிகா - பாண்டியன்குளம்
22. N. மடோனா - வவுனியா
23. அல்போன்ஸ் நிதர்சன் - வவுனியா
24. சி. ஜெயசீலன் - தலைமன்னார்
25. றொ. றொசேறியன் - கத்தான்குளம்
26. றொ. அஸ்விகன் - கத்தான்குளம்
27. இ. பிறிங்சங்சய் - பெரிய கோமரசன் குளம்
28. யே. தர்சினி - திருநவற்குளம்
29. பி.மேரி அசெம்ரா - பெரிய கோமரசன் குளம்
30. அகுஸ்தீன் இசக்கியேல் - யோசவாஸ் நகர்
31. ஜெகன் ஜெபிபோன் - கல்நாட்டி முருங்கன்
32. வயலட் யோண் - யாழ்ப்பாணம்
33. பி. டக்ஷத் பீரிஸ் - முத்தரிப்புத்துறை
34. நி. கெப்றோன் குரூஸ் - முத்தரிப்புத்துறை
35. வேந்தக்கோன் சியாமளா - அளவாக்கை
36. T. தினோசன் லெம்பட் - மாவிலங்கேணி
37. I. சயன்சிக்கா லெம்பட் - இலுப்பைக்குளம்
38. S. யுனிஸ்ரா லெம்பட் - வங்காலை
39. T. சயுறன் லெம்பேட் உயிலங்குளம்
40. R. சறோஜினி - யோசவாஸ்நகர்
41. T. தக்ஷிதா யோசவாஸ் நகர்
42. ச. நிஷாளினி - சூரியகட்டைக்காடு
43. ச. டிலுக்சன் - சூரியகட்டைக்காடு
44. A. பெபிஷா - புதுக்கமம்
45. அ. ஜஸ்மின் ஷறோன் - ஆவணம்
46. அருட்செல்வன் யனிசன் - சாம்பன் கட்டைக்காடு
47. அருட்செல்வன் சுபானு - சாம்பன் கட்டைக்காடு
48. V.அந்தோனி ஸ்ரெலா - மடுறோட்
49. ச. மரிய கொண்சிக்கா குரூஸ் சவேரியார் புரம்
50. யோ. ஆன் நிரன்சியா சாம்பன் கட்டைக்காடு



# தைப் பொங்கல்



உழவர்கள் மழையின் உதவியால் ஆடி மாதம் முழுவதும் உழைத்துச் சேர்த்த நெல்லை மார்கழியில் வீட்டிற்கு கொண்டு வந்து தமது உழைப்பின் பயனை நுகரத் தொடங்கும் நாளே தைப்பொங்கல் ஆகும். தைப்பொங்கல் என்பது தமிழர்களால் சிறப்பாக கொண்டாடப்படும் ஒரு தனிப் பெருவிழாவாகும். இத் திருநாளானது தமிழர் திருநாளாக இலங்கை, தமிழ்நாடு, மலேசியா, சிங்கப்பூர், ஐரோப்பிய நாடுகள், வடஅமெரிக்கா, தென்ஆபிரிக்கா மற்றும் மொரியஸ் போன்ற தமிழர் வாழும் அனைத்து நாடுகளிலும் கொண்டாடப்படுகின்றது. உழைக்கும் மக்கள் இயற்கைத் தெய்வமாக கருதும் சூரியனிற்கும் மற்ற உயிர்களிற்கும் நன்றி தெரிவிக்கும் ஒரு பண்டிகைதான் பொங்கல் திருநாள் ஆடி மாதத்தில் தேடி விதைத்த பயிர்களின் விளைச்சலை அறுவடை செய்து பயன் அடையும் பருவமே தை மாதம் ஆகும். அந்த அறுவடையில் கிடைத்த நெல்லின் புத்தரிசியைச் சக்கரை, பால், நெய் சேர்த்து புதுப்பானையில் இட்டுப் புதிய அடுப்பில் கொதிக்க வைத்துப் பொங்கல் சோறாக்கிச் சூரியனுக்கும் மாட்டுக்கும் படைத்து உண்டு மகிழும் விழாவே பொங்கல் விழாவாகும்.



நீர்வளம் கொண்ட இடங்களில் மூன்று வேளாண்மை நடக்கும் நீர் வளமில்லாத இடங்களில் மழை நீர்த் தேக்கத்தால் ஒரு வேளாண்மை தான் விளைவிக்க முடியும். ஆகவே மார்கழி அல்லது தை மாத அறுவடையே நாடெங்கும் நிகழும். அறுவடை முடிந்து பெற்ற அரிசி, கரும்பு, மஞ்சள், பனங்கிழங்கு, நம்முடைய கொடிவழிக் காய்கறிகள், (குறிப்பாக அவரை புடலை கத்தரி வாழை) சக்கரைவள்ளிக் கிழங்கு, கருணைக்கிழங்கு போன்றவையே படையலாக வைக்கப்படும். பொங்கு என்ற சொல் கொதித்தல், மிகுதல், சமைத்தல், செழித்தல் எனப் பொருள்படும். பொங்கல் விழாவை தமிழர் எனும் இனக்குழு தொடர்பான விழா என்று தெளிவாக உணர முடியும். மேலும் பொங்கல் விழாவை தமிழர் தேசிய விழாவாகவும் கருதுகின்றனர்.

பொங்கல் விழாவைத் தமிழர்கள் சமயங்களைக் கடந்து கொண்டாடும் வழக்கமும் உள்ளது. கிறிஸ்தவர்கள் தங்கள் தேவாலயங்களில் கிராம மக்கள் அனைவரும் இணைந்து கரும்புடன் பொங்கல் வைத்து திருப்பலிகள் நடாத்தி கொண்டாடுகிறார்கள். தமிழ் இஸ்லாமிய குடும்பங்களில் பொங்கலன்று சக்கரைப் பொங்கலுடன் 16 வகை காய்கறிகள் சமைத்து சிறப்பு விருந்தாக குடும்பத்தாருடன் உண்பதும் பொங்கல் நாளன்று வீட்டில் அசைவ உணவுகளைத் தவிர்க்கும் வழக்கமும் உள்ளது. சங்க காலத்தில் அறுவடை காலத்தில் நல்ல மழை பெய்யவும் நாடு செழிக்கவும் பெண்கள் விரதத்தை கடைப்பிடித்தார்கள். தை முதல் நாளில் இந்த விரதத்தை முடிப்பார்கள். பொங்கல் விழா நான்கு நாள் கொண்டாட்டம் ஆகும். போகி பண்டிகை, தை பொங்கல், மாட்டுப்பொங்கல், காணும் பொங்கல் என்பவையே அவை ஆகும்.

போகி பண்டிகை என்பது மார்கழி மாதம் முடிந்து தை மாதம் ஆரம்பிக்கும் போது பழையன கழிந்து புதியது புகும் நாளாக கொண்டாடப்படுகின்றது. மாட்டுப் பொங்கல் என்பது தை பொங்கல் நாளின் மறுநாள் தமிழர்களால் கொண்டாடப்படும் ஒரு பண்டிகை ஆகும். இது பட்டிப்பொங்கல் அல்லது மாட்டுப்பொங்கல் எனவும் அழைக்கப்படுகின்றது. மக்களின் வாழ்வில் ஒன்றிய பசுவிற்கு நன்றி தெரிவிப்பதாகவும் குறிப்பாக இந்துக்கள் பசுக்களில் எல்லா தேவர்களும் இருப்பதாக நம்புவதனாலும் பசுக்களை வணங்கி வழிபடும் நாளாக கொண்டாடப்படுகின்றது.

இறுதியாக, காணும் பொங்கல் என்பது பொங்கல் பொண்டாட்டங்களில் நான்காவது நாள் இடம்பெறும் விழா ஆகும். இதனைக் கன்னிப்பொங்கல் அல்லது காணும் பண்டிகை என்று அழைப்பர். இப்பண்டிகையின் நிகழ்வுகளில் உற்றார், உறவினர்கள், நண்பர்களைக் காணுதல் மற்றும் பெரியோர் ஆசி வழங்குதல் என்பன அடங்கும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், பட்டிமன்றம், உறி அடித்தல், வழுக்கு மரம் ஏறுதல் போன்ற வீர சாகசப் போட்டிகள் உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெறும். இது பெண்களுக்கு முக்கியமான பண்டிகை ஆகும். பொங்கல் பானை வைக்கும் போது அதில் புது மஞ்சள் கொத்தினை கட்டி அதனை எடுத்து முதிய தீர்க்க சுமங்கலிகள் ஐவர் கையில் கொடுத்து ஆசி பெற்று அதனை கல்லில் இழைத்து பாதத்தில் முகத்தில் பூசிக்கொள்வார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**எம்மோடு தொடர்புகொள்ளுங்கள்**
தொலைபேசி : 023 – 2250789. 076–3801841. 0773517707
மின்னஞ்சல் : mannamnrc@gmail.com இணையத் தளம் : Mannar.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 1948 06 10



இறப்பு 2021 01 22

### முத்துக்கருப்பன் கனகமணி
(சாவற்கட்டு, மன்னார்)

கண்முன் தோன்றிய கனிவான உறவொன்று
இன்று காணாமல் போனதெங்கே நீ காட்டிய அன்பு
வழியில் இன்று நாங்கள் கால் பதித்து
நடக்கின்றோம்...
உன் புன்சிரிப்பான பூமுகம், பூமியில் இனி வருமோ
நாங்கள் தவிக்கின்றோம் தவிப்பை யார் துடைப்பார்...
காலம் ஏன் எம்முடன் உன்னை காதநூரம் கொண்டு
செல்லவில்லை, பாதி வழியில் விட்டு சென்றதனால்
பாவிகள் நாம் பரிதவித்து துடிக்கின்றோம்,
சோகம் நிலையில்லை சொர்க்கம் உனக்காக...

பிரிவால் துயருறும்
பாசமிகு பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார் உறவினர்கள்.

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 1945 05 13



விண்ணில் 2012 02 12

### அமரர். சவிரி பறுநாந்து [செல்வம்]
(மாந்தை)

மறைந்துவிட்ட உங்கள் உறவின் நீங்காத நினைவுகள்!
உதிர்ந்துவிட்ட உங்கள் நினவைின் உலராத வாசனை!
நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும்
ஞானச் செருக்கும் அவனியில் எவருக்கும் அஞ்சாது
அன்பாலும், பண்பாலும் அனைவரையும் அரவணைத்த எம்
அன்பு தெய்வமே! உங்களுக்கு நிகர் எங்களுக்கு யார்?
மீண்டும் ஒருமுறை தங்கள் திருமுகம் காண எங்கள் உள்ளம்
பரிதவிக்கின்றது உத்தமரே! நீங்கள் இல்லையென்ற எண்ணம்
எமக்கில்லை, வாழ்வீர்கள் எம்மனதில் நாம் வாழும் காலம்
வரை எம்மை விட்டுப் பிரிந்த எம் தந்தையே! ஓயாமல்
வேண்டுகின்றோம் இறைவனிடம் ஒருநாள் உம்மை தரிசிக்க.

உம் நினைவுகளை சுமந்த
குடும்பத்தினர்

### 1ம் பக்கத் தொடர்ச்சி
### மன்னார் மறைமாவட்ட ஆயர்...

ஆனால் பெரிய இடவசதியுடன் கூடிய ஓர் வைத்தியசாலை அமைய வேண்டும் என்பது எமது ஆயருடைய ஏக்கமாக இருந்து வந்தது. அதற்காக ஆயர் அவர்கள் குருக்களுடன் இணைந்து முன் நின்று உழைத்து தற்போது தலைமன்னார் பிரதான வீதியிலே அமைந்த ஆயருக்குரிய காணியிலே வைத்தியசாலை ஒன்று கட்டப்படுவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு ஆயருடைய 49வது குருத்துவ ஆண்டு நிறைவு நாளான 06.01.2022 அன்று காலை 10 மணியளவிலே புதிய மடுமாதா வைத்தியசாலைக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இந்நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட ஆயர்தந்தை அவர்களும், மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் பெரும் மதிப்புக்குரிய அருட்பணி P.கிறிஸ்துநாயகம் அடிகளார் அவர்களும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஸ்ரான்லி டிமெல் அம்மா அவர்களும், வைத்திய அதிகாரிகள் தொழில்நுட்ப உதவியாளர்கள், கட்டடக் கலைஞர்கள், அருட்பணியாளர்கள், அருட்சகோதர சகோதரிகள், வங்கி முகாமையாளர்கள் இன்னும் பல பிரமுகர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

சிறப்பான முறையிலே இலங்கை தேசிய கறிற்றாஸ் நிறுவன இயக்குனரும் சிலாப கறிற்றாஸ் இயக்குனரும் எம்முடைய மன்னார் மறைமாவட்ட வாழ்வுதய இயக்குனர் அருட்பணி. அன்ரன் அடிகளார் அவர்களும் இணைந்து இந்நிகழ்விலே கலந்துக் கொண்டது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்விற்குரிய ஆரம்ப ஆயத்தங்களையும் அதனுடைய செயற் திட்டங்களையும் ஆயருடைய தலைமையின் கீழ் வாழ்வுதய இயக்குனர் அருட்பணி. அன்ரன் அடிகளார் சிறப்பாக வழிநடத்தி இருந்தார். ●

### 3ம் பக்கத் தொடர்ச்சி
### புனித சூசையப்பரின் 150வது யூபிலி...

புனிதரின் 150 வது யூபிலி ஆண்டினை நினைவு கூறும் முகமாக குடும்பங்கள் அனைத்திற்கும் புனிதரின் படமானது ஆசீர்வதித்து வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் அருட்சகோதரி ச. மேரி ஜென்சியா (இறை பராமரிப்புச்சபை) என்பவரும் கலந்து கொண்டு நிகழ்வினை சிறப்பித்தமை குறிபிடத்தக்கது. இந்நிகழ்வானது சிறப்பாக இடம் பெற ஒத்துழைப்பு வழங்கிய அன்பிய பணியாளர்கள், மற்றும் அனைத்து பணிக்குழு உறுப்பினர்கள் தாமாக முன்வந்து பொறுப்புக்களை எடுத்து சிறப்பாக நிறைவேற்றியவர்கள், ஊர் மக்கள் அனைவருக்கும் புனிதரின் இறையசீர் நிறைவாக கிடைக்க வேண்டுவதோடு சிறப்பான நன்றிகளையும் தெரிவித்து நிற்கின்றோம். ●


## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*


### 2ம் பக்கத் தொடர்ச்சி
### மன்னார் மறைமாவட்ட பாப்பிறை...

அன்பார்ந்த பிள்ளைகளே! இவ்வுலக பொழுதுபோக்குகளில் உங்களை ஈடுபடுத்தாது நல்லொழுக்கம், கல்வி, ஆன்மீகத்தில் இறைவனை கண்டு மகிழ்ச்சியாய் இருங்கள் . மிக முக்கியமாக திருப்பாலத்துவ சபையில் இணைந்து கிறிஸ்துவை அறிந்து அவரை நம்பி அவரை வாழ்வாக்கி பிறருக்கு கொடுக்க நீங்கள் அழைக்கப்படுகிறீர்கள் . இச் சபையானது உங்களை மறையைப் பரப்ப, ஆன்மாக்களை தேடிச்செல்ல, மற்றும் செபம், சிறு சிறு தியாகங்களின் ஊடாக உலகம் முழுவதும் இருக்கும் உங்கள் சக வயதுடைய சிறுவர்களுக்கு உதவவும் உங்களை அழைக்கின்றது, கற்பிக்கின்றது . இதன் மூலமாகவே நீங்கள் இயேசு ஆண்டவரை கண்டு கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். எதிர்வரும் 30ஆம் திகதி திருப்பாலத்துவ சபை தினத்தை சிறப்பாக அனுசரித்து கொண்டாடுங்கள் .

உலகெங்கும் உள்ள அனைத்து சிறுவர்களுக்காகவும் விசேட விதமாக மன்றாடுங்கள். அத்தோடு உங்களிடம் உள்ளதை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள நீங்கள் அழைக்கப்பட்டு இருக்கிறீர்கள். அன்றைய நாளில் உங்களுடைய காணிக்கைகளை திருப்பலி வேளையிலேயே செலுத்தி பாப்பிறை மறைபரப்பு சபைகள் ஊடாக முன்னெடுக்கப்படும் பணிகளுக்கு உங்கள் பங்களிப்பை செய்யுங்கள். ●

### 3ம் பக்கத் தொடர்ச்சி
### கலையருவி உள்ளக வீதி திறப்பு...

இந் நிகழ்வுக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு ஆசி வழங்கினார். சிறப்பு விருந்தினராக மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் பெரும் மதிப்புக்குரிய அருட்பணி P.கிறிஸ்துநாயகம் அடிகளார் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கி வாழ்த்தினார்.

தொடர்ந்து ஆயரின் பதில் குரு மதிப்பிற்குரிய அருட்பணி S.எமிலியானுஸ்பிள்ளை அடிகளாரும், பள்ளிமுனை பங்குதந்தை அருட்பணி மரியதாசன் சீமான் அடிகளாரும், யோசவ்வாஸ் நகர் பங்குதந்தை அருட்பணி இராசநாயகம் அடிகளாரும், கலந்து சிறப்பித்தார்கள். உள்ளக வீதியானது ஆயரினால் ஆசீர்வதிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. மற்றும் கரோல் பாடல்கள் இசைக்கப்பட்டு வெற்றி பெற்றவர்டகளுக்கான சான்றிதழ்களும் விருதுகளும் வழங்கப்பட்டதுடன் புத்தாக்கப் போட்டிக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. மேலும் கடந்த வருடம் கலாபூஷண விருது பெற்ற திரு. டொண்பொஸ்கோ அவர்களிற்கும் ஆயர் அவர்களினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டு விருதும் வழங்கப்பட்டது. இறுதியாக மதிப்பிற்குரிய மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களினால் கலையருவி இயக்குனர் அருட்பணி. ம.செல்வநாதன் பீரிஸ் அடிகளிடம் திருப்பாடுகளின் காட்சி ஏடு அங்குரார்ப்பணமும் செய்யப்பட்டு நிகழ்வானது இனிதே நிறைவுபெற்றது. ●

### 3ம் பக்கத் தொடர்ச்சி
### வவுனியா இறம்பைக்குளம் மகளிர்...

தொடர்ந்து ஆசி செய்தியினை வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயப் பங்குத்தந்தையும், ஆயரின் சிறப்புப் பணி முதன்மைக்குருவும், மடு மறைக்கோட்ட முதல்வருமான அருட்பணி S.K.தேவராஜா அடிகளாரினாலும், குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலய பிரதமகுரு சிவஸ்ஸ்ரீ.மு.க.கந்த கணேசதாஸக் குருக்கள் ஆகியோரினாலும் ஆசிசெய்தி வழங்கப்பட்டது. தொடர்ந்து தலைமையுரையினை பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி மரியடெய்சி செபமாலை அவர்களினால் நிகழ்த்தப்பட்டது. மேலும் குழு நடனமும். வாழ்த்துச் செய்தி. திரு.P.யூஜின் ஆனந்தராஜா அவர்கலினாலும். பிரதம விருந்தினர் ஆயர் தந்தையைப்பற்றிய அறிமுக உரையினை சிரேஸ்ட மாணவத்தலைவி செல்வி.S.சந்தோஷிகா அவர்களும். பிரதம அதிபர் அறிக்கையினை பிரதி அதிபர் திருமதி. M.C. சகாயநாதன் அவர்களும். தொடர் நிகழ்வாக திருமதி. வரதினி சொரூபன் ஆசிரியை அவர்களின் நெறியாழ்கையில் கிராமிய கதம்ப நடனமும். பரிசில் வழங்கும் நிகழ்வுகளும் நடைபெற்றன. மேலும் மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய மேதகு Dr.பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையினால் பிரதம அதிதி உரை வழங்கப்பட்டது. தொடர்ந்து ஆயர் தந்தையினை கௌரவிக்கும் முகமாக பொன்னாடை அணிவித்து, நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. மேலும் அதிபர் அருட்சகோதரி மரியடெய்சி செபமாலை அவர்களையும் பாராட்டி கௌரவிக்கப்பட்டது. தொடர்ந்து பரிசில் வழங்கல் வைபம், சிறுமிகளின் நடனமும் நடைபெற்று வாழ்த்துரை நிகழ்த்தப்பட்டது, வாழ்த்துரையினை பழைய மாணவ சங்கச் செயலாளர் Dr.J.சிவநந்தினி அவர்களினாலும், நன்றியுரையினை பரிசளிப்புக்குழு செயலாளர் திருமதி.து.அரவிந்தன் அவர்களும் நிகழ்த்தி நிறைவுப் பாடலுடன் நிகழ்வுகள் அனைத்தும் சிறப்பாக நடைபெற்று நிறைவடைந்தன. நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி சிறப்புற அமைய காரணகர்த்தாவான பாடசாலை சமூகத்திற்கு வவுனியா கத்தோலிக்க ஊடகத்தின் சார்பாக நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்து நிற்கின்றோம். ●

### 3ம் பக்கத் தொடர்ச்சி
### மன்னார் மறைமாவட்ட ஆயர்...

29.12.2021 அன்று மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி பி.ல. இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் வருகை தந்து வைபரீதியாகவும் நாட்டுக்கூத்து பாடல்களுடன் பங்குதந்தை அவர்களாலும் பங்குமக்களாலும் வரவேற்கப்பட்டு புதிய ஆலயம் திறந்து வைக்கப்பட்டு அபிஷேகவிழா சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

பின்னார் சிறிய நிகழ்வின் மூலம் வரவேற்கப்பட்டு ஆயர அவர்களும் பெரும் மதிப்புக்குரிய குருமுதல்வர் அவர்களுக்கும் பொன்னாடை அணிவித்து நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். வருகை தந்திருந்த அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள் அழைக்கப்பட்ட பிரதிநிதிகள் அனைவருக்கும் நினைவுச் சின்னம் வழங்கப்பட்டு விருந்துபசாரமும் இடம்பெற்றது.

புனித அந்தோனியாரின் புதிய ஆலயகட்டுமானப் பணிகள் நிறைவு செய்ய பேருதவி புரிந்த எல்லாம் வல்ல இறைவனுக்கும் முன்னை நாள் மேதகு ஆயர்கள் தற்போதைய ஆயர் பேரருட்கலாநிதி F.L. இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களுக்கும் முன்னைநாள் குருமுதல்வர் பெரும் மதிப்புக்குரிய அருட்பணி விக்டர் சோசை இந்நாள் குருமுதல்வர் பெரும் மதிப்பிற்குரிய அருட்பணி P. கிறிஸ்துநாயகம் . அனைத்து குருக்கள், துறவிகளுக்கும் செப உதவி, நிதியுதவி சரீர உதவிகள் என பல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய எல்லோருக்கும் பங்குத்தந்தை அவர்களினதும் பங்கு மக்களினதும் மனம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்தக் கொள்ளுகின்றோம்.

புனிதரின் பரிந்தரையும் இறையசீரும் நிறைவாகக் கிடைக்க வேண்டுகின்றோம். ●

### 4ம் பக்கத் தொடர்ச்சி
### தமிழ்நேசன் அடிகளாரின் மன்னார்...

பேராசிரியர் சி. மௌனகுரு அவர்கள் இந்நூலுக்கு அணிந்துரை எழுதியுள்ளார்.

வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் வெளியீடாக வந்துள்ள இந்நூலின் வெளியீட்டு விழாவுக்கு வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி. சுஜீவா சிவதாஸ் தலைமை தாங்கினார். மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

வடக்கு மாகாண முன்னாள் மேலதிக செயலாளர் திரு. அ. பத்திநாதன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். ஆய்வாளரும் முன்னாள் கல்வி அதிகாரியுமான திரு, திரு. எஸ். டேவிட் அவர்கள் நூல் ஆய்வுரையை நிகழ்த்தினார். இதன்போது ‘சந்தொம்மையார் வாசாப்பு’, ‘ஞானசவுந்தரி நாடகம்’ ஆகிய இரண்டு கூத்து நாடக நூல்களும் இரண்டாம் பதிப்பாக வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ●


**தயவுசெய்து அவதானியுங்கள்** நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம். கட்டணம்: கறுப்பு வெள்ளை 4,500/=, கலர் 7,500/=


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

# நினைவு கூருகின்றோம்..!

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 13 07 2001



உதிர்வு 07 12 2021

**திரு. அ. கென்றி கமிலஸ்**

பள்ளிவாசல் வீதி, கீரி, மன்னார்

1. கருவறையில் திட்டிழுத்து உருகிநிற்கும் அம்மாவையும்
கனத்த இதயத்தோடு கல்லாயிருக்கும் அப்பாவையும்
கதறியழும் தங்கையையும் கலங்கிநிற்கும் தம்பியையும்
காக்க வைத்துவிட்டு காலம் வருமுன்னே எங்கே பறந்துசென்றாய்

2. பேரனை இழந்து பேரிடியில் நிற்கும் அப்பம்மாவை அம்மம்மாவை
பேர் சொல்லியழும் இரவரை உறவுகளை
வேரோடு சாய்ந்துவிட்ட உன் கனவுகளை - மீண்டும்
பாரடா ஒருதடவை நீயில்லா வீட்டின் இடைவெளியை

3. சென் சேவியரின் செல்லப் பிள்ளையாக
அதிபர் ஆசான்களின் அன்பு மாணவனாக
பள்ளித் தோழர்களின் பகிடிக் கதைகளோடு, படிப்பையும் கவனித்து
பல்கலைக்கழக நுழைவாயில் உனக்காக காத்திருக்க
பரமன் வீட்டில் நுழைந்திட்டாய் பக்குவமாக

4. மணிக்கணக்கில் கதைபேசி மகிழ்ந்திருந்த நண்பர்கூட்டம்
மனச்சிறைக்குள் உனைப்பூட்டி மனம்நொந்து அழுகின்றனர்
தோள்களிலே உனைச் சுமந்து சென்ற
தோழர்களின் கண்ணெதிரே தோன்றுவாயா மறுபடியும்

5. உணவை வெறுத்து, உறக்கம் மறுத்து - வைத்தியசாலையில்
உன்னோடு கூடவே தூங்கிருந்த பெரியப்பா சித்தப்பா மாமாமார்
உணவூட்டிய சித்திமார், அத்தைமாரின்
உள்ளக்குமுறல் ஏதும் கேளாமல் - ஏனடா
உறங்குகின்றாய் அமைதியாக

6. உயிரினை மீட்டெடுக்க வைத்தியரும் தாதியரும் ஊழியரும்
ஓயாமல் உன்பெயரை உச்சரித்து உச்சரித்து
போராடிப் போராடி முயன்றுவர - நீ
பாராமற் சென்றதும் ஏன் பாதியிலே!

7. அருட்தந்தையர்கள் அருட்சகோதர சகோதரிகளின் ஆறுதல் வார்த்தை என்ன!
ஆழமான பிரார்த்தனை என்ன! அன்புள்ளங்களின் அயராத பிரயத்தனங்கள் என்ன
அத்தனையும் மூட்டைகட்டி எங்கேயடா கொண்டு சென்றாய்

8. ஆடலும் பாடலும் கவிதையும் கற்பனையும் அசராத விளையாட்டும்
அச்சப்போன்ற மிமிக்கிரியும் நையாண்டி நோக்கும், ஜாலாப் பேச்சும்
இத்தனையும் நொடிப்பொழுதில் நொறுங்கிவிட
ஆண்டவன் பாதமதில் அமர்ந்ததும் ஏன் அமரராக

9. அம்மா நான் அழகா என்று அடிக்கடி கேட்பாய் என்னிடம்
சும்மா நான் சொல்லவில்லை - உன் அன்பு அழகு
கண்ணீரே அறியாத கண்அழகு, இமையழகு முள் போன்ற முடியழகு,
கள்ளமில்லா, சிரிப்பழகு, கறுப்பான உடலழகு, கறைபடாத மனம் அழகு - எதிலும்
குறைவிடாத ஆண்டவன் குறுகிய காலத்தில்
குறிபார்த்துத் தூக்கியது அழகா? குமுறுகின்றேன் மௌனமாய்
சத்தமில்லா இடம் தேடுகின்றேன் - கத்தியழ

10. சுயநலத்தோடு கேட்கின்றேன் - உன்னிடம்
சுகநலத்துக்காக ஏங்கும் ஒவ்வொரு உயிருக்கும் - உன்
சுகத்துக்காக நாம் கண்ணீரோடு கலந்துதந்த செபங்களை
சுகமாகத் திருப்பித் தந்துவிடு உன் இயேசுவிடம் கேட்டு

11. கயிறுழுவைப் போட்டி போல - பிள்ளையை
எனக்குத் தா என நானும் - இல்லை எனக்குத்தான் என அவரும்
உறுதியோடு இழுபட்டு இழுபட்டு - இறுதியாக வெற்றி கண்டவர் அவர்
தோற்றுவிட்டேன் நான் - எனத் தோன்றவில்லை எனக்கு
ஏழையில் உன்தாய் தேற்றுவதை விட உன் அன்பர் இயேசு உனைத் தேற்றுவார்
இதை ஏற்றுக்கொள்கிறேன் நன்றியோடு நம்பிக்கையோடு

அன்புடன் அம்மா கிறிஸ்ரெலா அமிர்தநாதன் குடும்பத்தினர்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1956 11 29



மறைவு 2021 02 06

**திரு. மரியதாசன் கிறிஸ்துதாசன் பறுனாந்து**

(ஓய்வுபெற்ற கிராம சேவகர்)

(8ம் வட்டாரம், பேசாலை)

எங்களை விட்டு மறைந்து போனாலும்
என்றும் மறந்து போகாத அன்பை காட்டிச் சென்றீரே!
நீங்கள் வாழ்ந்த நாட்களை அழியாத நினைவாக
எம்மில் விட்டுச் சென்ற ஐயா!
ஓராண்டு ஓடி மறைந்தாலும்
உம் நினைவுகள் எம்முடன் என்றுமே வாழும் ஐயா
எத்தனையோ துன்பங்கள் அகத்தே சுமந்தீர்!
எத்தனை வலி இருந்தும் முகத்தில் புன்னகையை
மட்டுமே விதைத்தீர்!
இழந்து விட்டோம் ஐயா என்ற உறவை
இனி எங்கே தேடுவோம் நாங்கள் உம்மை

நினைவுகள் தாங்கி நிற்கும்
மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள்
மற்றும் உற்றார், உறவினர்,

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்விளங்க 1953 06 21



விண்துலங்க 2021 01 20

**திருமதி. மரியதாஸ் சவிரியம்மா (மகேஸ்)**

உங்களைப் பிரிந்து ஆண்டொன்று நகர்ந்து
நீங்கள் இல்லாத இந்த இடைவெளியோ
மிகப்பெரியது எல்லோரையும் அன்பு செய்து
வாழ்ந்தீர்கள் உங்கள் இல்லம் வருகின்ற
எல்லோரையும் ஒரே விதமாய் உபசரித்தீர்கள்
நீங்கள் வாழ்ந்த அழகான வாழ்க்கையின்
சம்பாவனை நிச்சயம் உங்களுக்குக் கிடைக்கும்
உங்கள் அன்பில் இணைந்த நன்றியோடு
அமைதியில் நீங்கள் இளைப்பாற மன்றாடி
நிற்கின்றோம்.

**இயேசுவின் இரத்தம் ஜெயம்**

பிரிவில் துயருறும்: அன்புக்கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
மைத்துனர்கள், உற்றார் உறவினர்கள்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 1937 02 04



விண்ணில் 2021 01 19

**அந்தோனிப்பிள்ளை ஜெயசீலி**

(இத்திக்கண்டல், அடம்பன்)

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவன், இறப்பினும் வாழ்வார்" (யோவா 11:25)


எங்கள் அன்பு தாயே, ஆண்டொன்று மறைந்தாலும்
ஆறிடுமோ! எங்கள் துயரம் அம்மா நிழல் தந்து
எம்மை வளர்த்து நிலைத்து மண்ணில் வாழவைத்து
உறுதியுடன் எம்மைக் காத்த உத்தமியே! எங்கள்
அன்பு தெய்வமே! உங்கள் பிரிவால் துடிக்கின்றோம்.
உங்களை நினைத்து நித்தம் - கண்ணீர்
வடிக்கின்றோம் துன்பத்தை நீங்கள் சுமந்தாலும்
எங்களுக்கு இன்பத்தை ஊட்டி வளர்த்தீர்கள் (அம்மா)
மண்ணிலே மீண்டும் வந்து பிறவாயோ! அம்மா
மறுபடியும் எம்மோடு கலந்து வாழ்வாயோ! அம்மா

பிரிவாற்றாமையால் துயருறும் அன்பு பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை, அருட்சகோ. ஞானசீலி, அருட்தந்தை. ஞானப்பிரகாசம்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" யோவா 11:25

பிறப்பு 1951 03 16



இறப்பு 2021 01 21

**நீக்கிலாப்பிள்ளை பொன்சேக்கா**

ஓய்வுபெற்ற நடத்துனர் (இ.போ.ச) நடத்துனர்

(மூர்வீதி, மன்னார்.)

ஆண்டு ஒன்று கடந்த போதும் அன்பு முகமது இன்னும்
எம்மைவிட்டு நீங்கவில்லை... அன்பின் இருப்பிடமாய் பாசத்தின்
மகுடமாய் வாழ்ந்த தந்தையே எம்மோடு நீங்கள் இருந்தது
அழகானதொரு சோலை வனம்... இறைவன் பால் நீங்கள் கொண்ட
ஆழமான நம்பிக்கையும் பக்தியும். ஆண்டவரின் வலப்புறம்
இருக்கும் தூதரைப் போல் எம்மை எப்போதும் பாதுகாக்க!
வேண்டுகின்றோம். உடலால் மட்டும் எம்மை விட்டுப் பிரிந்த
நீங்கள் எம் மனங்களில் இன்னும் உயிரோடு வாழ்கிறீர்கள்
எம் எண்ணத்தில் என்றும் வாழும் உங்களது ஆன்மா நித்திய
இளைப்பாற்ற தினமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1968 01 08



உதிர்வு 2021 02 04

**திரு. தொம்மிறேல் சுகுணசேயன்**

(முருங்கன் கமம், முருங்கன்)

"ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு ஆண்டவர் பார்வையில் மிக மதிப்பிற்குரியது" (தி.பா 116:15)

கலங்கி போனோம் அப்பா கண் இமைக்கும் பொழுதில் எம்மை
விட்டுப்போய் விட்டீர்களே அப்பா, உம்மோடு நாமிருந்தது அழகான
ஆனந்தமான காலம் அப்பா, உம் அன்பில் அரவணைப்பில்
உங்கள் கட்டுப்பாடான வளர்ப்பில் நாம் வாழ்ந்த அந்நாட்களை
மறக்க முடியவில்லையே. தேவை என்று கூறும்முன் எங்கள்
தேவைகளைச் செய்தீர்களே, ஆயிரம் உறவுகள் அருகில் இருந்தாலும்
அனாதை போல் உணர்கின்றோம். தேடினாலும் மீண்டும்
கிடைக்கப் போவதில்லையே, ஏங்கி நிற்கின்றோம்.
எம் அப்பாவிற்காய் உங்கள் ஆன்ம அமைதிக்காய்
இறைவனை வேண்டுகின்றோம்

பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பாசமிகு பிள்ளைகள்

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

"ஆண்டவரே உமது உறைவிடம் எத்துணை நேர்மையானது" (தி.பா 84:1)

பிறப்பு 1982 06 15



இறப்பு 2020 01 28

**திரு. யேசுராசா டொனால்ட் இன்பராஜ்**

(மாவிலங்கேணி, முருங்கன்)

நீ இல்லாத ஈராண்டுகள்...
இந்த இரண்டு ஆண்டுகள் வாழ்ந்த சாதனை
சாதாரணமானது இல்லை மகனே!
இவ்வுலக வாழ்வு ஒரு கூடாரம் அந்த நினைவு ஒன்றுதான்
தைரியம் தந்து கொண்டிருக்கிறது.
அன்போடு நீ அழைக்க ஒவ்வொரு அழைப்பின் நன்றியோடும்,
அமைதியில் நீ இளைப்பாற
உனக்காகப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

பிரிவின் துயரில்
அம்மா, சித்தி, சகோதரர்கள்,
மருமக்களோடு உன் மாமி

"மன்னா பத்திரிகை"
மன்னா அலுவலகம், கலையருவி,
இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2250789, 076-8801841
- mannamnrc@gmail.com - manna.lk - Mannar Catholic Media, Madhu Matha TV

"மன்னார் கத்தோலிக்க அச்சகம்"
கலையருவி, இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2223674, 077-5338732 / Email: mannarcatholicpress@gmail.com
சகல விதமான பதிப்பக வேலைகளும் நியாயமான விலையிலும்,
தரமான முறையிலும் அச்சிடப்படும்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு மன்னார் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org